

கடுமையாப் பயப்படுகினம் பாருங்கோ இவை. இப்ப கவலைப்பட்டு என்ன பயன்?


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 264 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 32, செவ்வாய்க்கிழமை 16.08.2016


## நாமல் மீண்டும் கைது



கொழும்பு, ஓக. 16

இரண்டாவது தடவையாக நேற்றுக் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்புத் தலைமை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நாமல் ராஜபக்சவைக் கொழும்பு தலைமை நீதிவான் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தியபோதே மேலதிக நீதிவான் லங்கா டி ஜயரத்ன விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில்

>> 23ஆம் பக்கம்

# ஆதாரங்களை திரட்டி சேர்க்கவே காணாமற்போனோரின் அலுவலகம்

## கொந்தளிக்கிறது கூட்டு எதிரணி



கொழும்பு, ஓகஸ்ட் 16

உத்தேச பொறுப்புக் கூறல் பொறி முறையின் கீழ் அமைக்கப்படவுள்ள நீதி மன்றத்திற்கு வழங்குவதற்கான ஆதாரங்களை, சாட்சியங்களைத் திரட்டுவதற்கான உள் நோக்கத்துடன்தான் மைத்திரி-ரணில் அரசு காணாமற் போனோரின் அலுவலகத்தை (காபோ அலுவலகம்) உருவாக்குகின்றது என்று நேற்றுத் தெரிவித்தது கூட்டு எதிரணி.

காணாமற்போனோரின் அலுவலகம் நடத்தும் விசாரணைகளின் கண்டறிவுகள் சிவில் மற்றும் குற்றப் பொறுப்புகளுக்கு உரியதல்ல என்று அரசு சொன்னாலும், பொறுப்புக்கூறலுக்குரிய பொறி முறை உருவாகும்போது அந்த விசாரணைகளுக்கான ஆதாரங்களாக இந்தக் கண்டறிவுகள் பயன்படுத்தப்படலாம் என்று தெரிவித்தார் முன்னாள் அமைச்சரும் கூட்டு எதிரணியின் அங்கத்தவருமான ஜி.எல்.பீரிஸ். அந்த அலு

>> 24ஆம் பக்கம்



## பொறுமையாய் இருங்கள்; கூட்டமைப்பிடம் அமெரிக்கா

யாழ்ப்பாணம், ஓக. 16

விடயங்கள் நடைபெறும். அதனைக் குழப்ப வேண்டாம். பொறுமையாக இருங்கள் என்று அமெரிக்கத் தூதுவர் கெசாப் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் தெரிவித்தார் எனக் கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், அமெரிக்கத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு யாழ். நகரில் 'ஜெட்விங்' விடுதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பினரால் அமெரிக்கத் தூதுவருக்குத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது. காணி விடுவிப்பில் தாமதம், பௌத்தமயமாக்கல், வாழ்வாதாரப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அமெரிக்கத் தூதுவருக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

>> 23ஆம் பக்கம்

## அரசு மீதான அதிருப்தி நேற்று அமெ. தூதரிடம் வடக்கில் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அப்துல் கசாப் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். தமிழ் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசினார். அவரது சந்திப்புக்களில் பெரும்பாலும் கொழும்பு அரசு மீதான கடும் அதிருப்தி அனைத்துத் தரப்பினராலும் பதிவு செய்யப்பட்டது. கூட்டாட்சி (சமஷ்டி) நோக்கிய அதிகாரப் பகிர்வே வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

தேர்தல் காலங்களில் இருந்து அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதும் நிறைவேற்றப்பட்டு வரும் சிலகூட மிக மந்த கதியிலேயே நகர்கின்றன என்றும் கொழும்பு மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

>> 25ஆம் பக்கம்

# இராணுவ முகாம் முன்பாக வீதியில் சமைத்து உண்டு தொடர் போராட்டம்

## 3ஆவது நாளாக காணி உரிமையாளர்கள் விடாப்பிடி

கிளிநொச்சி, ஓக. 16

காணிகளை விடுவிக்குமாறு கோரி நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட பரவிப்பாஞ்சான் மக்கள், பசியால் சோர்வடைந்து போகாமல் இராணுவ முகாம் முன்பாகச் சமைத்துச் சாப்பிட்டவாறு போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை காலை பரவிப்பாஞ்சான் பகுதிக்குச் சென்ற மக்கள், அங்குள்ள தமது காணிகளில் இருந்து இராணுவத்தை உடனடியாக வெளியேறுமாறும், மீள்குடியேற்றத்தை உறுதிப்படுத்துமாறும் கோரிப் போராட்டத்தில் குதித்தனர்.

கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் இரவு பகலாகத் தொடர்கின்றது. இராணுவ முகாமுக்கு முன்னால் இருந்து போராட்டத்தை மேற்கொள்ளும் தம்மை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சியாக இரவில் வழமையாக ஒளிர விடப்படும் மின்குமிழ் அணைக்

>> 25ஆம் பக்கம்



## பொருளாதார வலயத்தின் அமைவிடங்கள் ஆராய்வு

### அமைச்சர்கள் நேரடிப் பார்வை

யாழ்ப்பாணம், ஓக. 16

வவுனியா மதகுவைத்த குளத்திலும், முல்லைத் தீவு மாங்குளத்திலும் பொருளாதார வலயம் நிறுவப்படும் இடங்களை அமைச்சர்கள் நேரில் சென்று ஆராய்ந்தனர். பொருளாதார வலயம் நிறுவும் பணிகள் இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என்றும், அதற்கான உட்கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு கிராமிய பொருளாதார அமைச்சர் பி.ஹரிசன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் பி.ஹரிசன், அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையில் பொருளாதார வலயம் அமைக்கப்படுவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் பங்கேற்குமாறு வடக்கு முதலமைச்சருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் சார்பில் அவரது செயலாளர் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். இந்தக் கலந்துரையாடலில்

>> 24ஆம் பக்கம்

## பொலிஸ் அலுவலர் உட்பட இருவர் விபத்தில் இறப்பு

மன்னார், ஓக. 16

வேகமாக வந்த வாகனம் மோதியதில் போக்குவரத்துப் பொலிஸ் அலுவலர் உட்பட இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். பட்டா ரக வாகனம் ஒன்று ரயர் வெடித்ததால் கட்டுப்பாட்டை இழந்து வந்து அவர்களை மோதியது என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இந்த விபத்தில் மேலும் இருவர் படு

>> 23ஆம் பக்கம்

## வீட்டுத் திட்டத்துக்கான கொடுப்பனவு போதாது

கிளிநொச்சி, ஓக. 16

ஐரோப்பிய ஒன்றியத்தால் நிர்மாணிக்கப்படவுள்ள வீட்டுக்கான பெறுமதியை அதிகரிக்குமாறு மாவட்டச் செயலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக் கையை கவனத்தில் எடுத்துக் கொள்வதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் பதிலளித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரிகளுக்கும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு

>> 23ஆம் பக்கம்

## கைதி சாவு

>> 25ஆம் பக்கம்

## முதலமைச்சரின் தீர்மானம் நிறைவேறுமா?

யாழ்ப்பாணம், ஓக. 16

வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை கோரிய முதலமைச்சரின் தீர்மானத்தின் மீது இன்றைய தினம் விவாதம் நடைபெறவுள்ளது. முதலமைச்சரின் தீர்மானத்தை ஒரு பகுதி மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்த்துள்ளமையினால், கடந்த அமர் வில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வில்லை. இன்று இது தொடர்

>> 24ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செஞ்சோலைப் படுகொலை
# முல்லையிலும் நினைவேந்தல்

முல்லைத்தீவு, ஓக. 16
முல்லைத்தீவு–செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது இலங்கை விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 61 மாணவிகள் படுகொலை செய்யப்பட்ட கொடூரத்தின் 10 ஆவது ஆண்டு நினைவு முல்லைத்தீவில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.
இதன் அஞ்சலி நிகழ்வும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் நேற்று நண்பகல் 12.00 மணிக்குப் புதுக்குடியிருப்பு–வள்ளிபுனம் நடனமிட்டான் பிள்ளையார் ஆலயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.
2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக்காக செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் கூடியிருந்த மாணவிகள் மீது இலங்கை விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 61 மாணவிகள் உடல் சிதறி உயிரிழந்தனர்; 129 பேர் படுகாயமடைந்தனர்.
இந்தப் படுகொலையை நினைவு கூரும் நிகழ்வுகள் வடக்கின் பல இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இந்த நிலையில் நேற்று முல்லைத்தீவில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாணவிகளின் பெற்றோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-21-ரி7)

## நல்லாட்சி, நல்லிணக்கம் மந்த நிலையில்
# விரக்தியில் தமிழ் மக்கள்

*மடுப் பதியில் கூறினார் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை*

மன்னார், ஓக. 16
நல்லாட்சியும் நல்லிணக்கமும் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை தெரிகின்றது. இதனால் நாம் விரக்தி அடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.
இவ்வாறு மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்ஸிலி சுவாமிப்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்.
மன்னார் மருத மடுத் திருத்தலத்தின் ஆவணி மாதப் பெருவிழா நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதன் போது மறையுரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
எமது நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து நல்லாட்சியும், நல்லிணக்கமும், சமத்துவ சகோதரத்துவத்துடன் கூடிய உரிமை இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்த்தோம், எதிர்பார்த்திருக்கின்றோம்.
ஆனால் நாட்டின் நடைமுறைச் செயற்பாடுகளும், ஏற்படுகின்ற பிரச்சினைகளும், முரணான அறிக்கைகளும் எமக்கு நம்பிக்கை தருவதாக இல்லை. மாறாக நல்லாட்சியும் நல்லிணக்கமும் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமைதான் தெரிகின்றது.
இதனால் நாம் விரக்தி அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதனை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.
நாட்டின் அரசியல் தலைவர்கள் குறுகிய சுய நல அரசியல் இலாபங்களைக் கடந்து அனைத்து மக்களின் நலன்களிலும் அக்கறை செலுத்தி நீதியான நல்லிணக்கம் கொண்ட நல்லாட்சியை நிறுவ முன்வரவேண்டும்- என்றார். (த-5-56)

## பொலிஸாரின் பாரபட்சத்தால்
# வாழ்வாதாரம் கேள்விக்குறி

யாழ்ப்பாணம், ஓக. 16
பொலிஸாரின் பாரபட்சமான செயற்பாட்டால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று கல்லுடைக்கும் தொழிலாளர்கள் குற்றம் சுமத்தினர். தமது பிரச்சினைக்குத் தீர்வு தரவேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலருக்கும் மனுக் கொடுத்தனர்.
புத்தூர் மேற்கில் வசிக்கும் கல்லுடைக்கும் தொழிலாளர்களே மனுவைக் கையளித்தனர்.
வளலாயில் மக்களின் காணிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன. அவற்றில் உள்ள கற்களை அகற்றி அதனை உடைத்து வருகின்றோம். இவ்வாறு உடைக்கப்படும் கற்களை ஏற்றிச் செல்வதற்கு வரும் ஒப்பந்தகாரர்களின் வாகனங்களைப் பொலிஸார் மறிக்கின்றனர். எம்மிடருந்து கற்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை மாத்திரம் பொலிஸார் பிடிக்கின்றனர். இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.
உள்ளூரில் கல் கொள்வனவுத் தடைகளை திட்டமிட்டு ஏற்படுத்தி, தென்பகுதியிலிருந்து கற்களைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது. பொலிஸார் பாரபட்சமற்ற முறையில் செயற்பட வேண்டும். உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் எம்மிடம் உடைத்த கற்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் - என்று அவர்கள் கையளித்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள மாவட்டச் செயலர் நா.வேதநாயகனைப் பலமுறை தொடர்பு கொண்ட போதும் தொடர்பு கொள்ள முடியவில்லை. (ற-5-ரி4)





# மடு அன்னையின் அருள் பெற திரண்டனர் 7 லட்சம் பக்தர்கள்

மன்னார், ஓக. 16
மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்திருக்கும் மருதமடு திருத்தலத்தின் வருடாந்த ஆவணி மாதத் திருவிழா நேற்றுக் காலை 6.15 மணிக்குக் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.
இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் மடு அன்னையின் ஆசி பெற அங்கு திரண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
கொழும்பு மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை , கண்டி மறைமாவட்ட ஆயர் வியன்னி பெர்ணான்டோ ஆண்டகை, காலி மறை மாவட்ட ஆயர் றேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகை, அனுராதபுரம் மறை மாவட்ட ஆயர் நோபேட் அன்றாடி ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியைக் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.
அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ஜோன் அமரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.
திருப்பலியைத்தொடர்ந்துதிருச்சொரூபப் பவனி இடம்பெற்று திருச்சொரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.
பக்தர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் ஆலயச் சுற்றாடலில் ஏற்படுத்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.
ஆயிரக்கணக்கான பொலிஸார் அங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். (ற-5-56)

## ஆஸி. செல்ல முயன்ற
# 17 பேர் மட்டக்களப்பில்
## நேற்றுக் கைது

மட்டக்களப்பு, ஓக. 16
சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 17 பேரை மட்டக்களப்பு மேற்குக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினர் நேற்றுக் கைது செய்தனர்.
வாழைச்சேனைப் பகுதியிலிருந்து படகொன்றின் மூலம் இவர்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முற்பட்டனர் எனக் கூறப்பட்டது.
கைது செய்யப்பட்டவர்களைக் கடற்படையினர் திருகோணமலைத் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்று, மேலதிக நடவடிக்கைகளுக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவுத் திணைக்களத்தின் கடல்சார் பிரிவினரிடம் ஒப்படைத்தனர். (த-5)

# கோத்தாவைக் குற்றம்சாட்டிய சந்திரிகாவின் மீது நடவடிக்கை

*கூறுகிறார் உதய கம்மன்பில*

கொழும்பு, ஓக. 16
போருக்கான தாக்குதல் விமானங்களை கொள்வனவு செய்ததில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச நிதி மோசடி செய்துள்ளார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிட்ட கருத்துக்கு எதிராக சட்டத்தரணி ஊடாகக் கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
போருக்கான விமானங்கள் கொள்வனவு செய்யப்படும்போது முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தரகுப் பணம் பெற்றதாகவும், அந்தப் பணத்தை வெளிநாட்டில் பதுக்கி வைத்திருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கப்பட்ட வேளை, ஊசி போடப்பட்டதாகக் கூறிய விக்கிரமபாகு கருணாரத்னவைக் கைது செய்ய வேண்டும் எனவும், உதய கம்மன்பில இதன் போது கருத்து வெளியிட்டுள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பிணையில் வெளிவந்தார் தயா மாஸ்டர்

வவுனியா, ஓக. 16
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் வேலாயுதன் தயாநிதி என்ற தயா மாஸ்டர் வவுனியா மேல் நீதிமன்றத்தால் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.
2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசுக்கு எதிராகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டது.
இந்த வழக்கு விசாரணையின்போது தயா மாஸ்டருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தது. தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நான்கு அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட பிணையிலும், 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
எனினும் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தவறியதால் அவர் விடுவிக்கப்படவில்லை.
நேற்று நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ததால் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.
தினமும் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் எனவும், வடக்கு மாகாணத்தை விட்டு வெளியில் செல்ல முடியாது என்றும் நீதிமன்றம் அவருக்கு நிபந்தனைகள் விதித்துள்ளது. (த-21)

*கல்லெறித் தாக்குதல்களை அடுத்து*

# ஆயுதம் தாங்கிய படை ரயில்களில் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16
ரயில் மீதான கல்லெறித் தாக்குதலைத் தொடர்ந்து, ரயில் பாதுகாப்புக்காக ஆயுதம் தாங்கிய ரயில் பாதுகாப்புப் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, ரயில் பாதுகாப்புப் படையின் அத்தியட்சகர் அனுர பிரேமரத்ன தெரிவித்தார்.
கடந்த வாரம் வடக்கு நோக்கிப் பயணித்த ரயில் மீது தெமட்டகொடை பகுதியில் நடத்தப்பட்ட கல்லெறித் தாக்குதலில் படுகாயமடைந்த அநுராதபுரத்தைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் உயிரிழந்திருந்தார். இதன் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இரவு தபால் ரயில் மீது கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிப் பகுதியில் வைத்து கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
இதனைத் தொடர்ந்து ரயில் மீது கல்லெறிவோரைக் கைது செய்ய சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக 200 இற்கும் மேற்பட்ட ரயில் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ரயில்களின் பாதுகாப்புக்காக ஆயுதம் தரித்த ரயில் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ரயில் பாதுகாப்புப் படையின் அத்தியட்சர் அனுர பிரேமரத்ன தெரிவித்தார். குறைந்தது ஒரு ரயிலுக்கு நான்கு ஆயுதம் தரித்த படை யினர் பாதுகாப்பு வழங்குவர் என்றும் அவர் கூறினார். (த-5)



உணவுப் பொருள்களுக்கான வரியைக் குறைத்து மதுபானம் மற்றும் சிகரெட் வரிகளை அதிகரிக்க வேண்டும் என்று வற்புறுத்தி ஹட்டனில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுகாதார அமைச்சர் ராஜித ஆகியோர் மதுபானம் மற்றும் சிகரெட் ஆகியவற்றுக்கான வற் வரி 90 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்ததை வரவேற்கின்றோம். உணவுப் பொருள்களுக்கான வரியினை குறைத்து மதுபானம் மற்றும் சிகரெட் வரிகளை அதிகரிக்க வேண்டும். அதில் எமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. இதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று போராட்டம் நடத்தியோர் குறிப்பிட்டனர். (ற-5)

# மனித உரிமைக் குழுவில் மருத்துவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 16
உரிய அனுமதி கிடைத்தபோதும், பதிலாக வரவேண்டிய மருத்துவர் வராத படியால் இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியவில்லை. எனவே இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்குமாறுகோரி மருத்துவர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலவலகத்தில் முறையிட்டுள்ளார்.
அரச வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்குச் சுகாதார அமைச்சினால் வருடாந்தம் இடமாற்றம் வழங்கும்போது சங்கிலித் தொடராக வழங்குவதும், இடமாற்றம் செய்யப்பட்ட மருத்துவர் வைத்தியசாலையில் கடமைகளைப் பொறுப் பேற்ற பின்னரே அங்கு கடமையாற்றும் மருத்துவர் விடுவிக்கப்படுவதும் வழமை.
2014 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட 2015 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையிலான இடமாற்றப் பட்டியலில் உள்ள மருத்துவர் ஒருவரால் இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியவில்லை. அவருக்குப் பதிலாக வைத்தியசாலைக்கு வரவேண்டிய மருத்துவர் அங்கு வராமையே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.
இது தொடர்பாக விசாரித்தபோது, ஏற்கனவே இடமாற்றம் பெற்ற மருத்துவருக்குப் பதிலாக வரவேண்டிய மருத்துவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் அரசியல்வாதி ஒருவரினால் இடைநிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.
இதனாலேயே வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி குறித்த மருத்துவரை இடமாற்றம் பெறவிடுவிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அந்த மருத்துவர் தனக்குரிய இடமாற்றத்தைக் கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## வருடாந்த பெருந்திருவிழா

அளவெட்டி ஓக.16
அளவெட்டி ஸ்ரீ நாக வரத நாராயணன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று காலை 6 மணிக்கு பூசைகளுடன் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றப்படும். தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா இடம்பெறும். 25ஆம் திகதி மு.பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 26ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ற-36)

## உணவகத்துக்கு 5,000 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஓக. 16
சுகாதாரச் சீர்கேடான முறையில் உணவு தயாரித்த கொத்துரொட்டிக் கடை உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது மல்லாகம் நீதிமன்று.
அச்சுவேலி பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் பொலிஸார் இணைந்து நடத்திய சோதனையில் அச்சுவேலியிலுள்ள கடை ஒன்றின் நடத்துநருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது நடத்துநர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அபராதம் விதிக்கப்பட்டது. (உ-4,107)

# காதலியைக் கழற்றிவிட முயன்றவர் கைதானார்

*உதவி புரிந்த பெண்ணும் சிக்கினார்*

கொழும்பு, ஓக. 16
காதலித்த யுவதியைக் கழற்றிவிடுவதற்கு, அவருக்கு குறுஞ்செய்தி ஊடாக உயிர் அச்சுறுத்தல் விடுத்த காதலனையும் அதற்கு உடந்தையாகச் செயற்பட்ட பெண் ஒருவரையும் பிலியந்தலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். காதலியின் முறைப்பாட்டுக்கு அமைவாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
எனது காதலனின் முன்னாள் காதலி என்று அடையாளப் படுத்திக்கொண்ட யுவதி ஒருவர், எனது காதலனைக் கழற்றிவிடாமல் தொடர்ந்து காதலித்தால் என்னைத் தீர்த்துக் கட்டுவதாக மிரட்டினார். காதலனைக் கைவிட்டால் 50 லட்சம் ரூபா பணம் தருவதாகவும் அவர் குறுஞ்செய்தி ஊடாக மிரட்டினார் என்று காதலி தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.
பிலியந்தைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். குறுஞ்செய்தி அனுப்பப்பட்ட தொலைபேசி இலக்கத்தை மையப்படுத்தி விசாரணைகள் இடம்பெற்றன. இதன்போது, குறுஞ்செய்தி அனுப்பப் பயன்படுத் தப்படும் சிம் அட்டையும், குறுஞ்செய்தியைப் பெற்றுக்கொள்ளும் சிம் அட்டையும் ஒரே அடையாள அட்டை இலக்கத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதை பொலிஸார் கண்டுபிடித்தனர்.
அது பொலிஸில் முறைப்பாடு செய்த பெண்ணின் அடையாள அட்டைதான் என்பதைக் கண்டுபிடித்த பொலிஸார், பெண்ணின் காதலனிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர். காதலன் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைவாக, அழகுக்கலை நிலையம் ஒன்றில் பணிபுரியும் பெண்ணிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.
இதன்போது, காதலன் போட்ட நாடகம் வெளிச்சத்துக்கு வந்தது. முறைப்பாடு செய்த யுவதியின் அடையாள அட்டையில் கொள்வனவு செய்த சிம் அட்டையை, அழகுக் கலை நிலையத்தில் பணிபுரியும் பெண்ணிடம் காதலனே கொடுத்துள்ளார்.
5 ஆயிரம் ரூபா பணத்தை அந்தப் பெண்ணுக்கு வழங்கி, தனது காதலியை மிரட்டுமாறு பணித்துள்ளார் என்று விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார், அழகுக்கலை நிலையத்தில் பணிபுரிந்த பெண்ணையும், காதலனையும் கைது செய்துள்ளனர். (த-5)

## கிளிநொச்சியில் நூல் வெளியீடு

கிளிநொச்சியைச் சேர்ந்த த.ஜெயபாலன் எழுதிய 'வட்டுக்கோட்டையிலிருந்து முள்ளிவாய்க்கால வரை' என்னும் நூல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி திருநகர் லிட்டில் எய்ட் கணினிப் பயிற்சி மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.
இதன் அறிமுக உரையை கருணாகரன், பொன். காந்தன், கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் ஆகியோர் ஆற்றினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியும் உரையாற்றினார். பதிலுரையை நூலாசிரியர் த.ஜெயபாலன் நிகழ்த்தினார்.
இந்த நிகழ்வில் இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், கல்வியலாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த-21)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 537
சீட்டிழுப்பு திகதி 2016.08.15
வெற்றி இலக்கங்கள்
27 41 54 69 E
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 45,844,600/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1288
சீட்டிழுப்பு திகதி 2016.08.15
வெற்றி இலக்கங்கள்
04 14 49 52 B
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 22,000,800/=

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 023
சீட்டிழுப்பு திகதி 2016.08.15
வெற்றி இலக்கங்கள்
19 36 37
இவ்வார இலட்சாதிபதிகள் 043
வழங்கப்பட்ட மொத்த பரிசு 8,504,960/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித் தேர்தல்கள் அடுத்த ஆண்டு

அடுத்த ஆண்டு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்படும். இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறும். கிழக்கு, சப்பிரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளின் தேர்தல்கள் அடுத்த ஆண்டு நடுப் பகுதியில் நடைபெறும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைவதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கே நன்மை ஏற்படும். - என்றார். (ந-5)

### உடனடியாக பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி நகரில் (A9) வீதியில் பழைய வைத்தியசாலை முன்பாக உள்ள "நியூசன் செறமிக் பிறைவற் லிமிட்டெட்" நிறுவனத்திற்கு கணக்கியல் தெரிந்த பெண்பணியாளர் ஒருவரும் இரு ஆண் தொழிலாளர்களும் தேவை.

021 228 3872

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### WALK - IN - INTERVIEW
### Faculty of Arts

**Walk in interview for appointments to the following posts will be held at the board room of this University on the dates and the time indicated against the posts.**

**24.08.2016**

- Posts of Temporary Lecturer/ Temporary Tutor in Media Studies / Philosophy / Psychology — At 9.30 a.m
- Posts of Temporary Lecturer/ Temporary Tutor in Hindu Civilization / Hindu Philosophy/ Translation Studies / Christian Civilization / Sociology — At 10.30 a.m
- Posts of Temporary Lecturer / Temporary Tutor in Tamil / Political Science / Geography/ Economics. — At 1.30 p.m

**25.08.2016**


- Posts of Temporary Lecturer / Temporary Tutor/ Temporary Instructor in Fine Arts/ Archaeology / History / Information Communication Technology / Linguistics — At 9.30 a.m
- Posts of Temporary Lecturer / Temporary Tutor / Temporary Instructor in Planning / Drama & Theatre Arts / English Language Teaching — At 1.30 p.m

Candidates who have the required qualifications are invited for a walk in Interview.

Candidates who are awaiting the results of the final degree examination are also called upon for the above walk in Interview.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time scheduled above with relevant certificates. NIC and self prepared application.

**Registrar**
**University of Jaffna.** (C/24959) (11,17) 15.08.2016



இந்தியாவின் 70 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் விமரிசையாக நடத்தப்பட்டன. இந்தியாவின் தேசியக் கொடியைத் துணைத் தூதுவர் அ.நடராஜன் ஏற்றினார். இந்திய ஜனாதிபதியின் சுதந்திர தின உரை வாசிக்கப்பட்டது. இலங்கை, இந்தியா இரு நாடுகளுக்குரிய நட்பு ரீதியான தொடர்பாடல்கள் அபி விருத்திகள் பற்றியும் துணைத் தூதுவர் அ.நடராஜன் கருத்துத் தெரிவித்தார். (ந-5-106)

# எட்கா குறித்து தவறான புரிந்துணர்வு வேண்டாம்

*விரைவில் கைச்சாத்திடவேண்டும் என்கிறார் இந்தியத் தூதுவர் சின்ஹா*

கொழும்பு, ஓக 16

இரு நாடுகளுக்கும் நன்மை தரக்கூடிய எட்கா உடன்படிக்கை குறித்து தவறான புரிந்துணர்வுகொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்தி எட்காவை விரைவில் கைச்சாத்திடவும், இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவுடன், இலங்கை மிக நெருக்கமாக இருக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இந்தியாவின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று இடம்பெற்ற வைபவத்தில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றியபோதே இந்தியத் தூதுவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டில் இடம்பெற்ற உயர் மட்டப் பயணங்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஊடாக இரு நாடுகளுக்கிடையிலான உறவு மிகவும் உறுதியுடன் காணப்படுகின்றது.

பொருளாதார ரீதியில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் நெருக்கமடைந்துள்ளன.

கடந்த ஆண்டு இந்தியாவுக்கு பயணம் செய்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார். இது பொருளாதார மற்றும் வர்த்தக உறவின் அடுத்த கட்டமாகும். பொருளாதார மற்றும் தொழில்நுட்ப இணைக்கப்பாட்டு (எட்கா) ஒப்பந்தம் குறித்த ஆரம்ப கட்ட இணக்கப்பாடுகள் இம்மாத ஆரம்பத்தில் இலங்கையில் எட்டப்பட்டுள்ளன.

இந்தநிலையில், அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்தி உடன்படிக்கையை விரைவில் கைச்சாத்திடலாம் என எதிர்பார்க்கின்றோம் - என்றார். (த-5)

### கடை வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் கடை வாடகைக்கு தேவை.

077 931 7532, 071 533 8123

### தவறிவிட்டது

பூபாலசிங்கம் முருகானந்தன் என்பவரின் தேசிய அ.அ (683191888V) புத்தூர் சந்திக்கும் கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

077 904 6585

### பெண் வேலையாள்கள் தேவை

பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி. யாழ்ப்பாணத்திலுள்ள சைவ. அசைவ உணவகத்துக்கு சப்ளையர்ஸ் பெண்கள் இருவர் தேவை. (வயது 25-35)

021 221 7819, 077 990 1340

### வேலையாள் தேவை

காலியிலுள்ள மரக்காலை ஒன்றுக்கு சகல வேலையும் தெரிந்த வேலையாள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். (த 3800) (14,17,18)

தொடர்பு: 077 390 1594

### தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் மட்டக்களப்பு கிளையில் 30.06.2016 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 26.07.2016ம் திகதி காலை 10.00 மணி முதல் இல.187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பிலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC

Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)

Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

### வேலைவாய்ப்பு

**Cleaning** மற்றும் **Garden** வேலை

நிறுவனம் : பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்
ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, KACHCHERI NALLUR ROAD, JAFFNA.
Phone - 021 222 8093

### இவரைக் காணவில்லை



புளியம் பொக்கனை சந்தி, நாகேந்திரபுரத்தைச் சேர்ந்த கனகலிங்கம் இளங்கீரன் (இளங்கோ) என்பவர் கடந்த (02.08.2016) அன்று தொடக்கம் காணாமல் போயுள்ளார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 694 7023 / 076 941 9285 077 959 1262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைகள் படைக்கும் மாணவர்களை வவுனியாவில் உருவாக்குவதே இலக்கு

## வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஓக.16

வவுனியா மண்ணில் கல்வியின் மூலம் சிறந்த பெறுபேறுகளை வழங்கி சாதனை படைக்ககூடிய மாணவர்களை உருவாக்குவதே எனது இலக்கு.

இவ்வாறு வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் புதிதாக பதவியேற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் முன்னர் கடமையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா ஓய்வு பெற்றதை அடுத்து குறித்த கல்வி வலயத்துக்கு வட மாகாண கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவில் கடமையாற்றியமுத்து இராதாகிருஷ்ணன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவருக்கு நேற்று வரவேற்பு விழா வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாணவர்களின் கல்வித்தரத்தை உயத்துவதில் ஆசியர்களின் பணி அளப்பரியது. ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது கடமைப்பொறுப்புக்களை செவ்வனே செய்தால் சிறந்த பெறுபேறு மாணவனுக்குக் கிடைக்கும். ஆசிரியர்கள் ஊடாக மாணவர்களுக்கு உரிய கல்வி கற்பித்தல் செயல்பாடுகளுக்கான ஊக்குவிப்புக்கள் வழங்குவதே வலயக்கல்விப் பணிமனையில் கடமையாற்றுபவர்களின் முக்கிய பங்களிப்பாகும்.

ஒவ்வொரு உத்தியோகத்தர்களின் தலைமைப் பண்புகள் வளர்த்தெடுக்கப்படுவது அவசியமான விடயமாகும். ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் 100 வீதம் கடமையைச் சரியாக செய்தால் சேவையின் மூலம் நாம் திருப்தியைப் பெறலாம்.

வடமாகாணத்தின் முகப்பான இந்த வவுனியா மண்ணில் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை வழங்கி சாதனை படைக்கக்கூடிய மாணவர்களை உருவாக்குவதே எனது இலக்கு - என்றார்.

(ற-21,402)

## கரைச்சி பிரதேச செயலகத்தால் குறும்பட, ஒளிப்பட பயிற்சிகள்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவால் ஆறு மாதங்கள் கொண்ட முழுநேர பயிற்சி நெறியாக குறும்படம் மற்றும் ஒளிப்படப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவை நேற்று கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.றஜீவன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டன.

முழுநேரப் பயிற்சிக்கு இருபது மாணவர்களும், பகுதிநேரப் பயிற்சிக்கு இருபது மாணவர்களும் முதற்கட்டமாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

முற்றிலும் இலவசமாக ஆறு மாதங்களுக்கு இந்திய மற்றும் உள்ளூர் வளவாளர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. வட மாகாணத்தில் ஒரு பிரதேச செயலகத்தில் இவ்வாறான பயிற்சி ஆரம்பிக்கப்படுவது இதுவே முதன்முறை என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முழுமையாக நிதி அனுசரணையை வேள்ட் விசன் நிறுவனம் வழங்கு கின்றது. காவேரி கலாமன்றமும் அனு சரணை வழங்குகின்றது.

ஆரம்ப நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் சிவகாமி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் அருட்செல்வன், வேள்ட்விசன் நிறுவன அதிகாரி, கலைஞர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ற-21)

திரு.கந்தையா அருந்தவபாலன் அவர்களின்
மணி விழா அழைப்பு



இடம்
தென்மராட்சி கலைமன்றம் சிவன் கோயிலடி - சாவகச்சேரி
காலம் -
17.08.2016 - புதன்கிழமை முற்பகல் 9 மணி
தலைமை -
திரு.க.கனகேஸ்வரன்
(பிரதேச செயலர் மருதங்கேணி)

நிகழ்வுகள்
வரவேற்புரை: திருமதி தவரூபி பிரபாகரன் (ஆசிரியர்- மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை)
ஆசியுரைகள் :- சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள்,
வண.நே.து.ஜெபநேசன் அடிகள்,
வண.ஜாக்ரத் சைதன்ஜ சுவாமிகள்

நாயகன் நடந்து வந்த பாதை
திரு.அ.அகிலதாஸ் – (பிரதிக்கல்விப் பணிப்பாளர்– யாழ்.கல்வி வலயம்)

'அருந்தவம்' மணிவிழா மலர் வெளியீடு
வெளியீட்டு வைப்பவர் – கலாநிதி வை.சிவராசா (பிரபல வர்த்தகர் – வடமாகாண மனித உரிமைப் பணிப்பாளர்)
மலர் முன்வைப்புரை – திரு.ச.லலீசன் (பிரதி அதிபர் – கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

வாழ்த்துரைகள்
கௌரவ இரா.சம்பந்தன் (எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கை நாடாளுமன்றம்- தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
கௌரவ நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வடமாகாண சபை)
கௌரவ மாவை.சோ.சேனாதிராஜா பா.உ. (தலைவர்- இலங்கை தமிழரசுக்கட்சி)
திரு.நா.வேதநாயகன் (அரச அதிபர் - யாழ்.மாவட்டம்)
சிரேஷ்ட பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம் (துணைவேந்தர் - யாழ்.பல்கலைக்கழகம்)
சிரேஷ்ட பேராசிரியர் க.கந்தசாமி (பீடாதிபதி தொழில்நுட்ப பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் வே.ப.சிவதாசன் (முன்னாள் கலைப்பீடாதிபதி - யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.செ.உதயகுமார் (மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வடமாகாணம்)
திருமதி அ.சாந்தசீலன் (பிரதேச செயலர் - தென்மராட்சி)
திரு.சு.கிருஷ்ணகுமார் (வலயக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி)
திரு.மு.நாகேந்திரராஜா (முன்னாள் அதிபர் - யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி)

வாழ்த்துக் கவி – கவிஞர் த.நாகேஸ்வரன்

பாராட்டுரைகள்
கலாநிதி செ.சேதுராஜா (முன்னாள் அதிபர் - யா/ நெல்லியடி மத்திய கல்லூரி)
திரு.சு.சி.உதயகுமார் (தலைவர் - பொருளியல்துறை - யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.ந.ஜெயகுமாரன் (அதிபர் - யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி)
திரு.ந.சர்வேஸ்வரன் (அதிபர் -யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
திரு.வ.ஸ்ரீபிரகாஸ் (உப தலைவர் - சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)

மதிப்பளித்தல் | ஏற்புரை

அருந்தவபாலன் அறக்கட்டளை நிதியம் ஆரம்பித்து வைத்தல்
நன்றியுரை:- கா.சிவஞானசுந்தரம் (செயலாளர் மணிவிழாக்குழு)

'வாருங்கள் அவரை மனதார வாழ்த்துவோம்
மாலைகள் பொன்னாடைகளைத் தவிர்ப்போம்
அவரின் அற நிதியத்துக்கு உதவுவோம்'

(C/[illegible])
(11,17)

மணிவிழாக் குழு

உ
சிவமயம்

புங்குடுதீவு– பெருங்காடு கோயில் வயல்



ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்
ருத்திரகார சித்திரத் தேர் வெள்ளோட்டம்
17.08.2016 புதன்கிழமை

அளப்பரியதும் , மகா உன்னத நற்பணி
யானதும், இந்துக்களின் பூர்வ புண்ணிய
நற்பலனைத் தர வல்லதுமான புதிய
சித்திரத்தேர் திருப்பணி தேர்ச்சாலையோடு
இனிது நிறைவேறியது

புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம்

நன்நாள் 17.08.2016 புதன்கிழமை காலை 9.02 மணிக்கு ஆரம்பம்
அனைத்து அடியார்களும் திரண்டு வருக.
வடம் பிடித்து வல்ல பலன் அடைக.

சுபம்

தேர் நிர்மாணிப்பு ஆசாரியர் விஸ்வபிரம்மஸ்ரீ
அமரர் சி. அமரசிங்கம் புதல்வர்கள்.

(வி/ 24268(12)



ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவிலங்குகளை அடைத்து வைத்திருந்தவர் கைதானார்

கொழும்பு, ஓக. 16

சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக, வன விலங்குகளைச் சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த தம்புள்ள பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

சிகிரிய வன விலங்குகள் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி இந்த முற்றுகை நடத்தப்பட்டது. சட்டவிரோத மிருகக்காட்சிசாலை தம்புள்ள பிரதேசத்திலுள்ள கபுவத்தை என்ற இடத்தில் அமைந்துள்ளது.

ஒரு விடுதியின் பின் பகுதியில் இரும்புக் கம்பிகளால் அமைக்கப்பட்ட கூடுகளில் மிருகங்கள் அடைக்கப்பட்டிருந்தன. அவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர். ஆந்தை, முள்ளம்பன்றி, ஆமை போன்ற அரிய உயிரினங்கள் அங்கு இருந்தன.

விலங்குகள் காயமடைந்திருந்ததன் காரணமாக வைத்திய சிகிச்சைக்காக அவற்றை அடைத்து வைத்திருந்தோம் என்று விடுதி உரிமையாளர் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

சந்தேகநபரை தம்புள்ள நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ற-5)

## மைத்திரியை மீண்டும் ஜனாதிபதியாக்க முயற்சி

கொழும்பு, ஓக. 16

ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவை அடுத்த முறையும் தேர்தலில் போட்டியிடவைக்கும் முயற்சிகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் ஈடுபட்டுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி குருநாகலில் இடம்பெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது வருட நிறைவு விழாவில் இந்தயோசனையை முன்வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனது பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஜனாதிபதி முறை நீக்கப்படும் என்றும், ஜனா திபதி பதவி காலத் தின் பின்னர், அரசியலில்இருந்து ஓய்வு பெறுவேன் என்றும்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன ஏற்கனவே அறிவித்துள்ளார். (ற-5)

## முன்னாள் நீதிபதி மாடியிலிருந்து வீழ்ந்து சாவு

உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சரத் டி அப்றூ நேற்று உயிரிழந்தார். இரத்மலானையிலுள்ள அவரது வீட்டு மேல் மாடியிலிருந்து வீழ்ந்து காயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் நீதிபதி சரத் டி அப்றூ தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது தவறுதலாக வீழ்ந்தாரா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.2015 ஆம் ஆண்டு ஜூன்மாதம் 15 ஆம் திகதி தனது வீட்டு பணிப் பெண்ணைத் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (ற-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
**திருமதி. R. வாசுகி** அவர்களின்
பாசமிகு தந்தையார்
**ஆழ்வாப்பிள்ளை இராஜசிங்கம்**
(ஓய்வுநிலை உபஅதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.
**நவீல்ட் பாடசாலை**
**ஐக்கிய சங்கம், கைதடி.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**நல்லதம்பி சிவஞானலிங்கம்**
(மில் வெள்ளை)
கடந்த17.07.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு அமரர் நல்லதம்பி சிவஞானலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.08.2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**
பாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தர்மலிங்கம் தர்மராஜா**
(ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம் - வவுனியா)
மலர்வு 17.07.1940
உதிர்வு 16.08.2010
திதி: 09.08.2016

அப்பா
நினைவுகள் சுகமானது என்பார்கள் - ஆனால்
உங்கள் நினைவுகளுடன் மட்டுமே வாழ்வது சுமையாகுதே
ஆறாத் துயருடன் ஆண்டுகள் ஆறு கடந்துவிட்டோம்
மீண்டும் நீங்கள் வரமாட்டீர்களா? -அப்பா
விதியாடும் விளையாட்டு இதுவென்று அறிந்திருந்தும்
எம் மனங்களில் நிரந்தர கேள்வி இதுவானதே.

**தங்கள் ஆத்ம சாந்திக்காய்ப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**
'தேவிமகால்',
கோப்பாய் மத்தி.
குடும்பத்தினர்.

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்**
திதி: ஆடிமாத பூர்வபக்க திரயோதசி
மலர்வு 22.04.1942
உதிர்வு 19.07.2005

**அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!**
**நாம் இவ்வுலகில் உள்ளவரை தம்**
**பசுமையான நினைவுகளும்,**
**நல்வழிகாட்டல்களும் எம்மைப்**
**புனிதப்படுத்தும்.**

உமது பிரிவால் வாடும் அன்புக் கணவர், பெறாமகன் சஞ்சீவன், சகோதரர்மார், சகோதரிமார்,மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.
85, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
ஆ.சுந்தரலிங்கம்

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் (ஐயா கடையடி) பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புப் பெரியம்மா
**திருமதி பரமேஸ்வரி சம்பந்தபிள்ளை**
அவர்கள் 07.08.2016 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**சோமு சித்தப்பா**
**குடும்பத்தினர்.**
**ஐயா கடையடி, சாவகச்சேரி.**

## 42 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்




மண்ணில் 19.04.1947
விண்ணில் 14.07.1974
**செல்லப்பா கைலாசம்பிள்ளை**



மண்ணில் 04.11.1926
விண்ணில் 28.07.1996
**மீனாட்சிப்பிள்ளை கைலாசம்பிள்ளை**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் சேர்ந்துவிட்ட எம் தெய்வங்களே! நாம் இம் மண்ணில் எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்.
**கை.இராஜரட்ணம் (மகன்)**
**யாழ்ப்பாணம்.**
**க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**

## 21 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**தம்பிராஜா கனகரட்ணராஜா**
திதி: திரியோதசி(16.08.2016)

பாசத்தின் திருவுருவமாய்
பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கு எல்லாம்
அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
இருபத்தொரு ஆண்டுகள் அல்ல
எத்தனை ஆண்டுகள் தான்
சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றும் மாறாதையா!

வையத்துள் அறிமுகம் 19.01.1935
தெய்வத்தின் சரணம் 08.08.1995

**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**
அன்பு மனைவி, மைத்துனர்கள், மைத்துனிகள், சகோதரர்கள் , மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
**சந்தையடி, மானிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலியில் இறங்கியது அமெ. படை

## மருத்துவ உபகரணங்களைக் கையளித்தது; இலவச மருத்துவ முகாமும் நடத்துகின்றது




அமெரிக்கப் படையினர் நேற்று அமெரிக்காவின் மருந்துக் காவி விமானத்தில் பலாலி விமானப் படைத்தளத்தில் தரை இறங்கினர். அவர்களுடன் அமெரிக்கத் தூதுவர் கெசாப்பும் இணைந்திருந்தார். அமெரிக்கக் குழுவினர் மருத்துவ உபகரணத் தொகுதியை வடக்கு மாகாண சபையிடம் கையளித்தனர். இலவச மருத்துவ முகாமையும் ஆரம்பித்தனர்.

பசுபிக் ஏஞ்சல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

முன்னதாக இலங்கை விமானப் படையின் விமானத்தில் பாதுகாப்புச் செயலர் உள்ளிட்ட குழுவினர் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கினர். தொடர்ந்து அமெரிக்காவின் மருந்து காவி விமான மான சி-130 பலாலியை வந்தடைந்தது. அமெரிக்கப் பாதுகாப்புப் படையின் மருந்து காவி விமானத்தில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் மனோ கணேசன், அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் ஆகியோர் வந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் ஆகியோரும் பலாலி விமானப் படைத் தளத்தில் இடம்பெற்ற மருத்துவ உபகரண கையளிப்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

வளலாயில் மீளக்குடியமர்ந்த மக்களுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டத்தையும் அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.

அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளைப் பீடத்தின் மூன்று நாள் மருத்துவ முகாம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு இடைக்காடு மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கண் வைத்தியப் பிரிவு, பல் வைத்தியப் பிரிவு, காது, மூக்கு வைத்திய பிரிவு, பொது வைத்தியப் பிரிவு ஆகிய சிகிச்சைக் கூடங்கள் தனித்துவமாக நிறுவப்பட்டு அவற்றில் அமெரிக்க இராணுவத்தின் வைத்தியர்கள் சிகிச்சை வழங்கினர். பொது மக்களுக்கான மொழிபெயர்ப்பு வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

கண் வைத்தியப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு கண்பார்வை குறைபாடு உடையவர்களுக்கு கண்ணாடிகள் உடனுக்குடன் வழங்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல மாது உள்ளிட்டவர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினர். நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் நாளை புதன்கிழமை வரை மூன்று தினங்களுக்கு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும் மருத்துவ முகாமில் பொதுமக்களைக் கலந்துகொண்டு பயன் பெற முடியும் என்று அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, குட்டியப் புலம், வயாவிளான் பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. (ற-5-101-11)

## பாம்பு தீண்டி மாணவன் சிகிச்சையில்

யாழ்ப்பாணம், ஓக.16

பரீட்சைக்காக வீட்டுக்குள் படித்துக் கொண்டிருந்த மாணவனை நாக பாம்பு தீண்டியது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு புங்குடுதீவில் நடந்தது.

நேற்று நடைபெறவிருந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்த வேளையில் பாம்பு தீண்டியது என்று தெரிவிக்கப்பட்டது. புங்குடுதீவைச் சேர்ந்த அருள்ராஜ் சிந்துஜன் (வயது 18) என்பவரே பாதிக்கப்பட்டவராவார். பாதிக்கப்பட்டவர் புங்குடுதீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ற-9)

# கட்டாக்காலி மாடுகளால் பயிர்ச் செய்கைகள் நாசம்

## தென்மராட்சி விவசாயிகள் கவலை

தென்மராட்சி ஓக 15

மீசாலை புத்தூர் சந்தி தொடக்கம் கொடிகாமம் வரையான பகுதிகளில் கட்டாக்காலியாக அலையும் மாடுகளால் தமது விவசாயப் பயிர்கள் சேதமாக்கப்படுகின்றன என விவசாயிகள் தெரிவித்தனர். இதனை உடன் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் வீதிகளில் இரவு வேளைகளில் தங்கும் மாடுகள் பகல்வேளைகளில் அங்குள்ள தென்னங்காணிகளிலும், இரவு வேளைகளில் விவசாயத் தோட்டங்களிலும் புகுந்து பயிர்களை அழித்து வருகின்றன.

இரவில் விவசாய நிலங்களுக்குள் நுழையும், மாடுகளைத் துரத்தும் வேளைகளில் அவை ஏ-9 வீதியின் குறுக்கே ஓடி வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்கின்றன. சில மாடுகள்-ரயிலில் மோதுண்டு அநியாயமாகச் சாவடைகின்றன.

இந்தக் கட்டாக்காலிகளின் அத்துமீறல் காரணமாக தமது வாழ்வாதாரத்துக்குக் கைகொடுக்கும் பயிர்ச் செய்கை நாசமடைவது குறித்து விவசாயிகள் கடும் விசனத்தை வெளியிட்டுள்ளனர்.

எனவே கட்டாக்காலிகளாக அலையும் மாடுகளை அவற்றின் உரிமையாளர்கள் கட்டி வைத்து வளர்க்குமாறு விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலியாக அலையும் மாடுகள் மீசாலை வடக்கு தட்டான் குளம் பிள்ளையார் ஆலயம், இராமாவில் கந்தசாமி ஆலயம், நாகதம்பிரான் ஆலயம் ஆகியவற்றில் இரவு தங்குகின்றன எனவும் கூறப்பட்டது. (த-9)

## பிரம்மோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.16

கிளிநொச்சி வட்டக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயிலின் வருடாந்த பிரம்மோற்சவம் நடைபெறவுள்ளது. நாளை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில், எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. (ற-ரி4)

## பனங்கட்டிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஓக.16

வரணிப் பிரதேசத்தில் பனங்கட்டிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெய்த மழை காரணமாகப் பனங்கட்டி உற்பத்தி பாதிக்கப்பட்டது என்று கருப்பணி உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளிகள் தெரிவித்தனர்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு விடுமுறைகளில் வரும் புலம்பெயர்ந்தோர் கருப்பணி, பனங்கட்டி ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதில் நாட்டம் செலுத்துகின்றனர்.

கருப்பணி உற்பத்தியாளர்கள் அவர்களது தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (ற-122)

## குடத்தனை கண்டல் காட்டை பாதுகாக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.16

வரணி மற்றும் குடத்தனை பிரதேசத்தில் உள்ள கண்டல் மரக் காட்டில் விறகுக்காக கண்டல் மரங்களைச் சட்ட விரோதமாகத் தறிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

மாட்டுவண்டியில் இரகசிய பாதையினூடாகக் காட்டுக்குள் சென்று மரங்கள் தறிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இயற்கை வளங்கள் நிறைந்த இந்தப் பகுதி எந்தவித பாதுகாப்பும் இல்லாதுள்ளது. கண்டல்காடு விறகுக்காக அழிக்கப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு எழுதுமட்டுவாழ் தெற்கு பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடமும் பிரதேசத்தில் உள்ள கண்டல் காடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் சார்பு பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். (ற-5-122)

## குளிரூட்டப்பட்ட ரயிலுக்கான ஆசனப் பதிவுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணத்துக்கான குளிரூட்டப்பட்ட ரயிலுக்கான ஆசனப் பதிவுகள் தற்போது அதிகரித்துள்ளன. கூடுதலான மக்கள் இந்த ரயிலில் பயணம் செய்வதால் முன் கூட்டியே ஆசனங்களுக்குப் பதிவு செய்துள்ளனர் என்று யாழ். மத்திய ரயில் நிலையத்தின் தலைமை அதிகாரி பிரதீபன் தெரிவித்தார்.

தற்போது பாடசாலைவிடுமுறை மற்றும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழா போன்ற காரணங்களால் ரயிலில் பயணம் [illegible] அதிகரித்துள்ளது. புலம்பெயர் நாடுகளில் இருந்து வருவோர் இருவழிப் போக்குவரத்துக்கான ஆசனப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். யாழ். தேவி மற்றும் தபால் ரயில் போன்ற ரயில்களிலும் கடந்த சில நாள்களாகக் கூடுதலான பயணிகள் போக்குவரத்துச் செய்தனர்.

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு மேலதிக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமா என்று யாழ். ரயில் நிலையத் தலைமை அதிகாரியிடம் கேட்டபோது, கடந்த ஆண்டு சிறப்பு ரயில்கள் சேவையில் விடப்படவில்லை. இதுகுறித்துகொழும்புரயில்வே திணைக்களமே முடிவெடுக்கும்-என்றார். (ற-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பெண் குழந்தையிடம் தவறான நடத்தை: இளைஞன் நேற்றுக் கைது

## தாயின் முறைப்பாட்டை அடுத்து

யாழ்ப்பாணம், ஓக. 16

மூன்றரை வயதுப் பெண் குழந்தையுடன் தவறாக நடக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் 17 வயது இளைஞர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த தெரிவித்தார்.

மூன்றரை வயதுப் பெண் குழந்தையின் தாயால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. சந்தேகநபர் அவரது வீட்டில் வைத்து நேற்று மதியம் கைது செய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் குழந்தையின் உறவினர் என்று பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்தது எனக் கூறப்படுகின்றது.

குழந்தை தனது தாயிடம் விடயத்தைத் தெரிவித்ததைத் தொடர்ந்தே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணைகளைத் தொடர்ந்து, நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-5-109)



கட்டாரில் வாழும் யாழ். முஸ்லிம் சகோதரர்களின் அமைப்பின் ஏற்பாட்டில், புலமைப் பரிசில் பரீட்சை கருத்தரங்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்வில் ஒஸ்மானியாக் கல்லூரியின் பிரதி அதிபர் மகேந்திரராஜா தலைமை அதிதியாகக் கலந்து கொண்டார். கருத்தரங்கில் ஆசிரியர் அலீம் வளவாளராகக் கலந்துகொண்டார். கருத்தரங்கு முடிவில், நடத்தப்பட்ட பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ற-5)

# அம்பாறை மாவட்டச் செயலராக முஸ்லிம் ஒருவரை நியமிக்குக

## மக்கள் கருத்தறியும் செயலணியிடம் கல்முனை அபிவிருத்திக்கான போரம் கருத்து

அம்பாறை, ஓக. 16

தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டத்துக்கு முஸ்லிம் ஒருவரை மாவட்டச் செயலராக நியமிக்கவேண்டும்.

இவ்வாறு கல்முனை அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் தலைவர் ஏ.பீ.எம்.அஸ்ஹர் நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியின் வலய மட்ட அமர்வில் வலியுறுத்தினார்.

நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியில் அம்பாறை வலய அமர்வு கல்முனை கிறிஸ்தவ இல்ல மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அம்பாறை வலயச் செயலணி சார்பில் செயலாளர் வாணிசைமன், கலாநிதி எஸ்.அனுசியா, சேனாதிராஜா, ஜீ.எல்.ஆரியதாஸ, எஸ்.அமானுல்லா, எஸ்.சாந்தினி, இணைப்பாளர் எம்.எஸ்.ஜலீஸ் ஆகியோர் மக்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

கல்முனை அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் அஸ்ஹர் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையாகத் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற போதிலும் அம்பாறை மாவட்ட செயலகத்துக்குச் சென்று தமிழ் மொழியில் கருமங்களை ஆற்றுவதில் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மிக நீண்ட காலமாக இந்த மாவட்டத்தின் மாவட்டச் செயலராகச் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுகின்றனர்.

தற்போதும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே மாவட்டச் செயலராகக் கடமையாற்றி வருகிறார். அவரை விட சேவை மூப்பும் தகுதியும் கொண்ட முஸ்லிம் ஒருவர் மேலதிக மாவட்டச் செயலராகவே நியமனம் செய்யப்பட்டுக் கடமையாற்றி வருகின்றார்.

இத்தகைய செயற்பாடுகளால் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. மக்கள் அவநம்பிக்கை கொள்ளும் நிலைமையுள்ளது. அம்பாறை மாவட்டச் செயலராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். இதுவே நல்லிணக்கத்துக்கும், மக்கள் நலனுக்கும் ஏற்ற செயற்பாடாகும்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட 13 பிரதேச செயலகங்கள் உள்ளன. இந்தப் பிரதேசசெயலகங்களுக்கு அம்பாறை மாவட்டச் செயலகத்தால் அனுப்பப்படும் பெரும்பாலான சுற்றறிக்கைகள், கடிதங்கள் தனிச் சிங்களத்திலேயே உள்ளன.

இந்தப் பிரதேசசெயலகங்களில் கடமையாற்றும் சிங்கள மொழி தெரியாத உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ் மொழி நடைமுறையை அம்பாறை மாவட்டச்செயலகத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்த ஆவன செய்யப்பட வேண்டும். இவற்றுக்குத் தீர்வாக, அம்பாறை மாவட்டத்தில் நிர்வாக ரீதியான கரையோர மாவட்டம் உருவாக்கப்படவேண்டும். அம்பாறை மாவட்டத் தமிழ் பேசும் மக்கள் நலனை நோக்காகக் கொண்ட இந்தக் கரையோர மாவட்டத்துக்கான நீண்ட காலக் கோரிக்கையைத் தாமதமின்றி நிறைவேற்ற அரசு ஆவன செய்யவேண்டும். அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கியதாக இந்தக் கரையோர மாவட்டம் அமைய வேண்டும் - என்றார்.

(ற-5-30)

# நீங்காத நினைவுகளாக எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி

## பிலோமினா வின்சன்டிபோல்

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்"

(உரோ 14: 8)

மண்ணில் 24.08.1940 — விண்ணில் 17.08.2008

எம் குடும்பத்தின் குலவிளக்கே
எம் நெஞ்சில் வாழும் குலவிளக்காக
எம்மை எப்போதும் அரவணைத்து
எம்மில் அழியாத் தீபமாக மலர்ந்திருக்கும் - அன்னையே
உங்கள் இனிமையான இன்புறுவலும்
இரக்கமான உள்ளமும் எப்போதும் சிரித்த முகமும்
எவரையும் கவரும் பேச்சும்
இன்னமும் எம் கண்முன் நிற்க
இன்பமாக எம் உள்ளங்களில் இனிதாக வாழ்ந்து
எம் மனதில் நீங்கா இடம் பிடித்து
நீங்கிச் சென்று எட்டாண்டுகள் சென்ற போதும்
ஆறாத துயருடன் நீங்காத நினைவுகளை
நெஞ்சிலே நிறுத்தி உங்கள் ஆத்ம சாந்தியை
வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாளை (17.08.2016) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்திலும் கொழும்பு செக்கட்டித்தெரு புனித வியாகுலமாதா ஆலயத்திலும் மன்னார் புனித செபஸ்த்தியார் பேராலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்

**குடும்பத்தினர்.**

**கடற்கரைவீதி, பருத்தித்துறை.**

(தொ.3664) (1218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இணையத்தள ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.16
வடக்கு மாகாண மூலதன நிதி முகாமைத்துவ ஆலோசனைகளுக்கான சேவை மையத்தின் இணையத்தள ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது. நாளை முதல் குறித்த நிறுவனத்தின் இணையத்தளம் செயற்படவுள்ளது. இந்த நிறுவனத்தின் மூலம் நிதி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனப் பணிப்பாளர் நாகேஸ்வரன் தெரிவித்தார். (ற-ரி4)

### வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.16
வேலணை பெருங்குளத்தில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் திருக் கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழா நடைபெற்று வருகின்றது. நாளை காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழா நடைபெறும். (ற-ரி4)

### ஒன்று கூடலும் வைத்திய ஆலோசனையும்

யாழ்ப்பாணம், ஓக.16
கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஒன்று கூடல் நிகழ்வும், நீரிழிவு நோய் சம்பந்தமான வைத்திய ஆலோசனைகளும் நாளை காலை 9 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு ஆலோசகராக மருத்துவர் வைத்தீஸ்வரன் கலந்து கொள்வார். (ற-ரி4)

# குடிதண்ணீருக்கு அல்லாடும் பூநகரி, கறுக்காய்த்தீவு மக்கள்

## பணம் கொடுத்து நீர் பெறும் அவல நிலை

கிளிநொச்சி, ஓக. 16
பூநகரி கறுக்காய்த்தீவு மக்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். தற்போது தனியாரிடம் ஒரு லீற்றர் குடிதண்ணீர் ஐம்பது சதத்துக்கு கொள்வனவு செய்கின்றோம் என்று தெரிவிக்கும் மக்கள், தமது குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு உடன்நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.



இந்தக் கிராமத்தில் போரின் பின்னர் மீளக்குடியமர்ந்த 180 குடும்பங்கள் வாழ்கின்றன. கிராமத்தின் தண்ணீர் உவர்த் தன்மையுடன் காணப்படுகின்றது. குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கு அங்குள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

குடிதண்ணீரைத் தனியாரிடமிருந்து லீற்றர் 50 சதத்துக்கு வாங்குகின்றோம். பிரதேச சபையின் ஊடாக வாரத்துக்கு 3 தடவைகள் பிளாஸ்டிக் நீர்த் தாங்கிகளுக்குத்தண்ணீர்விநியோகிக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இயந்திரக் கோளாறு காரணமாக நீர்த் தாங்கிக்கு விநியோகிக்கும் நடவடிக்கையும் இடம்பெறுவதில்லை. பிரதேச சபைக்கும் மாதாந்தம் கட்டணம் செலுத்தியே குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றோம்- என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட ஆரம்பத்தில் அந்தப் பகுதியில் காணப்பட்ட குளத்திலிருந்து தண்ணீரைப் பெற்று நன்னீராக்கி விநியோகிக்கும் நடவடிக்கையை இராணுவத்தினர் முன்னெடுத்திருந்தனர். இரண்டு மாதங்கள் வரையிலேயே அது நீடித்தது என்று மக்கள் தெரிவித்தனர். பின்னர் இராணுவத்தினருக்கு டீசல் வழங்காததால் குளத்து நீரை நன்னீராக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் குறிப்பிட்டனர். 5 வருடங்களாக நன்னீராக்கும் இயந்திரம் செயற்படுத்தப்படவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

அண்மையில் பெய்த மழை காரணமாகக் குளங்களில் நீர் உள்ளது. இந்த நீர் வற்றினால் குளிப்பதற்குக் கூட 5 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியிருக்கும். இப்போது குளத்தில் நீர் இருப்பதைப் பயன்படுத்தி, குளிப்பதற்கும், குடிப்பதற்கும் அதிகாரிகள் ஏற்பாடு செய்து தர வேண்டும். பயன்படுத்தப்படாமல் உள்ள சுத்திகரிப்பு இயந்திரத்தின் ஊடாக இதனை மேற்கொண்டு நடைமுறைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"குடிதண்ணீர் சுத்திகரிப்புத் திட்டம் பூநகரிப் பிரதேச சபையால் முன்னெடுக்கப்படவில்லை. இராணுவத்தினரே நடைமுறைப்படுத்தினர். அதனை மீளச் செயற்படுத்துவது தொடர்பில் எம்மால் கருத்துக் கூற முடியாது. அந்த மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இந்த ஆண்டு ஒதுக்கீடுகளில் இந்த விடயம் குறிப்பிடப்படவில்லை. பிரதேச சபையின் குடிதண்ணீர் விநியோகம் வாரத்தில் 3 நாள்கள் ஒழுங்காக இடம்பெறுகின்றது" என்று பூநகரிப் பிரதேசசபைச் செயலர் ரி.இராஜகோபால் தெரிவித்தார். (ற-5-ரி3)

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் வைரமுத்து சபாரத்தினம் (ஐயா மாஸ்ரர்)



(ஓய்வு நிலை அதிபர் - யா/நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி வித்தியாலயம்,
முன்னாள் கௌரவ செயலாளர் - நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில். முன்னாள் தலைவர்- நயினாதீவு வடக்கு விவசாய சம்மேளனம்)

தோற்றம் 25.03.1937 — மறைவு 27.08.2015

அப்பா!... ஆற முடியவில்லை
நெஞ்சம் கனக்கிறது நிஜமாக
உங்கள் நினைவுகள் கண்முன்னே நிழலாக
நீங்கள் மட்டும் ஏனோ இன்று படமாக
எங்கள் வாழ்வு வளம்பெற
ஒளி கொடுத்த அன்பு அப்பாவே!
ஆண்டு ஒன்றென்ன ஆயிரம் சென்றாலும்
நாம் பூசிக்கும் கண்கண்ட தெய்வம் நீங்கள்
உங்களை எம் வாழ்வில் நாம் மறவோம்
நயினை நாகம்மை பாதத்தில்
உங்கள் ஆத்மா சாந்திபெற
வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



குடும்பத்தினர்.
பிரதான வீதி, 5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் முக்கால் பகுதி என் ஆட்சியில் முடிந்தது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு, ஓக.16

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போரின் கால் பகுதியையே முடிவுக்குக் கொண்டு வந்தார். போரின் நான்கில் மூன்று பகுதியை நானே முடிவுக்குக் கொண்டு வந்தேன்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகத்துக்கு கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

போரை முடிவுக்குக் கொண்டு வந்த காரணத்தால் மகிந்தவை ஆட்சியில் அமர்த்த வேண்டுமெனச் சிலர் கூறுகின்றனர். நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பகுதிப் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தது. நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர் நான்கில் மூன்று பங்கு போரை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தேன்.



மகிந்த ராஜபக்சவுக்குக் கால்வாசிப் பகுதியே முடிவுறுத்த எஞ்சியிருந்தது. எனது ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட போர் உபகரணங்களைக் கொண்டே மகிந்தவால் இலகுவாகப் போரை வென்றெடுக்க முடிந்தது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆறு போர்விமானங்களைக் கொள்வனவு செய்திருந்தார். ஆறுமே அழிந்து விட்டன. ஒரு விமானம் கொண்டு வரப்பட்ட உடனேயே அழிவடைந்தது. விலையை விடவும் மூன்று மடங்கு அதிகளவு பணம் கொடுத்து இந்த விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

விமானக் கொள்வனவு செய்ததன் ஊடாகக் கிடைத்த தரகுப் பணத்தை ராஜபக்சாக்கள் வெளிநாட்டு வங்கியில் வைப்புச் செய்துள்ளனர் - என்றார். (ந-5)

# உலகப் பொருளாதாரத்தை ஆசியா கட்டுப்படுத்தும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.16

ஆசியப் பிராந்தியம் விரைவில் உலகப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார். அந்த நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகள் விரைவில் உலகப் பொருளாதாரத்தில் வலுவான நிலையை எட்டும். இதன் மூலம் உலகப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய பிராந்தியமாக ஆசியா மாறும் - என்றார்.

கொழும்புத் துறைமுக நகர் அபிவிருத்தித் திட்டம் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-5)

# அடுத்த வரவு- செலவுத் திட்டத்தை மகிந்த ராஜபக்சவே முன்வைப்பார்

## நம்புகின்றார் நாமல் ராஜபக்ச

கொழும்பு, ஓக.16

அடுத்த வரவு-செலவுத் திட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் முன்னெடுக்கப்படும் என்பதில் எந்தவித அச்சமும் இல்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கினிகத்தேனை ரஞ்சுராவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை தொடர்பில் அமெரிக்கா விசாரணைகளை முன்னெடுக்க இன்றைய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இராணுவத்தைக் காட்டிக் கொடுக்க இந்த அரசு முனைகின்றது.

மக்களின் வாழ்வாதாரத்தின் அபிவிருத்திகளைத் தேடிப் பார்க்காத நல்லாட்சி அரசு, கடந்த ஆட்சியின் செயற்பாடுகள் தொடர்பாகத் தேடிப் பார்ப்பதற்குப் பணத்தையும் நேரத்தையும் வீணாக்குகின்றது. மகிந்தவின் குடும்பத்தினரையும், செயற்பாடுகளையும் எப்.சீ.ஐ.டீ. என்ற ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு கோடிக் கணக்கில் பணத்தைச் செலவு செய்து ஆராய்ந்து வருகின்றது.

இலங்கையில் எந்தவொரு அபிவிருத்தியையும் இதுவரை முன்னெடுக்கவில்லை. ஊழல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் காரியாலயத்துக்குச் சென்றால், அங்கு அனைத்து அறைகளிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உருவப் படங்களே காட்சியளிக்கின்றன.

ராஜபக்சவின் குடும்பத்தினர் மட்டுமன்றி கடந்த ஆட்சியில் உள்ள அனைவரும் நிம்மதியின்றி நித்திரை கொள்ளும் நிலைக்கு அரசின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. நடைபவனியில் எமது கோரிக்கைகளை மக்களோடு இணைந்து கோசம் இட்டுக்கொண்டு இருக்கையில், கைது செய்து சிறையில் அடைக்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்தது.

அவர்கள் நினைத்தவாறு என்னைச் சிறைக்கு அனுப்பினர். அரசின் வேலை இதுவல்ல. மக்களுடைய அபிவிருத்தி தொடர்பில் ஆராய்ந்து மக்கள் சேவையை முன்னெடுக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கைப்பற்றினால் உலக நாடுகள் நிதி உதவிகளைச் செய்யும் என்ற நிலை இருந்தது. ஆனால் மகிந்த ராஜபக்சவின் அரசுக்கே கூடியளவில் அபிவிருத்திக்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில் இந்த அரசு வழங்கிய வாக்குறுதிகள் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளனவா ?

விவசாயிகளுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றம் பெற்றுள்ளதா? இவை அனைத்தையும் செய்யாது ஊழல் விசாரணை என்ற பெயரில் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவழிப்பது நியாயமற்றதாகும்.

கேகாலை அரநாயக்க பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதா? கொழும்பில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா? என்ற பல்வேறு கேள்விகளுக்கு இந்த அரசிடம் பதில் இல்லை.

பழிவாங்கும் எண்ணம் மாத்திரமே இந்த அரசிடம் இருக்கின்றது - என்றார். (ந-5)

# 4 அமைச்சுக்களுக்கு பணிப்பாளர் நாயகங்கள்

கொழும்பு, ஓக.16

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் 4 அமைச்சுக்களுக்கு நிதி மற்றும் கணக்குகள் தொடர்பிலான பணிப்பாளர் நாயகங்களை அரசு நியமிக்கவுள்ளது.

நிதி அமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

சுகாதாரம், கல்வி, பெருந்தெருக்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களுக்கு நிதி மற்றும் கணக்குகள் தொடர்பிலான பணிப்பாளர் நாயகங்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இலங்கை கணக்காளர் சேவையிலுள்ள தொழிற்தகைமையுடைய கணக்காய்வாளர்களே நியமிக்கப்படவுள்ளனர் என்று நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் 100 பில்லியன் ரூபாவுக்கு அதிகமாகச் செலவு செய்யும் அமைச்சுக்களுக்கு நிதி மற்றும் கணக்கு தொடர்பான பணிப்பாளர் நாயகங்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

# காணாமற்போனோர் பணியகம் குறித்து மகாநாயக்க தேரர்களிடம் முறைப்பாடு

## மகிந்த அணியினர் மும்முரம்

கொழும்பு, ஓக.16

காணாமற்போனோர் பணியகம் அமைவதைத் தடுக்கும் நோக்கில், மகாநாயக்க தேரர்களிடம் முறைப்பாடு செய்வதற்கு மகிந்த அணி தீர்மானித்துள்ளது.

அஸ்கிரிய, மல்வத்த உட்பட உயர் மட்ட பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து இது பற்றி எடுத்துரைக்கப்படும். ஏனைய மதத் தலைவர்களையும் சந்திக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன் பில தெரிவித்தார்.

காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதற்கு மகிந்த அணி மிகத் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொண்டது. அதனைத் தாண்டி அது சட்டமாக்கப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிட்ட பின்னர் பணியகத்துக்கான ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டும்.

அரசமைப்புச் சபை தனது பரிந்துரைகளைச் சமர்ப்பித்த 15 நாள்களுக்குள் ஜனாதிபதி, காணாமற்போனோர் பணியகத்தின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களை நியமிப்பார் என்று மேற்படி சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மேற்படி நியமனத்தைச் செய்யக்கூடாது என்று வலியுறுத்தி மகிந்த அணியினர் பரப்புரையை முன்னெடுக்கவுள்ளனர். ஜனாதிபதி, உறுப்பினர்களை நியமிக்காவிடின் சட்டம் நடைமுறைக்கு வராது எனக் கூறப்படுகிறது.

இலங்கை அரசியலில் மகாநாயக்க தேரர்களின் கருத்து பல சந்தர்ப்பங்களில் தாக்கங்களைச் செலுத்தியுள்ளது. ஆகவே தான் மகா நாயக்க தேரர்களைச் சந்தித்து, முறையிடும் முயற்சியில் மகிந்த அணி இறங்கவுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கு உரிய பதில் கிடைக்கவில்லை. எதேச்சதிகாரமாக அரசமைப்புக்கு முரணாகச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ளது. இது பயங்கரமான சட்டவரைவாகும். படையினரைக் காட்டிக்கொடுக்கும் வகையில் உள்ளது. ஆகவே தான் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து, அதைத் தடுக்கும் வகையில் மதத் தலைவர்களிடம் முறையிடப்படவுள்ளது - என்று மகிந்த அணி யினர் தெரிவித்தனர்.

அதேவேளை, நீதி அமைச்சர் மதத் தலைவர்களைச் சந்தித்து பணியகம் பற்றி விரைவில் விளக்கமளிப்பார் என்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி நியமனத்தைத் தடுக்கமாட்டார் என்றும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (ந-5)

# சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய சீரமைப்புப் பணி கைவிடப்பட்டது

## நிதி திரட்ட முடியாததால்

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் சீரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அமைச்சரவையின் பொருளாதார மேலாண்மைக் குழுவால் தயாரிக்கப்பட்ட முன்மொழிவை பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எண்ணெய் சுத்திரிப்பு நிலையத்தின் சீரமைப்புக்கு இரண்டு பில்லியன் டொலர் தேவைப்படுகின்றது என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி சமர்ப்பித்த முன்மொழிவில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதற்கான நிதியைத் திரட்டுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

சீன முதலீட்டில் அம்பாந்தோட்டையில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பில் தற்போது ஆராயப்படுகின்றது. அதில் நாளொன்றுக்கு ஒரு லட்சம் பீப்பாய்கள் எண்ணெயைச் சுத்திகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் நிதியமைச்சர் கூறினார். (ந-5)

# காணாமற்போனோர் பணியக சட்டத்துக்கு பிரிட்டன் வரவேற்பு

கொழும்பு, ஓக.16

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவுவது தொடர்பான சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டமையை பிரிட்டன் வரவேற்றது. நல்லிணக்கப் பாதையின் முக்கிய நகர்வு என்றும் அது தெரிவித்தது.

இதுகுறித்துப் பிரிட்டன் தூதரகம் தெரிவித்ததாவது:

இந்த அலுவலகத்தின் ஊடாகக் காணாமற் போனோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு நன்மை ஏற்படும். இதனூடாக, உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதனை அறிந்து கொள்ள, காணாமற்போனோரது குடும்ப உறுப்பினர்களுக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைக்கும். ஆயிரக் கணக்கான சம்பவங்கள் தொடர்பில் அலுவலகம் நடவடிக்கை எடுக்க முற்படுகையில், அலுவலகம் பல சவால்களை எதிர்நோக்க நேரிடும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டவரைவு கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனை அமெரிக்காவும் வரவேற்றது. (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். தொடர்பான தகவல்களில் பாதுகாப்புத் தரப்பு அதிக கவனம்

கொழும்பு, ஓக. 16
ஐ.எஸ். இயக்கத்தில் இணைந்து கொள்ளும் நபர்கள் இலங்கையை அடித்தளமாகப் பயன்படுத்துவது தொடர்பில் வெளிவரும் செய்திகளை, பாதுகாப்புத் தரப்பு ஆராய்ந்து அதில் கவனம் செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர் ருவான் விஜயவர்தனதெரிவித்ததாவது:
மத்திய கிழக்கு நாடுகளில் இயங்கி வரும் ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொள்ள ஆசிய நாடுகளிலிருந்து இஸ்லாமியர்கள் பயணிக்கின்றமை ஆசிய நாடுகளுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவிலிருந்து தொடர்ச்சியாக இந்த விடயம் தொடர்பான செய்திகள் வெளிவருகின்றன. யாழ்ப்பாணப் பாதையைப் பயன்படுத்தி ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குப் பயணிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் இவ்வாறான அமைப்புக்களுக்குஆதரவாக எமது மக்கள் செயற்படவில்லை. புலனாய்வுப் பிரிவினர் இந்த விடயத்தில் அக்கறையுடன் இருக்கின்றனர். தேசியப் பாது காப்பைச் சீரழிக்கும்செயற்பாடுகளுக்கு நாம் இடமளிக்கமாட்டோம் – என்றார்.

> ஐ.எஸ். பயங்கரவாத அச்சுறுத்தல் இலங்கைக்கு இருக்கின்றது என்ற புலனாய்வுத் தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. பயங்கரவாதத்திலிருந்து நாடு விடுபட்டுள்ளநிலையில் மீண்டும் அவ்வாறான அச்சுறுத்தல் – சூழல் ஏற்படுவதை மக்கள் விரும்பமாட்டார்கள்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது:
ஐ.எஸ். பயங்கரவாத அச்சுறுத்தல் இலங் கைக்கு இருக்கின்றது என்ற புலனாய்வுத் தக வல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. பயங்கரவாதத்திலிருந்து நாடு விடுபட்டுள்ள நிலையில் மீண்டும் அவ்வாறான அச்சுறுத்தல் – சூழல் ஏற்படுவதை மக்கள்விரும்பமாட்டார்கள். இந்த விடயத்தைக் கையாள்வதற்கான போதிய அனுபவம் எமக்கு இருக்கின்றது– என்றார்.
இராணுவப் பேச்சாளர் தெரிவித்தாவது:
மேற்கு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ஐ.எஸ். பயங்கரவாதச் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. ஆசியநாடுகளிலும்பயங்கரவாதம்தீவிரமடைந்து வருகின்றது. இலங்கையில் அவ்வாறு எதுவும் அடையாளம் காணப்படவில்லை. எமது புலனாய்வுப் பிரிவினர் மிகவும் துல்லியமாக இந்த விடயங்களைக் கண்காணித்து வருகின்றனர்.– என்றார். (ற-5)

## புதிய நகர அபிவிருத்தியால் பொருளாதாரம் விருத்தியடையும்

*–சீனாவில் ரணில்*

கொழும்பு, ஓக. 16
சீனாவின் புதிய நகர அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக இலங்கையின் பட்டுப் பாதையின் பொருளாதார விருத்தியை உறுதிசெய்து கொள்ளமுடியும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
சீனாவுக்குப்பயணம்மேற்கொண்டுள்ள பிரதமர், சீனாவின் தொழில்நுட்பப் பூங்காவைப் பார்வையிட்ட பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு குறிப்பிட்டார்.
சீனாவின் பொருளாதாரப் பட்டுப் பாதையின் வளர்ச்சி தொடர்பிலும் பெருநகரம் அபிவிருத்தி மார்க்கங்கள் தொடர்பிலும் பேச்சுக்கள் நடைபெற்றன. அதன் பின்னர் ரணில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ற-5)

## கடத்தல் வழக்கில் சாட்சியான வெலகெதரவுக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, ஓக. 16
கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் வைத்து வெள்ளை வான்களில் கடத்திச் செல்லப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரின் கடத்தல்களின் தலைமைச் சாட்சியாளராகக் கருதப்படும் லெப்டினன் கொமாண்டர் கே.பி. வெலகெதரவுக்குத் தொடர்ச்சியான கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.
வெகதெரவின் பெற்றோர் ஊடாகப் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அதிகாரியான நிசாந்த சில்வாவுக்கு அறிவிக்கப்பட்ட பின்னரும் அச்சுறுத்தல் தொடர்கின்றது என்று கடற்படைத் தலைமையகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.
கடற்படையின் இராணுவ நீதிமன்றத்தால் வெலகெதரவுக்கு அவரது சேவை மூப்பை 4 ஆண்டுகள் குறைத்து தீர்ப்பு வழங்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அதனை நடைமுறைப்படுத்தாது தீர்ப்பை ரத்துச் செய்தார். சாட்சிகள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெலகெதரவுக்கு பாதுகாப்பு வழங்கவும் ஜனாதிபதி உத்தரவிட்டார். வெலகெதரவுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது செயற்படுத்தப்படவில்லை. இதனாலேயே அச்சுறுத்தல் தொடர்கின்றது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.
கொழும்பில் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டனர். அவர்கள் கடற்படையினரின் கொழும்பு முகாம் மற்றும் திருகோணமலை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.
திருகோணமலை முகாமில் கடமையாற்றிய வெலகெதர, கடத்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வாக்குமூலம் வழங்கினார். அந்த வாக்குமூலம் கடத்தல் வழக்கு விசாரணையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இதன் பின்னர் அவரது சாட்சி ஆவணங்கள் அடங்கிய அலுமாரி உடைக்கப்பட்டு அதிலிருந்த ஆவணங்கள் கடற்படைத் தளத்தினுள் கொள்ளையிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
"வெலகெதரவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரியவில்லை. கடற்படை முகாமுக்குள் இருப்பதால் அவரை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. அவருக்கு அச்சுறுத்தல் எதுவும் இருப்பின் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யமுடியும். சாட்சியாளராகச் செயற்பட அவருக்குப் பூரண உரிமை உள்ளது. தற்போது முகாமுக்குள் அவர் இருப்பதால், அது அவருக்குப் பாதுகாப்பானதே" என்று கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார். (ற-5)

## மனிதர் வாழ பொருத்தமற்ற இடங்களில் இலங்கை அகதிகள்

கொழும்பு, ஓக. 16
இலங்கை அகதிகள் மனிதர்கள் வாழப் பொருத்தமற்ற சூழ்நிலையில் இந்தியாவில் வாழ்கின்றனர் என்று மாவட்ட ஆட்சியர்களை மேற்கோள்காட்டி ரைம்ஸ் ஒவ் இந்தியா ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
இலங்கை அகதிகள் இந்தியாவில் பெரும் நெருக்கடிக்குள் வாழ்கின்றனர். அவர்கள் மனித அவலங்களை எதிர்கொள்கின்றனர். மாவட்ட ஆட்சியர்கள், இலங்கை அகதிகளின் முகாம்களுக்குச் சென்றபோது அவர்கள் மனிதர்கள்வாழப்பொருத்தமற்ற சூழ்நிலையில் வாழ்ந்து வருவதைக் காண முடிந்தது எனத் தெரிவித்தனர்.
பெருந்தோட்டங்களில் குடியேற்றப்பட்டுள்ள இலங்கை அகதிகள் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு அல்லல்படுகின்றனர் – என்றுள்ளது. (ற-5)

## இலங்கை - பாக். உறவு முக்கியத்துவம் மிக்கது

*அந்த நாட்டு நீதியரசர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 16
பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கான இருதரப்பு உறவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்வாறு பாகிஸ்தானின் தலைமை நீதியரசர் அன்வர் சாகீர் ஜமாலி தெரிவித்தார்.
பாகிஸ்தானின் தலைமை நீதியரசர் அன்வர் சாகீர் ஜமாலி இலங்கைக்குப்பயணம்மேற்கொண்டுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது–
இரு நாடுகளுக்குமிடையில் அபிவிருத்திச் செயற்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். நாட்டு மக்களிடையே நல்லிணக்கச் செயற்பாடுகளையும் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் [illegible] இலங்கை அரசின் செயற்பாடுகளைப் பாராட்டுகின்றேன் – என்றார். (ற-5)


எட்டாம் நாள் உள்வீதியுலா

## ஒன்பதாம் திருவிழா

### விடிவினைத்தர எம்முன் விரைந்துவா நல்லைவேலா

நல்லையின் தாக்கம் எங்கள் நாட்டினில் தெரிகிற தென்று
நம்புவோர் எண்ணுகின்றார் நன்றிதைப் பாருங்களேன்
குபேர வாசலைத் திறந்து குபேரபுரியாக்குகின்றான்
அபார வளர்ச்சி எங்கள் அடியவர் வாழ்வில் கூட

குடிசையில் வாழ்ந்தோரெல்லாம் மாடிகளில் வாழ்கின்றார்
கோடீஸ்வரர்களாகி தொடர்மாடிகள் எழுப்புகின்றார்
நாடியுன்னை வருவோர் தொகை நாளுக்கு நாளதிகம்
ஆனாலும் என்னவேலா ஆனந்தம் அமைதி எங்கே?

குடியொடு போதை காமம் கொலையொடு வழிப்பறியால்
அடிமைகள் போல மனதில் அமைதியற்ற வாழ்வுஐயா
அரக்கனை ஒழிக்க என்றே அவதரித்த துண்மையானால்
விடிவினைத் தர எம் முன் விரைந்துவா நல்லை வேலா.

– கவிமணி அன்னைதாஸன் ஊரெழு.

### நல்லை முருகன் ஏழைகளின் தெய்வம்

அலங்காரக்கந்தனானாலும் ஆடம்பரக்கந்தனானாலும்
அர்ச்சனைக்காக ஒற்றை ரூபா தான் எக்காலமும்
மாற்றமில்லை முருகா!
மாற்றமில்லா மனசு கொண்டவனே!
மனமிரங்கி வழிபடுவோருக்கு அள்ளிக் கொடுப்பவனே
யாவரும் நலமாய் வாழ வழிகாட்டுபவனே
யாமிருக்க பயமேன் என நல்வார்த்தை சொல்பவனே
எம் இன்னல்களைக் களைந்திடுவாய் நல்லூரானே!

– அரியாலையூர் செல்வி மிஷாந்தி செல்வராஜா

### ஈசனே நல்லூர் வாசனே

பல்லவி

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனை நம்பினேன் வாவா

சரணங்கள்

பண்ணினேர் மொழியாள் பாலசுப்பிர மணியா
எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும் வண்ணம் வாவா
(ஈசனே)

தாசனான யோகசுவாமி சாற்றும் பாவை
கேட்டுக் கிருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா
(ஈசனே)

– சிவத்திரு யோகசுவாமிகள்.




திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
சந்நிதி முருகன்
வேக்சொப் அன் சேவிஸ் ஸ்ரேசன்
Bajaj Spair Parts வடமாகாண
விற்பனை முகவர்
Rent a Car
இல.102, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயிலடி)
T.P.021 222 5202/ 021 222 8076
077 201 8275
(சி.242841) (13.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முல்லை மகளிர் நலன் கருதி வெள்ளம் வருமுன் அணை தேவை

**போர்** மற்றும் இயற்கை, செயற்கை இடர்களின்போது முதலில் பாதிக்கப்படுவோர் பெண்களும் சிறுவர்களுமே என்பது குறித்து இந்தப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டு இருந்ததை வாசகர்கள் நன்கறிவர்.

இப்போது வழமைபோன்று சிறுவர்கள் மற்றும் பெண்கள் குறித்த, மேலும் ஒரு அபாய அறிவிப்பு, பருத்துத் தடித்த வடிவத்தில் மேலுயர்ந்து உள்ளது.

அதுவும் கூட, போயும் போயும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கிளம்பி இருக்கிறது. அந்த மாவட்டத்தின் மக்கள் தமது வாழ்க்கையில் அடுத்துத் தொடுத்து பல வகைகளாலும் பாதிக்கப்பட்டவர்கள். இப்போது மீண்டும் நல்லாட்சி அரசு என்று தனக்குத்தானே நாமம் சூட்டியுள்ள இன்றைய அரசின் காலத்திலும் -- வேளையிலும்-- சொல்லொணா ஆபத்தில் அவர்கள் சிக்கி உள்ளதாகத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள், யுவதிகள், இப்போதெல்லாம் நாட்டின் நடைமுறையிலுள்ள சட்டத்தை மீறி உரிய தகுதிகள் பார்க்கப்படாது வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாக அனுப்பப்படுகின்றனர்

இந்த அடாத்தான செயற்பாட்டைத் தடுக்கும் பொருட்டு, மாவட்டத்தின் அரச அதிபர் (மாவட்டச் செயலாளர்) இது குறித்து, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு, அவசரமான அறிவித்தலை --கடிதத்தை-- அனுப்பி வைத்துள்ளார்.

இயற்கை இடர்களின்போதும், போர்க் காலத்திலும் முதலில் பாதிக்கப்படுவோர் சிறுவர்களும் பெண்களுமே என்ற வாய்ப்பாடு --

தென்னிலங்கை அரசுகளால் முல்லைத்தீவில் மாறி மாறி மனனம் செய்யப்படுவதால்--

இப்போதைய மேற்சொன்ன செயற்பாடு முற்று முழுதாகத் தடுக்கப்பட்டாக வேண்டும்.

மாவட்டச் செயலாளரது முறைப்பாடு குறித்து பிரதேசத்தின் மகளிர் அமைப்புகள் மிகுந்த கரிசனை காட்ட வேண்டும். அது தவிர்க்க முடியாத பணியும் ஆகும்.

மலையகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்றதால், பல குடும்பங்கள் சீரழிந்தமை, எமது பெண்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்.

ஓர் இனம் (எதிர்காலத்தில்) சிதைந்து அழிந்து போக வேண்டுமாயின், அதன் மகளிர் தரப்புகளினதும் சிறுவர்களினதும் எதிர்காலத்தை சூனியமாக்கினாலே போதும்.

எனவே, மேற்குறிப்பிட்ட விவகாரம் தொடர்பாக எங்கள் பிரதேசங்களில் இயங்கும் மகளிர் அமைப்புக்கள் கரிசனை காட்டி உழைக்க வேண்டும். இந்த விடயத்தை அவசர நிலை எனக் கருதிச் செயற்படுவது அவசியமும் அவசரமானதும் ஆகும்.

வெள்ளம் வருமுன்னர் தக்க அணையைக் கட்ட வேண்டும் என்ற, எங்கள் முந்தையர் வாக்கும் இது விடயத்தில் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

# நேரு குடும்பத்தின் செல்வாக்கு நலிவடைந்து செல்கின்றதா?

சேரலாதன்

இந்திய அரசியலில் நேரு குடும்பத்தின் செல்வாக்கு நிலைத்திருக்குமா என்ற சந்தேகம் தற்போது தோன்றியுள்ளது. அந்நியரின் வருகையால் இந்திய தேசம் அனுபவித்த இன்னல்கள் சொல்ல முடியாதவை. வெள்ளையர்களுக்கெதிரான இந்திய சுதந்திரப் போராட்டம் பல உயிர்களைக் காவு கொண்டது. இறுதியாக ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக மகாத்மா காந்தி தலைமையில் இடம்பெற்ற அகிம்சை வழியிலான போராட்டங்கள் நாட்டின் சுதந்திரத்துக்கு வழி வகுத்தன. காந்திக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் பலர். இவர்களில் ஜவகர்லால் நேரு பிரதானமானவர். சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்டு, நேரு பலமுறை சிறைத்தண்டனை அனுபவித்திருக்கிறார். இந்தியா சுதந்திரம் அடைந்ததும் சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரானார் ஜவகர்லால் நேரு. செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்த நேரு, தமது எளிமையான நடைமுறைகளால் இந்திய மக்களைப் பெரிதும் கவர்ந்தார். இதனால் இந்தியாவின் மாணிக்கம் என மக்களால் அழைக்கப்பட்டார். 1962ஆம் ஆண்டில் இடம்பெற்ற இந்திய-சீனப் போரில் இந்தியா தோல்வி அடைந்தது மட்டுமல்லாது, பெருமளவு நிலப்பரப்பையும் சீனாவிடம் இழந்தது. இதனால் பெரும் விரக்திக்குள் தள்ளப்பட்ட நேரு, நோய் வாய்ப்பட்டுச்சாவைத்தழுவிக்கொண்டார்.



### நேரு குடும்பம் அரசியல் செல்வாக்குமிக்கது

நேரு குடும்பம் என்றாலே இந்திய மக்கள் மத்தியில் ஒரு தனி மதிப்பு இன்றும் உள்ளது. மறைந்த இந்தியப் பிரதமரான இந்திரா காந்தி நேருவின் ஒரே புதல்வியாவார். இவர் தமது ஆளுமையால் இந்தியா முழுவதையும் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். 1971இல் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷைப் பிரித்துத் தனி நாடாக மாற்றினார். இலங்கைத் தமிழர்களின் விடயத்திலும் அவர் அக்கறை காட்டினார். இலங்கைத் தமிழர்களின் பக்கம் உள்ள நியாயத்தைப் புரிந்துகொண்ட இந்திராகாந்தி அம்மையார், தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியாவில் வைத்துப் பயிற்சிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டார். ஆனால், அவரது மெய்ப் பாதுகாவலரொருவரால் அவர் படுகொலை செய்யப்பட்டார். அவரது திடீர்ச் சாவு இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் பேரிழப்பாகவே கருதப்படுகின்றது. இந்திராவின் சாவைத் தொடர்ந்து, அவரது மூத்த புதல்வரான ராஜீவ் காந்தி இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் இவர் மேற்கொண்ட தவறான நடவடிக்கைகள் இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. அமைதிப்படை என்ற பெயரில் இவர் அனுப்பி வைத்த இந்தியப் படையினர், தமிழர் பகுதிகளில் புரிந்த அட்டூழியங்கள் வரலாற்றில் மறக்கப்பட முடியாதவை. ஈழத்தில் இருந்து இந்தியப் படையினர் பலத்த இழப்புக்களுடனும், அவமானத்துடனும் நாடு திரும்ப நேர்ந்தது. ராஜீவ்காந்தியும் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் 1991ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். இவரது கொலைக்கான மர்மம் இன்று வரை அவிழ்க்கப்படாத முடிச் சாகவே காணப்படுகின்றது. ராஜீவ் காந்தியின் சாவுக்குப் பின்னர், நேரு குடும்பத்தைச் சேர்ந்த எவரும் நாட்டின் தலைமைப் பொறுப்பில் அமர்ந்து கொள்ள முடியவில்லை. ராஜீவின் மனைவியான சோனியா, இத்தாலியில் பிறந்தவர் என்பதால் அவரால் பிரதமர் பதவியில் அமரமுடியவில்லை. காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியை அமைத்தபோது சோனியாவின் விசுவாசியான மன்மோகன்சிங் பிரதமர் பதவியில் அமர்த்தி வைக்கப்பட்டார். ஆட்சி யின் பின்புலத்தில் இருந்து அதிகாரத்தைச் செலுத்துவதற்கு மட்டுமே சோனியாவால் முடிந்தது. அதுவும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் முடிவுக்கு வந்து விட்டது. பாரதீய ஜனதாக்கட்சி தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்ததால் சோனியாகாந்தி வெறும் காங்கிரஸ் கட்சித் தலைவராக மட்டுமே செயற்பட நேர்ந்துள்ளது.

### மாற்றம் காணும் இந்திய அரசியல் கலாசாரம்

இந்தியாவில் தற்போது புதியதொரு அரசியல் கலாசாரம் தோன்றியுள்ளது. அனேகமான மாநிலங்களில் பிராந்தியக் கட்சிகளே ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டன. இதனால் தேசியக் கட்சிகள் மாநிலங்களில் காலூன்றுவது தடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் தமிழ் நாட்டில் இடம்பெற்ற சட்டமன்றத் தேர்தலில் மத்தியில் ஆட்சியமைத்திருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியால் ஓர் இடத்தில்கூட, வெற்றியீட்ட முடியவில்லை. தி.மு.க வு டன் கூட்டணி அமைத்த காங்கிரஸ் கட்சியால் எட்டுத் தொகுதிகளில் மட்டுமே வெல்ல முடிந்தது. தி.மு.கவின் தயவினால் தான் அதுவும் முடிந்தது. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் சோனியா காந்தியின் செல்வாக்கு மங்கி வருவதையே காணமுடிகின்றது. கட்சியின் துணைத்தலைவராக அவரது மகனான ராகுல்காந்தி பதவி வகித்து வருகின்றார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றியீட்டுமாயின், பிரதமர் பதவியை ஏற்பதற்கான வாய்ப்புக்கள் ராகுல்காந்திக்கே அதிகமுள்ளன.

இதன் மூலமாக மீண்டும் நேரு குடும்பத்தின் செல்வாக்கு உச்சத்துக்கு வந்துவிடும். ஆனால் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சி தலையெடுப்பதற்கான சாத்தியங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. அத்தோடு அந்தக் கட்சிக்குள் நேரு குடும்பத்துக்கு எதிரான போக்கும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் சோனியா குடும்பத்தினர் அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் தொடர்ந்தும் நீடிப்பதென்பது இயலாத காரியமாகவே இருக்கப்போகின்றது. நேரு குடும்பத்தின் சகாப்தம் ஓய்ந்து விடப்போவதையே இந்தியாவின் அரசியல் சூழ்நிலைகள் உணர்த்தி நிற்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கடந்த பின்னர் ஏற்பட்டுள்ள ஞானம்

ந.லோகதயாளன்

கண் பார்வை போனபின்னர் சூரிய நமஸ்காரம் செய்ய முயலும்நபரொருவரது நிலையிலேயே எமது யாழ்ப்பாணத்தின் முன்னாள் அமைச்சரின் அண்மைய கூற்றுக்கள் அமைந்துள்ளன. வடக்கின் அமைச்சராகச் சுமார் 20 ஆண்டுகள் பதவி வகித்த அவர், தேர்தல் வேளைகளில் மட்டுமே நில விடுவிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டு வந்ததை நாடே அறியும். அரசியல் கைதிகள் விடுதலை விடயம் தொடர்பில் அவர் ஒருபோதும் குரல் எழுப்பியதே கிடையாது. அவ்விடயம் வெளியில் பாரதூரமாக வரக்கூடாது என்பதற்காகவே தன் மீதான தாக்குதல் குற்றச்சாட்டில் சிறையில் வாடும் பெண் கைதிக்குப் பொது மன்னிப்பு வழங்குமாறு சட்டமா அதிபருக்கும் அறிக்கை இட்டதோடு அப்பணியை நிறுத்திக் கொண்டார்.

தற்போதைய சொல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு நாட்டில் மட்டுமன்றி, உலகின் பல பாகத்திலும் இருந்து குரல்கள் வலுத்து வரும்வேளையில், அந்த விடயத்துக்கு நான் தடையில்லை; சட்டமே தடை என்பதுபோன்ற கூற்றை மெய்ப்பிக்க, தன் மீது தாக்குதல் நடத்த முயன்றவரை மட்டும் விடுவித்து தனது நல்லெண்ணத்தின் அளவு ஒரு கைதியின் விடுதலை மட்டுமே என்று எல்லையை வரையறுத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதேபோன்று ஏறக்குறைய சேடம் இழுக்கும் நிலையில் உள்ள ஓர் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமானவர், ஒப்புக்கு நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலணியின் முன் கருத்துக் கூறியுள்ளார். வடக்கின் உறுப்பினர், ஆனால் வடக்கில் இடம்பெற்ற செயலணிகளின்முன், முன்னர் தோன்றவில்லை. அவ்வாறு தோன்றியும் கூறிய விடயங்கள் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை எட்டும் வகையில் அமையவில்லை. சில பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டியிருப்பதாகவும், தமிழ் அரசியல் கைதிகள் பொது மன்னிப்புடன் விடுவிக்கப்படவேண்டுமெனவும், பாதுகாப்பு தரப்பு வசமுள்ள பொது மக்களின் காணிகள் முழுமையாக மீளக் கையளிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். தமிழர் பிரதேசங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போர் வெற்றி அடையாளங்கள் அகற்றப்பட்டு, மக்கள் மனங்களில் போர் வடுக்கள் இல்லாமல் செய்யப்பட வேண்டும் போன்ற கருத்துக்களையும் அவர் செயலணியில் முன் வைத்ததாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

போர் முடிவுற்றது 2009இல். இதன் பின்னரும் 2015வரையும் அமைச்சரின் ஆசனத்திலேயே அலங்காரம். ஆக, போர் முடிந்தும் ஆறு வருடங்கள் அதிகார வர்க்கத்துடன் ஒட்டியிருந்த காலத்தில், ஒப்புக்கேனும் வாய் திறக்காதவர், ஆட்சியின் நாற்காலிக் கால் முறிந்து வீழ்ந்த பின்னர் கொக்கரிக்கின்றார். இது ஒருவகையில் கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போன கதையாகவே உள்ளது. அமைச்சராக இருந்தபோது சாதிக்க முடியாத விடயங்களைச் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மூலம் சாதிக்கத் துடிக்கின்றார். இங்கே மற்றுமோர் விடயமே தமிழ் மக்களின் நெஞ்சை உறுத்தும் விடயமாகவுள்ளது. அதாவது, தமிழர் பிரதேசங்களில் காட்சிப்

> போர்ச் சின்னங்களை ஒத்த அமைவிடமாகவே மக்களது மனங்களில் ஸ்ரீதர் தியேட்டரும் உள்ளது . இராணுவ வலயத்தை ஒத்த அமைப்பில் வடிவமைக்கப்பட்ட இந்தத் தியேட்டரின் உரிமை தொடர்பில் எழும் சர்ச்சைக்கு அப்பால், இந்தத் தியேட்டரில் இருந்த காலத்தில் எமது உறவுகளை அள்ளிச் சென்றோர், இன்றும்–அதே தியேட்டரில் உள்ளனரே என உறவுகள் கதறுகின்றனர். இதனால் இந்த நினைவுச் சின்னம் உருவம் மாற்றி அமைக்கப்பட்டு, பொழுதுபோக்கு மையமாக மாற்றப்படும் வரைக்கும், இந்தத் தியேட்டரின் பெயரால் பறி போன ஆத்மாக்களின் உறவுகளைப் பொறுத்தவரை இது ஓர் கொலைக் களமாகவே காட்சி தரும் என்பதில் சந்தேகம் இல்லை.

படுத்தப்பட்டுள்ள போர் வெற்றி அடையாளங்கள் அகற்றப்பட்டு, மக்கள் மனங்களில் போர் வடுக்கள் இல்லாமல் செய்யப்பட வேண்டும். இதனை அகற்றியே ஆகவேண்டும் என்பது ஆணைக் குழுக்களின் விசாரணைகளின்போது தமிழர்கள் தரப்பால் வலியுறுத்தப்படும் விடயமே. இதற்கு மேலாக நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு என்பனவற்றுடன் தற்போதைய செயலணிவரை பங்கு கொண்டவர்களில் பலர் எமது பிள்ளைகளை ஸ்ரீதர் தியேட்டரில் கண்டேன் , அங்கிருந்தவர்கள் தாமே அழைத்து வந்ததாகக் கூறினர், பிடித்தவர்களை மறுநாள் ஸ்ரீதர் தியேட்டரில் கண்டேன் எனக் கதறினரே. இப்போது வரை ஸ்ரீதர் தியேட்டரின் நிர்வாகியாகவுள்ள அவர் இது தொடர்பில் இந்தச் செயலணிமுன் வாய் திறந்திருக்கலாமே எனவும் பிள்ளைகளைப் பறிகொடுத்த நெஞ்சங்கள் குமுறுகின்றன.

போர்ச் சின்னங்களை ஒத்த அமைவிடமாகவே மக்களது மனங்களில் ஸ்ரீதர் தியேட்டரும் உள்ளது . இராணுவ வலயத்தை ஒத்த அமைப்பில் வடிவமைக்கப்பட்ட இந்தத் தியேட்டரின் உரிமை தொடர்பில் எழும் சர்ச்சைக்கு அப்பால், இந்தத் தியேட்டரில் இருந்த காலத்தில் எமது உறவுகளை அள்ளிச் சென்றோர், இன்றும்–அதே தியேட்டரில் உள்ளனரே என உறவுகள் கதறுகின்றனர். இதனால் இந்த நினைவுச் சின்னம் உருவம் மாற்றி அமைக்கப்பட்டு, பொழுதுபோக்கு மையமாக மாற்றப்படும் வரைக்கும், இந்தத் தியேட்டரின் பெயரால் பறிபோன ஆத்மாக்களின் உறவுகளைப் பொறுத்தவரை இது ஓர் கொலைக் களமாகவே காட்சி தரும் என்பதில் சந்தேகம் இல்லை.

செயலணிகள், ஆணைக்குழுக்கள் என்பவை வெறுமனே ஒருவர் கூறும் கூற்றை மட்டுமன்றி, அந்தச் செய லணியிடம் உள்ள சந்தேகங்களையும் கேட்டுத் தீர்க்கும் அல்லது அறிக்கையிடும் அதிகா ரம் அற்றவையா என்ற கேள்வியும் இதன் மூலம் எழுகின்றது. ஏனெனில் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துத் தொடர்பாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது தரப்பு நியாயம் இருப்பின் கூறலாம். ஆனால் பாதிப்பை ஏற்படுத்தியவர் என நேரடியாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கூற்றையும், சமநிலையில் ஏற்பதன் மூலம் இங்கே ஓர் சந்தேகம் எழுப்பப்படும் என்பதை இவர்கள் அறியாமல் உள்ளனரா?

இவ்வாறு தமிழ் மக்களின் அழிவுச் சின்னங்கள், சிங்கள இராணுவத்திடம் மட்டுமல்ல, தமிழர் எனச் சொல்லப்படும் தரப்புக்களிடமும் உள்ளன. அவற்றை அகற்ற முன்வராதவர்கள் மறுமுனையில் உள்ளவர்களிடம் அவற்றை அகற்றக் கோருவது வெறும் வாய்ப்பேச்சு அரசியலுக்கும், தமது வாக்கு வங்கியை நிரப்புவதற்குமான எத்தனம் என்பதை இத்தனைகால அனுபவத்தில் அறியாதவர்கள் அல்ல தமிழ் மக்கள்.

## மாணவர்களும் பெற்றோர்களும் கவனம் செலுத்துதல் அவசியம்

இவ்வாண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் முடிவுக்கு வருகின்றன. இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதி சாத்தியப்படாதென நினைக்கிற மாணவர்களை இலக்கு வைத்து தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் தத்தமது வேட்டையைத் தொடங்கிவிடுவது வழக்கம். குறிப்பாக கணிதப்பிரிவினருக்கு பொறியியல் சம்பந்தப்பட்ட துறைகளில் பட்டப்படிப்பு என ஆசை காட்டப்படும். இது பற்றிப் பெற்றோர்களும் மாணவர்களும் அறிவுபூர்வமாகச் சிந்திக்கவேண்டும். அறிவும் செய்முறைகளும் தேவைப்படும் இக் கல்வியைக்குறுகிய காலத்திலும் குறுகிய வழியிலும் கற்பிக்க இயலுமா? பெயருக்கு சான்றிதழ் என்று தரப்பட்டாலும் துறைசார்ந்த அறிவு கிடைக்குமா? அதற்கான அங்கீகாரம் இருக்குமா? தொழில் கிட்டுமா என்பவை பற்றி ஆலோசிக்க வேண்டும்.லட்சக்கணக்கில் பணத்தைக்கட்டி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வீணாக்குதல் புத்திசாலித்தனமானதா எனப் பெற்றோர்களும் மாணவர்களும் சிந்திப்பது நல்லது. தற்போது யாழ்ப்பாணத்தில் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகக்கல்லூரி போன்ற மூன்றும் இயங்குவது எம் பிள்ளைகளுக்குக் கிடைத்த பெரிய வாய்ப்பாகும். அதுவும் பொறியியல் கணிய அளவீடு போன்ற தரமும் அங்கீகாரமும் வாய்ந்த கல்வி நெறிகளை இவை வழங்குகின்றன. இவற்றுடன் தொழிற் பயிற்சிச் சபை, திறந்த பல்கலைக்கழகம் போன்றவையும் உள்ளன. இவற்றை நாம் பயன்படுத்திக் கொள்வது தான் அறிவுடமையாகும்.

சி.சந்திரசேகரம்
(ஓய்வு பெற்ற பொறியியலாளர்)
உரும்பிராய்.

## குடிதண்ணீர் விநியோகம் ஏன் நிறுத்தப்பட்டது?

ஏழாலை சிவகுரு வீதியில் வசிக்கும் மக்களாகிய நாம், எமது பகுதிக் கிணறுகளில் உள்ள நீரில் ஒயில் படிவு இருப்பதன் காரணமாக மாகாணசபையாலோ பிரதேச சபையாலோ நீர்த்தாங்கி மூலம் விநியோகிக்கும் குடி தண்ணீரையே பயன்படுத்தி வந்துள்ளோம்.

ஆனால் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக குடிதண்ணீர் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படுவதில்லை.

இதனால் சிறுவர்கள், பெரியோர்கள் சிற்சில நோய்த்தாக்கங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஒயில் படிவற்ற நீரைப் பெற்றுக் கொள்ள வேறு இடத்துக்குச் சென்று குடிதண்ணீரைப் பெறமுயலும் போது அந்தப் பகுதி மக்கள் அதனை ஆட்சேபித்து எம்முடன் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர்.

இதனால் நாம் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளோம். இடம்பெற்று வந்த குடி தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை.

எனவே இதனை ஒரு அவசர மனிதாபிமானப் பிரச்சினையாகக் கருதி இந்த வீதியில் வசிக்கும் மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள இந்த விடயத்துடன் தொடர்புடைய தரப்புக்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வேண்டிக் கொள்கிறோம்.

பாதிக்கப்பட்ட ஏழாலை
சிவகுரு வீதி வாழ் பொதுமக்கள்.


வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 68 வருட காத்திருப்புக்கான பலன் பியூர்டோரிகாவுக்கு முதல் தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில், பெண்கள் பிரிவு ஒற்றையர் ரென்னிஸ் போட்டியில் பியூர்டோரியா நாட்டு வீராங்கனை மோனிகா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஒலிம்பிக் வரலாற்றில் அந்த நாடு பெற்ற முதல் தங்கமாக இது பதிவானது.

நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், ஜேர்மனியின் கெர்பரும், பியூர்டோரிகாவின் மோனிகாவும் பலப்பரீட்சை நடத்தினர். கிராண்ட்ஸ்லாம் சம்பியன்களான கார்பின் முகுருசா (காலிறுதியில்), கிவித்தோவா (அரையிறுதியில்) ஆகியோருக்கு 'தண்ணி' காட்டிய மோனிகா, கெர்பருக்கும் அதிர்ச்சி வழங்கினார். முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் மோனிகா. இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார் கெர்பர். முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் 1:1 என்றிருந்தனர். மூன்றாவது செற்றிலேயே வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அந்த செற் மோனிகாவின் கட்டுப்பாட்டிலேயே முழுவதுமாக இருந்தது. 6:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் மூன்றாவது செற்றைக் கைப்பற்றிய மோனிகா, 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று, தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். 1948 ஆம் ஆண்டு முதல் ஒலிம்பிக்கில் பங்கேற்று வரும் பியூர்டோரிகோ நாடு, இதுவரை 2 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது. மோனிகா வென்ற தங்கப் பதக்கமே ஒலிம்பிக் தொடரில் பியூர்டோரிகாவுக்குக் கிடைத்த முதல் தங்கப்பதக்கமாகும். (ம)






# நெருப்புடா... நெரு
# மீண்டும் நிரூபித்த


## 25 மீற்றரில் கேத்லின் சுருண்ட

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் குறுந்தூர ஓட்டத்தில் உலகச் சம்பியனான உசைன் போல்ட் மீண்டும் தன்னை நிரூபித்துத் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

9 செக்கன்கள் 81 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்தே போல்ட் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். அவரைவிட 8 மில்லி செக்கன்கள் பின்தங்கிய அமெரிக்க வீரர் கேத்லின் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். இதன்படி அவர் 9 செக்கன்கள் 89 மில்லி செக்கன்களை எடுத்துக்கொண்டார். கனடாவின் அன்ரே டி கிராசி 9 செக்கன்கள் 91 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து, வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

**இறுதி 25 மீற்றர்கள்**

போட்டியின் முதல் 75 மீற்றர்கள் வரை கேத்லினே ஆதிக்கம் செலுத்தினார். அப்போது போல்ட் நான்காவது இடத்திலிருந்தார். இறுதி 25 மீற்றர்களிலேயே போல்ட் தனது வேகத்தை அதிகரித்து, தான் உலகச் சம்பியன் என்பதை ரியோவிலும் நிரூபித்தார்.




# ரியோ ஒலிம்பிக் தொடரிலிருந்து சாய்னா நேவால் வெளியேற்றம்

ரியோ ஒலிம்பிக்கில் நேற்று நடை பெற்ற பெண்களுக்கான தனிநபர் பூப்பந்தாட்டப் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் தோல்வியடைந்து வெளியேறினார்.

சாய்னா நேவாலும், உக்ரைன் வீராங்கனை மரியா யுட்டிலினாவும் பலப்பரீட்சை நடத்தினர். இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் வீராங்கனை காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்கு முன்னேறக்கூடிய நிலை இருந்தது. ஆட்டத்தின் முதல் செற்றை 21:18 என்ற புள்ளிகள் அடிப்படையில்



கைப்பற்றிய மரியா, அடுத்த செற்றிலும் ஆதிக்கம் செலுத்தினார். இரண்டாவது செற்றும் 21:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் மரியாவின் வசமாக, முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுக் காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்கு முன்னேறினார். பதக்கப்பட்டிய [illegible] பதக்கம் வெல் [illegible] இந்தியாவின் கனவு, சாய்னா நேவாலின் மூலமும் நிறைவேறவில்லை. (ம-ரி4)

# ஆண்களுக்கான வி

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு வில்வித்தையில் தென் கொரியாவுக்குத் தங்கம் கிடைத்தது.

தங்கப் பதக்கத்துக்காக நடைபெற்ற போட்டியில் தென்கொரியாவின் குபொன் ஜான், பிரான்ஸின் சாள்ஸ் இருவரும் மோதினர். இதில் 7:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் குபொன் ஜான் தங்கம் வென்றார். பிரான்ஸ் வீரருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் நெதர்லாந்தின் வான் பேர்க்கை எதிர்த்து அமெரிக்காவின் எலிஸ்ரன் மோதினார். 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் எலிஸ்ரன் வெண் கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ருங்குடா...
# தார் போல்ட்
## ண்ட கதை



**ஏளனச் சிரிப்பு**

ரியோ ஒலிம்பிக் தொடரில் உசைன் போல்ட்டை தான் வீழ்த்துவேன் என்று கேத்லின் ஏற்கனவே அறிக்கைகள் பலவற்றை அள்ளி விளாசியிருந்தார். இதற்கு ஏற்றால்போல் தெரிவுச் சுற்றிலும் போல்ட்டைவிட, கேத்லின் சிறந்த பெறுபேற்றை (கேத்லின் 10 செக்கன்கள் 01 மில்லிசெக்கன், போல்ட் 10 செக்கன்கள் 07 மில்லி செக்கன்) வெளிப்படுத்தியிருந்தார். எனவே கேத்லின் உலகச் சம்பியன் ஆவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. போல்ட்டை கேத்லின் வீழ்த்தலாம் என்று கருதப்பட்டது. இந்த நிலையில் தான் சம்பியனான பிற்பாடு, போல்ட், கேத்லினைப் பார்த்து 'தானே ராஜா' என்று சொல்லாமல் சொல்லும் விதமாக ஏளனமாகச் சிரித்தார். இதற்கு கேத்லின் எந்த விதமான துலங்கல்களையும் வெளிப்படுத்தவில்லை.

**நூலிழையில் தப்பிய கேத்லின்**

ரியோவில் தங்கத்தைக் கைப்பற்றுவேன் என்று கடந்த இரு வருடங்களாக தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்த கேத்லின், வெள்ளிப்பதக்கத்தையேனும் கைப்பற்ற முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். அவர் நுலிழையில் தப்பிப்பிழைத்தார். மூன்றாமிடத்தைப்பிடித்த கனடா வீரர் அன்ரே டி கிராசிக்கும், கேத்லினுக்கும் இடையே இரண்டு மில்லி செக்கன்களே வித்தியாசம் இருந்தது. (ம-ரி4)

# 10000 மீ. ஓட்டப் போட்டியில் பிரிட்டனுக்கு தங்கப் பதக்கம்

பிரிட்டனின் நெடுந்தூர ஓட்ட வீரர் பராக் ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்று, தனது உலகப்பட்டத்தை தக்கவைத்துள்ளார். நெடுந்தூர ஓட்டங்களில் கெய்னா, எத்தியோப்பியா, ஜமைக்கா போன்ற நாடுகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற போதிலும், கடந்த சில வருடங்களாக பராக் பிரிட்டனைப் பிரதிநிதித்துவம் செய்யத் தவறுவதில்லை. 2012 ஆம் ஆண்டு லண்டனின் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் 5 ஆயிரம், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டங்களில் பராக் தங்கம் வென்றிருந்தார். ஆனால் இந்தத் தங்கப் பதக்கங்கள் பன்னாட்டு அங்கீகாரத்தை பெறவில்லை. பராக்கின் சொந்த நாட்டில் தொடர் நடைபெற்றதால் இது அவருக்குச் சாத்தியமானது என்று சில தரப்பினர் தெரிவித்தனர். இந்த நிலையில் ரியோவில் தன்னை நிரூபிக்க வேண்டிய ஒருவித கட்டாய நிலை பராக்குக்கு இருந்தது.

மட்டுமல்லாமல் ரியோ ஒலிம்பிக் தொடரிலும் பதக்கம் வென்றால் அது பராக்கின் ஹற்றிக் பதக்கமாக அமையும் என்பதால், அவர் மீது அதிக எதிர்பார்ப்புக்கள் இருந்தன. இந்த நிலையில் ரியோ ஒலிம்பிக் தொடரில் தங்கம் வென்றதன்மூலம், அவர் தன்னை நிரூபித்துக் காட்டியுள்ளதாகக் கருதப்படுகிறது. பிரிட்டனின் ஓட்டப் பந்தய வீரர் ஒருவர் நெடுந்தூர ஓட்டப் பந்தயத்தில் மூன்று தங்கம் வெல்வது இதுவே முதல் தடவை. (ம-ரி4)



# ஏன் இந்த ஆர்வக் கோளாறு?

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற சைக்கிளோட்டப் போட்டியில் நெதர்லாந்து வீராங்கனை ஒருவர், சக வீராங்கனைகளுக்கு விபத்தை ஏற்படுத்தும் வகையில் ஆக்ரோசமாகச் செயற்பட்டமை பெரிதும் பரபரப்பை ஏற்படுத்தியது.

போட்டியின் முடிவுக் கட்டத்தில் ஆறாவதாகச் சென்றுகொண்டிருந்த லூரின் வான் ரெய்சன் என்ற குறித்த வீராங்கனை சகபோட்டியாளரை முந்துவதற்காக தடுப்புப் பலகை மீது சைக்கிளைச் செலுத்தினார். இதனையடுத்து நியூசிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் வீராங்கனைகள் விபத்துக்குள்ளாயினர். ஆனால் வான் ரெய்சன் விபத்தில் சிக்கவில்லை. இருப்பினும் அவரால் நான்காம் இடத்துக்கே வரமுடிந்தது. (ம-ரி4)






# மரதனில் தங்கம் வென்றது கென்யா

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான மரதனில் கென்யாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 2 மணித்தியாலம் 24 நிமிடங்கள் 04 செக்கன்களில் அடைந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார் கென்ய வீராங்கனை ஜெமிமா. பக்ரைன் விராங்கனை கிர்மா, 2 மணித்தியாலம் 24 நிமிடங்கள் 13 செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், எத்தியோப்பிய வீராங்கனை திபாபா 2 மணித்தியாலம் 24 நிமிடங்கள் 30 செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

ஒலிம்பிக் வரலாற்றில் பெண்கள் பிரிவு மரதனின் கென்யாவுக்குத் தங்கம் கிடைப்பது இதுவே முதல் தடவை. (ம-ரி4)

# ஒலிம்பிக்கை உலுக்கும் கொள்ளைச் சம்பவங்கள்

அமெரிக்க நீச்சல் வீரர்கள் நான்கு பேரிடம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒலிம்பிக் கிராமத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

லொசெட், கன்னர் பென்ஸ், ஜக் கொங்கர் மற்றும் ஜிம்பி பெய்ஜின் ஆகியோரே அவ்வாறு கொள்ளைச் சம்பவங்களில் சிக்கிய வீரர்களாவர். இவர்கள் அனைவரும், ரியோ டி ஜெனிரோ நகரில் உள்ள ஓர் ஆடம்பர விடுதியொன்றுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த போதே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வரும் ரியோ டி ஜெனிரோ நகரில் கிட்டத்தட்ட 90 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த உயர்மட்டப் பாதுகாப்பையும் தாண்டி அங்கு அவ்வப்போது தொடர்ச்சியாகப் பல அசம்பாவிதங்கள் அரங்கேறி வருகின்றன. சில தினங்களுக்கு முன்னர், ஆஸ்திரேலிய வீரர் ஒருவர் தாக்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. (ம-ரி4)

# வில் வித்தையில் தென்கொரியாவுக்குத் தங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? கன்னி

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

## உத்தரம் 2, 3, 4 பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 பாதங்கள் வரை



தாய்வழி ஆதரவு உண்டு. ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிட்டும்.

குரு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை): கூட்டாளிகள் பகையாகலாம். குடும்ப உறவில் விரிசல் ஏற்படலாம். பதவி மாற்றங்களும், இடமாற்றங்களும் பரிசீலிக்கப்படாமலேயே வந்து சேரும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கை விரிப்பர். ஆரோக்கிய குறைபாடு அதிகரிக்கும். வழக்குகள் திசைமாறிச் செல்லும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் கன்னி ராசிக்காரர்களாக இருந்தால், இந்தக் காலத்தில் அவரவர்களுக்கு உரிய வழிபாடுகளை மேற்கொள்வது வளர்ச்சியைப் பாதிக்காது.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

கன்னி ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குருப் பெயர்ச்சி, நல்ல பலன்களை வழங்கப் போகிறது. குடும்பத் தகராறுகள் அகலும். உறவினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பிள்ளைகளின் கல்விக்கு சிறந்த வழியை ஏற்படுத்திக் கொடுப்பீர்கள். நீண்ட நாள் பேசியும் முடிவடையாத சில சுபகாரியப் பேச்சுக்கள் திடீரென முடிவிற்கு வரும். கணவன்–மனைவி ஒற்றுமை பலப்படும். உத்தியோகத்தர்களுக்கு வரும் மாற்றங்கள், நல்ல மாற்றங்களாகவே அமையும். பணிநிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு தலைமைப் பதவியை தக்கவைத்துக் கொள்ள பெரும் முயற்சி எடுக்கும் சூழ்நிலை உருவாகலாம். அனுமன் வழிபாடு உங்கள் பயத்தைப் போக்கும். சனிக்கிழமை விரதமிருந்தால் சஞ்சலம் தீரும். சந்தோசம் சேரும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் நல்ல பலன்கள் நடைபெறும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் அடையும்பொழுது, அதிக கவனம் செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். புதிய திருப்பங்கள் தோன்றும். பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர். நல்லவர்கள் உங்களை நாடி வந்து சேருவர். வீடு வாங்கும் முயற்சி வெற்றிபெறும். வருமானம் திருப்தி தரும். நண்பர்கள் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுவர். நாட்டுப் பற்றுமிக்கவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவோடு பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவற்றை அடைவீர்கள். திருமண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குரு அதிசாரமாக துலாம் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் ராசிக்கு 6,8,10 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

வாரம் தோறும் புதன்கிழமை வராஹி அம்மன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். புதுக்கோட்டை மாவட்டம் பில்லமங்கலத்தில் உள்ள மகிஷாசுர வர்த்தினியின் அவதாரமாக விளங்கும் பொன்னழகி அம்மனை வழிபட்டால், பொன்னும், பொருளும், புகழும் பெருகும்.

(தொடரும்)

---

உடுவிலூர் கலா

# தையலரே தையலராகுங்கள்

இன்றைய ஆடம்பர உலகில் ஆடைவடிவமைப்பு மிகமிக முக்கியமானது. ஓர் ஆடையின் பிரசவம் என்பது தையற்கலையின் பிரசவமாகும். மனித வாழ்வின் அடிப்படைத்தேவைகளுள் ஒன்றான ஆடை தையற்கலையினாலேயே நிறைவாகின்றது. தையற் கலையானது பெண்களுக்குரிய கலையாகும். நாளாந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் மனிதன் வருமானத்தை ஈட்டப் பல சுயதொழில்களில் ஈடுபடுகிறான். பெண்கள் வீட்டிலிருந்தவாறு தமது நாளாந்த கடமைகளைச் செய்து கொண்டு குடும்ப நிர்வாகத்தையும் கவனித்து பகுதிநேரமாகச் செய்யக் கூடிய தொழில் தையல் ஆகும். இன்றைய பெரும்பாலான பெண்களின் வாழ்வாதாரமாக தையல்தொழில் உள்ளது நாமறிந்ததே.

தையல் ஒரு தொழில் மட்டுமல்ல, நாகரிகத்தை பறைசாற்றி நிற்பதுவும் தையலே. ஒரு பெண்ணுக்கு மணமகனைத் தேடும்படலம் ஆரம்பிக்கும்போது தையல் மேலதிக தகமையாக கொள்ளப்படும். அதுமட்டுமல்ல புலம்பெயர் தமிழரைத் திருமணம் செய்து அங்கு நிரந்தரமாகக் குடியேறவுள்ள எமது பெண்களும் தையலைக் கற்று தேர்ச்சிபெற்றுச் செல்வது குறிப்பிடத்தக்கது. இலங்கைக் காசுப் பெறுமதிக்கு மூவாயிரத்துக்கு மேல் ஒரு சாறிச் சட்டைக்கு அறவிடுவதும் தையற்காரர் அரிதாக உள்ளதும் இதற் கான காரணமாகச் சொல்லப்படுகிறது. தையல் சிறந்த கலை. ஆடை ஒருவரது அழகை முழுமை அடையச்செய்கிறது. பெண்களுக்கான ஏராளமான தொழில்கள் இருந்த போதும் தையல் பெண்களுக்குக் கௌரவத்தையும் மதிப்பார்ந்த உயர்நிலையும் வழங்குகிறது என்றால் மறுப்பதற்கில்லை.

அழகினை அழகுபடுத்துவது தையல். "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு" என்னும் குறள் போல தைக்கத் தைக்க பெரும் தையற் கலைஞர் ஆகிவிடலாம். ஒருவருக்கான ஆடையை சரிவரத் தைத்து அவரது மனம் திருப்தி அடையும்போது நாமும் திருப்தி அடைகிறோம். தையலுக்கு எம் சமுதாயத்தில் பெரும்மதிப்பு உண்டு.

> வறுமை காரணமாகவும் கல்வியில் முழுமையான நாட்டமின்மையாலும் தையலைப் பழகும் பெண்பிள்ளைகள் அதனைப் முழுமையாக மனவிருப்புடன் கற்க வேண்டும்

சாறிச்சட்டை சாதாரணமாக முந்நூற்றைம்பது ரூபா தொடங்கி ஆயிரம் ரூபாவுக்கு மேற்கூட தைக்கப்படுகிறது. அழகாக நேர்த்தியாகத் தைக்கப்பட்ட சாறிச்சட்டை மிகச் சாதாரண சாறிகளைக்கூட அழகாக எடுத்துக்காட்டும் (Disigning Saree blouse) பிரபல்யமடைந்து விட்டன. (Disigning blouse) அதிக வருமானத்தைப் பெற்றுத்தருவது மட்டுமல்ல ஒருவரது கலைத் திறமையை வெளிப்படுத்துவதும் கூட. சுடிதார், சாறிச் சட்டை போன்ற ஆடைகளை நேர்த்தியாகவும் தைக்கும் தையற்காரரை வாடிக்கையாளர் தேடி அலைகின்றனர். தையலை தொழிலாகக் கொள்வோர் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப புதிய உத்திகளைக் கையாண்டு நுட்பங்களோடு தைக்க வேண்டும். மதிநுட்பமான மாற்றங்கள் தைய லில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.

வறுமை காரணமாகவும் கல்வியில் முழுமையான நாட்டமின்மையாலும் தையலைப் பழகும் பெண்பிள்ளைகள் அதனைப் முழுமையாக மனவிருப்புடன் கற்கவேண்டும். தையல் பழகுவோரும் சரி, பெற்றோரும் சரி செய்யும் பெரும் தவறு அடிப்படையிலிருந்து தையலைப்பழக விரும்புவதில்லை. எந்த ஒரு தொழிலும் அடிப்படையில் இருந்து கற்பதே தொழில் விருத்திக்குத் தெளிவான அறிவைப் பெற உதவும். தையலும் இதற்கு விதிவிலக்கல்ல. தைய [illegible] தைத்தால்போதும் என தையல் பழகுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதால் தையல் வகைகள் அருகி விடுகின்றன. தையலில் அடிப்படைத் தையல், அலங்காரத்தையல், நுட்பத்தையல் என மூன்று வகை உள்ளன. இவை பற்றிய முழுமையான அறிவைப் பெற்றுத் தைப்பது நேர்த்தியான தையலுக்கும் தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ளவும் உதவும் என்பது எனது கருத்து. தைப்பவர்கள் எவராக இருந்தாலும் ஆழமான அறிவைப் பெற்றுக் கொள்வது அவரவர் வளர்ச்சிக்கு பெரும் துணையாகும். பெண்களே! நேரத்தை வீணாக்காது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி வாழுங்கள். தையலைக் கற்று வருமானம் பெருக்காவிட்டாலும் உங்களது தேவைக்காவது தைத்து செலவைக் குறைக்கலாம். வாழ்வில் ஏற்படுகின்ற அதிரடித் திருப்பங்களை மனதில் ஏற்படும் ரணங்களை ஆற்றும் மருந்தாகத் தையல் உள்ளது என்பதை ஒவ்வொரு பெண்களும் உணர்ந்து கொள்ளவேண்டும். தையலை தொழிலாகச் செய்வதற்கு பெருந்தொகைப்பணம் முதலீடு செய்யத் தேவையில்லை. குறைந்த செலவில் ஒரு தையல் இயந்திரத்தையும் தையல் பற்றிய தெளிந்த அறிவையும் பெற்றுக்கொண்டு துணிந்து தைக்கவேண்டும். சிலர் வருடக் கணக்கில் தைத்தாலும் நேர்த்தியாகத் தைக்க முடிவதில்லை. இவர்கள் தையல் பற்றிய தேடலோடு தைக்கவேண்டும். கலை உணர்ச்சிகளை வளர்க்க வேண்டும். தன்னம்பிக்கையோடு வாழ்வை எதிர்கொள்ள தையல் தொழில்போதுமானது. கலைஉணர்வுள்ள தையற்கலைஞரின் கைவண்ணத்தில்அழகானஆடைகள்உருவெடுக்கின்றன. துணியை வெட்டி அழகாகத் தைக்கத் தொடங்கும்போதுதான் அத் துணி அழகு பெறுகிறது. ஒருவரது தேவையைப் பூர்த்தி செய்கிறது. ஆடை என்பது தற்காலத் தில் மட்டுமல்ல எந்தக் காலத்திலும் மனிதனோடு ஒட்டி உறவாடுவது.

சாதாரணமான தையற்தொழில் செய்பவர் யாராயினும் தேடலோடு தைக்கவேண்டும். துல்லியமான அளவீடு, நேர்த்தியான தையல், தொடர்ச்சியான பயிற்சி இவை மூன்றுமே படைப்பாற்றல் மிக்க தையற் கலைஞரின் அடிப்படைத்தகுதிகள். இன்று பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் தையலைத் தொழிலாகச் செய்கின்றனர். ஆக பெண்களே! பொன் போன்ற நேரத்தை பயனுள்ளதாக்குங்கள். பெண்களுக்குத் தையல் என்றொரு பெயரும் உண்டு. நேரத்தைப் பயனுள்ளதாக்கவும் உங்கள் தேவையை நிறைவேற்றவும் தையலைக் கற்றுக் கொள்ளுங்கள். வேலை செய்யும் பெண்கள் ஆயினும் சரி வீட்டிலிருக்கும் பெண்களாயினும் சரி தையலைக் கட்டாயம் கற்க வேண்டும். தையலரே இன்றே நீங்கள் தயாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிப்பாரா இரோம் ஷர்மிளா?

நேற்றைய தினம் வெளியான இரும்புப் பெண்மணியான இரோம் ஷர்மிளா என்ற கட்டுரையின் தொடர்ச்சி.....

அவரது இரண்டாவது முடிவு குறித்து மக்களிடையே இருவிதமான கருத்துக்கள் உருவாகியிருக்கின்றன. திருமணம் செய்துகொள்ளப்போவதாக ஷர்மிளா முடிவெடுத்திருக்கிறார். தேர்தலில் போட்டியிடும் முடிவென்பது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான ஒரு அறிகுறி என்றால், திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற அவரது ஆர்வம் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான இன்னொரு பயணம். ஏனெனில், மணிப்பூரில் இந்த இயல்பு வாழ்க்கை காணாமற் போய்த்தான் 50 ஆண்டுகள் ஆகின்றன. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட வேண்டும் என்ற அவரது ஆர்வம், ஷர்மிளாவின் அரசியல் உறுதியைப் பலவீனப்படுத்திவிட்டது என்று சொல்லப்படுவது உண்மையல்ல.

ஓராண்டுக்கு முன்பு அவரை நேர்காணல் செய்திருந்தேன். ஆயுதப் படைச் சிறப்பு அதிகாரச் சட்டம் திரும்பப் பெறப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று நான் கேட்டேன். அவர் சிரித்தார், உண்மையில், அதை நினைத்துக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

"திருமணம் செய்துகொண்டு, சாதாரணமான ஒரு பெண்ணைப் போல அதற்குப் பிறகு வாழ விரும்புகிறேன்" என்றார். தனக்கு இருக்கும் பிம்பம் அப்படியே நீடிக்க வேண்டும் என்று சிலர் உள்நோக்கம் கொண்டிருக்கலாம் என்றும் அவர்களைத் தான் ஆதரிக்கப்போவதில்லை என்றும் அவர் சூசகம் தெரிவித்தார். மணிப்பூரில் இயல்பு வாழ்க்கை திரும்ப வேண்டும் என்பதற்காக, தான் போராடினேன் என்றும் ஒரு பெண்ணாகத் தனக்கும் அந்த இயல்பு வாழ்க்கைதான் வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அவர் பேசும்போது அவரிடமிருந்து தெறிக்கும் சிரிப்பே வாழ்க்கையை அவர் கொண்டாடுவதற்கும் தினசரி வாழ்க்கையின் சிறுசிறு விடயங்களை அவர் ரசிப்பதற்கும் அடையாளம். குழந்தைக் கிறுக்கல் போன்ற அவரது கோட்டோவியங்களை எந்த அளவுக்கு உற்சாகத்துடன் என்னிடம் அவர் காட்டினார் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். அவரது அரசியல் செயற்பாடுகளைப் போலவே தனது கலை குறித்தும் அவர் பெருமிதம் கொண்டதுபோல்தான் இருந்தது. ஒருவேளை இந்த இரண்டுமே இயல்பு வாழ்க்கைக்கும் சிரிப்புக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துபவையாக இருக்கலாம்.

ஒரு அறச் செயற்பாடாக ஒருவர் தன் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கும், கிளர்ச்சியையோ பயங்கரவாதத்தையோ அரசியலுக்கான முதலீடாகக் கொள்வதற்கும் இடையிலான ஆழமான வேறுபாட்டை ஷர்மிளாவின் அறிவிப்பு எமக்கு உணர்த்துகிறது. எதிர்ப்புப் போராட்டம் என்பது தன்னைத் தொடர்ந்து நீடிக்க விரும்புவதில்லை. அதே நேரம், பயங்கரவாதமும் கிளர்ச்சியும் தாமாகவே பல்கிப் பெருகுபவை. பயங்கரவாதத்தைத் தங்கள் உள்நோக்கத்துக்காக நீடிக்கச் செய்வதற்காக இங்கே வன்முறை அத்தியாவசியமாகிறது. வட கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள பெரும்பாலான கிளர்ச்சிக் குழுக்கள் வரிவிதிப்புகளை நம்பிப் பிழைப்பு நடத்தும் பணப்பறிப்புக் கும்பல்களாக ஆகிவிட்டன.

விடுதலைக்கான எந்த முயற்சிகளிலும் அவை ஈடுபடுவதில்லை. எல்லைப் பிராந்தியத்தில் நடந்துகொண்டிருக்கும் போதைப் பொருள் வியாபாரத்தின் இடைத்தரகர்களாக அவர்கள் ஆகிவிட்டார்கள். இரோம் ஷர்மிளாவோ ஒரு பெண்ணாகவும் மணிப்பூர்வாசியாகவும் ஒரு குடிமகளாகவும் வாழ்க்கை மீதான, அவரது பாலினம் மீதான, அவரது கலாசாரம் மீதான, எல்லோரும் கொண்டாட விழையும் ஜனநாயகம் மீதான உத்வேகத்தை அவர் வெளிப்படுத்துகிறார்.

பெண்மையைக் கொண்டாடுவதில் மணிப்பூரிகள் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள். மணிப்பூரின் தாய்மார்கள்தான், அசாம் ரைபிள்ஸ் ஆயுதப் படைத் தலைமைச் செயலகத்தின் முன்பு துணிவுடன் நிர்வாணமாகச் சென்று பாலியல் வன்கொடுமைக்கும் வன்முறைக்கும் எதிராகப் போராடினார்கள். ஷர்மிளாவின் ஒவ்வொரு செயற்பாடும் அந்தப் பாரம்பரியத்தின் பகுதிதான்.

### ஒரு நாவலுக்குரிய முடிவு!

லியோ டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்' நாவலின் சிறப்புகளில் ஒன்று என்ன வென்றால், போர் முடியும் இடத்தில் அந்த நாவல் முடியவில்லை என்பது தான்.

நாவல் என்பது கலைடாஸ்கோப்புக்கும் மேலே என்பதை உணர்ந்தவர் டால்ஸ்டாய். நாவலின் நாயகன் திருமணம் புரிந்துகொண்டு, தினசரி வாழ்க்கைக்கு, அதன் அலுப்புத்தன்மைக்கும்கூட, திரும்பும் இடத்தில் நாவல் முடிவுறுகிறது. ஒரு தீரச்செயலின் தருணத்தில் அந்த நாவலை முடித்திருந்தால் அந்த நாவலின் சீர்மை சிதைந்திருக்கும். அதே போல்தான், ஷர்மிளாவும் எதிர்காலத்தில் நடக்கக் கூடியதை முன்கூட்டியே உணர்ந்திருக்கக் கூடும் என்று நினைக்கிறேன்.

ஆயுதப்படைச் சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெறும் முடிவை நோக்கி நாடாளுமன்றமும் நீதிமன்றங்களும் மனதளவில் தயாராகிக்கொண்டிருக்கும் தருணத்தில், அமைதி வாழ்வுக்கென்றே பிரத்தியேகப் பிரச்சினைகள் உண்டு என்பதையும், இயல்பு வாழ்க்கையை நோக்கித் திரும்பும் செயலுக்காகவும் திறனுக்காகவும்தான் பெண்கள் கஷ்டப்பட்டார்கள் என்பதையும் ஷர்மிளா குறிப்புணர்த்துகிறார். தங்கள் சுய நலத்துக்காகப் போர்கள் வேண்டுமென்று நினைக்கும் ஆண்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். போர்கள்தான் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கின்றன, அவர்களை அர்த்தப்படுத்துகின்றன. சமாதானத்தால் அவர்களுக்கு ஒரு பயனுமில்லை. பெண்களின் அமைதி வாழ்க்கை என்பது பெண்களின் வேலையைப் போல ஒரு கைவினை. இயல்பு வாழ்க்கையும் அன்றாடத்தன்மையும் என்னவென்பதை மறக்கக் கூடியவர்களுக்கு இந்தக் கைவினையைக் கற்றுத்தர வேண்டும் என்றே ஷர்மிளா குறிப்பால் உணர்த்துகிறார்.

– நன்றி: தி இந்து

விடுதலைக்கான எந்த முயற்சிகளிலும் அவை ஈடுபடுவதில்லை. எல்லைப் பிராந்தியத்தில் நடந்து கொண்டிருக்கும் போதைப் பொருள் வியாபாரத்தின் இடைத்தரகர் களாக அவர்கள் ஆகிவிட்டார்கள். இரோம் ஷர்மிளாவோ ஒரு பெண்ணாகவும் மணிப்பூர் வாசியாகவும் ஒரு குடிமகளாக வும் வாழ்க்கை மீதான, அவரது பாலினம் மீதான, அவரது கலாசாரம் மீதான, எல்லோரும் கொண் டாட விழையும் ஜன நாயகம் மீதான உத்வேகத்தை அவர் வெளிப்படுத்துகிறார். பெண்மையைக் கொண்டாடுவதில் மணிப்பூரிகள் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1906 - சிலி, வல்பறயிஸில் ஏற்பட்ட 8.2 றிச்டர் அளவிலான நிலநடுக்கத்தில், 3,886 பேர் உயிரிழந்தனர்.

1913 - ஜப்பான் டொகொகோ இம்பீறியல் பல்கலைக் கழகம், ஜப்பானில் முதன் முதலாக, பெண்களை அனுமதித்த பல்கலைக்கழகம் ஆனது.

1920 - போலந்து-ரஷ்யப் போரான றட்ஷிமின் போரில் சோவியத் செம்படை வோர்ஷோவிலிருந்து புற முதுகிட்டோடியது.

1929 - பலஸ்தீனிய நிலப்பரப்பில் பலஸ்தீனிய அரபுகளுக்கும் யூதர்களுக்குமிடையே இடம்பெற்ற ஒரு மாதகால வன்செயலில் 133 யூதர்களும், 116 அரபுக்களும் உயிரிழந்தனர்.

1930 - பிடில்ஸ்ரிக் என அழைக்கப்பட்ட வர்ண, ஒலி கார்டூன் உருவாக்கப்பட்டது.

1945 - ஜப்பானியப் பிரதமர் கன்டாரோ சுசுகி மீது கொலை முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

\- சீனாவின் கடைசிப் பேரரசரும் மஞ்சுக்கோவின் ஆட்சியாளருமான புயி, சோவியத் துருப்புக்களால் சிறைபிடிக்கப்பட்டார்.

1946 - கொல்கத்தாவில் இடம்பெற்ற வன்செயலில் 4000க்கு மேற்பட்டோர் 72 மணி நேரத்துள் கொல்லப்பட்டனர்.

1954 - ஸ்போட்ஸ் இலஸ்ரேட் சஞ்சிகையின் முதல் இதழ் வெளியிடப்பட்டது.

1960 - ஐக்கிய இராச்சியத்திடமிருந்து சைப்பிரஸ் சுதந்திரம் பெற்றது.

1987 - தரையிலிருந்து புறப்பட்ட வேளையில், மிச்சிகன் டெற்றோயிற்றில் நோர்த் வெஸ்ற் விமான சேவை மக்டொனால்ட் MD-82 விமானம் 255 விபத்துக்குள்ளாகியதில் விமானத்திலிருந்த 155 பேரில் 154 பேரும் தரையிலிருந்த இருவருமாக 156 பேர் உயிரிழந்தனர்.

1992 - அராலியில் உயிரிழந்த தளபதிகளுக்கு அளிக்கும் கௌரவம் போரில் வெற்றிவாகை சூடுவதேயென பலாலியில் ரணி உரை.

1995 - வேலூர் கோட்டைச் சிறையிலிருந்து ஈழத் தமிழர் தப்பியது எப்படி? பல குழுக்களாகப் பிரிந்து இரவில் தப்பினார்கள் என வோல்டர் தேவாரம் விளக்குகிறார்.

\- சிங்களக் குண்டர்கள் அட்டகாசம். தமிழர்களின் 75 வீடுகள் அம்பாறையில் தீக்கிரை; இருவர் சாவு.

2006 - யாழ்.பல்கலைக்கழக மாணவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய நடவடிக்கை: வீடுகளில் தங்கியுள்ளோரை விடுதிக்கு அழைக்கவும் முடிவு.

\- இளைஞரைச் சுட்டுக்கொன்று சடலம் ரயர்போட்டு எரிப்பு. கொக்குவிலில் ஊரடங்கு வேளை நள்ளிரவில் பயங்கரம்.

2015 - சிரியாவில், புரட்சியாளர்களது சந்தை நகரான டவுமாவில் சிரிய-அரபு விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட, தொடர் விமானத் தாக்குதலில், 96 பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

# மரம் ஏறிய வம்பன்

பகல் சாப்பாட்டுக்கு மகளும் மருமகனும் வருவார்கள். இதனால் தோப்புக்குப் போய் இரண்டு தேங்காய்களைப் பறித்துக் கொண்டு வரச் சொன்னாள் மனைவி கணவனிடம்.

அவர் தோப்புக்குப் போனார். அங்கே காவற்காரன் உடல் நலம் இல்லாமல் படுத்திருந்தான். அவருக்கு மரம் ஏறத் தெரியாது.

வழியில் அவர் நின்று கொண்டிருந்தார். மரம் ஏறத் தெரிந்தவன் எவனையும் காணவில்லை.

அந்த ஊர் வம்பன் அப்பொழுது வந்தான். அவரைப் பார்த்து ஏன் இங்கே நிற்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அவனை விட்டால் வேறு ஆள் இல்லை. அவனுக்கு மரம் ஏறத் தெரியும். ஆனால் வம்பன் என்று பேர் எடுத்தவன். என்ன செய்வது? "மரத்தில் ஏறி இரண்டு தேங்காய்களைப் பறித்துப் போடு" என்றார்.

"இரண்டு தேங்காய்களைக் கொண்டு போய் என்ன செய்வீர்கள்? எதற்கு சாமிக்கா" என்று கிண்டலாகக் கேட்டான் வம்பன்.

அவனிடம் பேச்சு அதிகம் வைத்துக் கொள்ளாமல் "சீக்கிரமாக ஏறி பறிச்சுப் போடு" என்றார்.

"ஏறிப் பறிக்கிறவனுக்குக் கிடையாதா?" என்றான்.

"சரி நீ ஒரு காயை வைத்துக் கொள்" என்றார்.

அவன் வேகமாக மரத்தில் ஏறி ஐந்து காய்களைப் பறித்துப் போட்டுவிட்டு கீழே இறங்கி வந்து கொண்டு இருந்தான்.



''இரண்டு போதும் என்றேன். ஐந்து காயைப் பறித்துத் தள்ளிவிட்டாயே'' என்றார்.

"இருங்கள். கணக்குச் சொல்கிறேன்" என்று சொல்லி அருகில் வந்து ஐந்தில் நான்கு காய்களை எடுத்துக் கொண்டான்.

"கீழே கிடக்கிற ஒரு காய் மட்டும் அவனுக்குப் போல் இருக்கிறது. மீதியை நம்ம வீட்டுக்குக் கொண்டு வந்து கொடுக்கப் போகிறான் போலிருக்கிறது பரவாயில்லை" என்று அவர் நினைக்கும் பொழுது.

வம்பன், "ஏறியதற்கு ஒன்று; இறங்கியதற்கு ஒன்று; நீர் கொடுப்பதாகச் சொன்னது ஒன்று. நானாக எடுத்துக் கொண்டது ஒன்று. மீதி ஒன்று கிடக்கிறது. அதையும் எனக்குத் தந்தால் தாரும். தராவிட்டால் வைத்துக் கொள்ளும்" என்று சொல்லிவிட்டு, நான்கு காய்களையும் கொண்டு போய்விட்டான் வம்பன்.





# நிலவு

இரவில் தோன்றும் வெண்ணிலவு - அது
இருளைப் போக்கும் ஒளி நிலவு
உறவை வளர்க்கும் அருள்நிலவு - அது
உலகம் சுற்றி வரும் நிலவு

குழந்தை விரும்பும் முழுநிலவு - அது
குதித்து நகரும் ஒரு நிலவு
பழகும் அன்பைத் தரு நிலவு - எமைப்
பார்த்துப் பின்னால் வரும் நிலவு

தேய்பிறை நாளில் குறைநிலவு - அது
தினமும் தேய்ந்து வரும் நிலவு
ஓய்வு ஒருநாள் பெரும் நிலவு - அது
உடனே மறுபடி வளர்நிலவு

வளர்பிறை முடிவில் முழுநிலவு - அது
வசந்தம் கொடுக்கும் தனிநிலவு
தளர்வுகள் போக்கும் குளிர்நிலவு - அது
தரணி விரும்பும் துணை நிலவு



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுபிடிக்கும் தேர்தல் களம்

அமெரிக்கத் தேர்தல் களம் வெகுவாகச் சூடுபிடித்துள்ளது. கிலாரி கிளின்டன் மற்றும் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் பல்வேறு வாக்குறுதிகளையும், அமெரிக்க முன்னேற்றத் திட்டங்களையும், ஒபாமாவின் ஆட்சி பற்றிய விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையில் ஒபாமா தனது ஆதரவைக் கிலாரிக்கு வழங்கி வருகிறார். இரு அமெரிக்க வேட்பாளர்களும் சூடுபிடிக்கும் தேர்தல் பரப்புரைகளை நடத்திவருகின்றனர். கடந்த வாரத்தில் பரப்புரையின்போது டொனால்ட் ட்ரம்ப் முன்வைத்த கருத்து, பன்னாட்டைப் பரபரப்புக்குள்ளாக்கியுள்ளது. "ஐ.எஸ் அமைப்பின் பின்னணியிலும், அதன் உருவாக்கத்திலும் ஒபாமா செயற்படுகிறார்" என்ற கருத்தையே அவர் முன் வைத்துள்ளார். இந்தக் கருத்து ஊடகங்களுக்கு நல்ல இரையாகவும், பன்னாட்டு ரீதியில் பல்வேறு குழப்பங்களையும், கேள்விகளையும் எழுப்பியது.

இவற்றுக்கிடையில், ஐ.எஸ் அமைப்பின் பணவரவுக்கான பிரதான விடயமாக எண்ணெய் வர்த்தகம் அமைந்துள்ளது. ஐ.எஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் உலக நாடுகளிடமே விற்பனை செய்யப்படுகின்றது. போராளி அமைப்பினரால் விற்பனை செய்யப்படும் எண்ணெய் மற்றும் இதர உற்பத்திப் பொருள்களுக்கு ஐ.நா.அமைப்புத் தடை விதிக்கவில்லை எனப் பன்னாட்டு ஊடகங்கள் விமர்சித்திருந்தன. ஆனால், போராளி அமைப்பை அழிக்க உலகப் படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அடிப்படையில், எண்ணெய் கொள்வனவு செய்வதை நிறுத்தினால், ஐ.எஸ். அமைப்பினர் எவரிடம் எண்ணெய் விற்கப் போகிறார்கள்? இந்த மேலோட்டமான ஆதரவு ட்ரம்பின் கருத்துக்களை நிறுவுவதாக உள்ளது.

போதாததற்கு, லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர், டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பது உண்மையானவை. அவர் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பேசுகிறார் என்று தெரிவித்துள்ளார். முன்னதாக ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து தப்பி வந்த பெண் ஒருவரும் ஐ.எஸ். அமைப்பின் பின்னணியில் அமெரிக்கா இருப்பதாகத் தெரிவித்தார். இவற்றுக்கு வலுச்சேர்க்கும் விதமாக, போராளிக் குழுக்களுக்கு ஆயுதங்கள் எவ்வாறு கிடைக்கப் பெறுகின்றன என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது. வெடிபொருள்கள், இரசாயனங்கள் சிறிய நாடுகளில் இருந்து கடத்தப்பட்டாலும், ஏவுகணைகள், அவற்றை ஏவும் கலங்கள், உயர்ரக குண்டுவீச்சுக் கருவிகள் அனைத்தும் எங்கிருந்து பெறப்படுகின்றன. முன்னதாக ஈராக்கின் ஆயுதக் களஞ்சியத்தைப் போராளிகள் கைப்பற்றினர். இதன் மூலம் ஆயுதங்களைத் தம்வசப்படுத்தினர் என்ற செய்தியைப் படித்திருப்போம். இது மறைமுகமாக இலவச ஆயுத வழங்கல் திட்டமாக இருக்குமோ என்ற கேள்வியை இப்போது எம்மனதில் எழச் செய்கின்றது. ஆயுத உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடுகளில் அமெரிக்கா, ரஷ்யா ஆகியன முதன்மையானவை. ஆரம்பத்தில் இருந்து ரஷ்யா, 'ஐ.எஸ். அமைப்புக்கு அமெரிக்கா ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றது' என்ற கருத்தை முன்வைத்தது; இன்னமும் முன்வைத்து வருகின்றது.

இந்த நிலையில், உண்மையில் அமெரிக்காவின் சதியில்தான் எண்ணெய் வளநாடுகள் சிக்கியுள்ளனவா? பொருளாதாரத்தைப் பலப்படுத்த இந்த முயற்சியைத் தனக்குச் சாதகமான முறையில், தனியொரு நாடாக, அமெரிக்கா பயன் படுத்தலாம். அமெரிக்காவில் விளையும் கோதுமையில் சில சதவீதம் மட்டுமே விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், தொன் கணக்கான கோதுமை கடலில் கொட்டப்படுகின்றது. இந்தத் தகவலை நாம் சிறுவயது முதல் அறிந்துள்ளோம். உண்மையான கோதுமை மா பழுப்பு நிறத்தில் இருக்கும். ஆனால், நாம் பாவிப்பது வெண்ணிறத்தில் இருப்பது. அதைச் சிறிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், தமது நாட்டு மக்களுக்கு உயர்வான தரமுள்ள பொருள்கள் கலக்கப்பட்ட மாவை விற்பனைக்கு அனுமதிப்பதும் பலர் அறிந்த உண்மை. உலக நாடுகளில் பட்டினியால் உள்ள மக்களுக்குக் கடலில் கொட்டும் கோதுமையை வழங்கலாம். ஆனால், பட்டினியைப் போக்க நிதியுதவி கோரிப் பொது மக்களிடம் இருந்து மீண்டும் பணச்சுரண்டல்களைத் தொண்டு நிறுவனங்கள் செய்து வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் அடிப்படை பொருளாதாரம். பொருளாதாரத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்துவதற்கான தந்திரத்தைக் கையாண்டு வருகின்றது அமெரிக்கா. ஒருவனை செல்வந்தன் என இனம்காண ஓர் ஏழை தேவைப்படுகின்றான். ஏழை என்று ஒருவன் இருந்தால் மட்டுமே செல்வந்தன் என்ற வார்த்தைக்கு அர்த்தம் உண்டு. இந்த அடிப்படையில் தான் அமெரிக்க நகர்வுகளைச் சிந்திக்கத் தூண்டுகின்றது.






# மனிதனால் உருவானது தான் கடவுள் என்ற தோற்றம்

கே.என்.ராமசந்திரன்

என்னதானையா அதிலே இருக்குது என்று எல்லாரும் தண்ணியடிக்கிறதும், கஞ்சா அடிக்கிறதும், போதை ஊசி போட்டுக் கொள்வதுமா அலைகிறார்கள் என்று பலருக்கு வியப்பாக இருக்கிறது. மது, ஹெரோயின், ஹொக்கெய்ன் போன்றவை மூளையின் மகிழ்ச்சி மையங்களைத் தூண்டி, மனதிலுள்ள கவலைகளை மறக்கச்செய்கின்றன என்று கூறப்படுவதையாவது எதிர்ப்புடன் ஏற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆனால், மனச் செயற்பாடுகளை மாற்றியமைத்து, வண்ணமயமான உரு வெளித் தோற்றங்களையும் பொய்யான பிம்பங்களையும் மனதில் தோன்றச்செய்கிறவையும் பிரக்ஞை உணர்வைத் திரித்துப் போடுகிறவையுமான எல்.எஸ்.டி. போன்ற மனத்திரிபு இரசாயனங்களை ஏன் சிலர் பயன்படுத்துகிறார்கள் என்பது விளங்காத புதிராக இருக்கிறது.

மனிதனின் பரிணாம வரலாற்றில் மத அனுபவங்களும் கடநிலை அனுபவங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மதம் என்பது ஒரு சமூகத்தின் உறுப்பினர்களுக்கு இடையில் நட்புணர்வையும் ஒத்துழைப்பையும் சகோதர பாவத்தையும் வளர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. தற்காலத்தின் அரிமா மற்றும் சுழற்சங்கங்கள், தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள் முதலியவை கூட மக்களிடையே நட்புணர்வையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டவை தான். நம் ஊர்க்காரர், நம் சாதி என்பவையும் சிறு குழுவினருக்குள் பிணைப்பை ஏற்படுத்தும். ஆனால், அந்த உணர்வுகள் அத்துமீறிப் போகும்போதுதான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. மதம் மற்றும் கடநிலைத் தியான அனுபவங்களைக் குறுக்கு வழியில் அடையப் போதைப் பொருள் உதவுகின்றதாக சிலர் சொல்கிறார்கள். குழுவின் அளவு பெரிதாகிறபோது மதத்தின் பிணைப்பு ஏற்படுத்தும் செயற்பாடு அதிகமாகிறது. இன்றைக்கு ஏறத்தாழ 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சிறுசிறு மத்திய கிழக்கு நாடுகள் உருவானதற்கு மனிதர்களின் செயற்பாடுகளையும் வாழ்க்கையையும் நிர்ணயித்து வழிநடத்துகிற பெரும் தெய்வங்கள் யார் யார் என்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளே காரணம் என மானிடவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். தவறு செய்தால் தெய்வம் தண்டிக்கும் என்ற பயமே மக்களைத் தவறான வழியில் செல்லாமல் தடுத்தது. மேலேயிருந்து ஒருவன் நீ செய்கிற அட்டூழியத்தையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதே சாமானியர்களை நல்வழிப்படுத்தப் போதுமானதாயிருந்தது.

## பிறவிக் குணங்கள்

ஓர் ஆய்வின்போது, ஒரு மதுக்கூடத்தின் உள்ளே உற்றுப்பார்க்கிற ஒரு ஜோடிக் கண்களின் பெரிய ஓவியத்தை கல்லாவுக்கு மேலே மாட்டினார்கள். வாடிக்கையாளர்கள் அதைப் பார்த்த பின், தாம் தரவேண்டிய காசை கல்லாவில் இருந்தவரிடம் சரியாகக் கொடுத்து விட்டு வெளியே போனார்கள். மேலேயிருந்து ஒருவன் நம்மைக் கண்காணிக்கிறான் என்ற பிரமையே, நாணயமாக நடந்துகொள்ளத் தூண்டுதலாயிருந்தது.

மனிதன் தன்னைவிடத் திறமையும், ஆற்றலும், செயற்கரிய செயல்களைச் செய்யும் திறனும் கொண்ட ஓர் உருவத்துடன் தன்னை இணைத்துக்கொள்ளும் நாட்டத்துடன்தான் கடவுளை உருவாக்கிக்கொண்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மனிதருக்கு அச்சமும் பத்திரமற்ற உணர்வும் பிறவிக் குணங்கள். அவற்றின் காரணமாகவே மனிதன் கூட்டமாக வாழ்வதற்கு முனைகிறான். இன்றும்கூட, நடுநிசி நேரத்தில் ஊர் அடங்கி ஆளரவமற்ற தெருவில் செல்லும்போது, நம் மனதில் கலக்கம் ஏற்படுகிறது. மயிர்க்கூச்செறிகிறது.

## ஆரோக்கியத்தின் எதிரி

கடவுளும் [illegible] கூட்டத்தை வடிவமைக்கின்றன. பொதுவான நம்பிக்கைகளும் நடவடிக்கைகளும் நடத்தை விதிகளும் கூட்டத்தினருக்குள் பிணைப்பையும் ஒரேவிதமான கருத்துகளையும் உண்டாக்குகின்றன. இதிலுள்ள முக்கியமான அம்சம் என்னவெனில், உடனடியான பயனேதும் கிட்டாது என்ற நிலையிலும்கூட, மக்கள் சேர்ந்து செயற்படுகிறார்கள். அவ்வாறு சேர்ந்து செயற்படுகையில் தனி ஒருவனின் முயற்சியும் உழைப்பும் மற்றவர்களுக்கும் பயன்தருவதை அவனால் ஏற்றுக் கொள்ளமுடிகிறது. என்னை மட்டுமின்றி இந்த உலகில் உள்ள சகல ஜீவராசி களையும் இன்புற்றிருக்கச் செய்க என்று பிரார்த்திக்க மனம் வருகிறது.

கடவுள் மற்றும் மதம் ஏற்படுத்துகிற கடநிலை அனுபவத்தை எல்.எஸ்.டி. வகை இரசாயனங்களும் மனதில் ஏற்படுத்துவதாகச் சொல்கிறார்கள். மதப் பரப்புரையாளர்களும் தவசிகளும் மந்திர உச்சாடனம், உபவாசம், பிரார்த்தனை, தியானம் போன்றவற்றின் தன்மையால் பிரக்ஞையின் தன்மையை மாற்றி அமைத்துக் கொள்ள முடியும் என்கிறார்கள். இவற்றில் ஒழுக்கம், ஆன்மிக நாட்டம், நேர்மை போன்ற நடத்தை விதிகள் உண்டு. போதை மருந்துகளில் அவை கிடையாது. அத்துடன் அவை உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கக்கூடியவை. எனினும் கடவுள் வழிபாட்டில் கள், சாராயம், கஞ்சா போன்றவற்றை நிவேதனமாகப் படைத்து, பின்னர் அவற்றைப் பிரசாதம் என்ற பெயரில் உண்பதும் சில சமூகங்களில் வழக்கமாக உள்ளது. வட நாட்டுச் சாமியார் ஒருவர், கடவுள் நாமத்தை உச்சரித்துக் கொண்டு கஞ்சாவைப் புகைத்தால், பிரக்ஞை தவறிய பிறகும் உள்மனது கடவுள் நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரித்துக்கொண்டே இருக்கும். விழிப்பு நிலையில் மனதை அது போல ஒருமுனைப்படுத்துவது மிகவும் கடினம் என்று விளக்கம் தந்தார்.

## போதை மருத்துவம்

மேலைநாட்டு உடற்செயலியல் மருத்துவர்களும் உளவியல் மருத்துவர்களும் தமது சிகிச்சைகளில் சில குறிப்பிட்ட இரசாயனங்களைப் பயன்படுத்தி நோயாளிகளைக் குணப்படுத்துவதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஹிப்னொடிஸம் மூலம் மனதைக் கட்டுப்படுத்தி, நோயாளியின் உள் மனதில் புதைந்துள்ள கோபதாபங்களையும் ஏக்கங்களையும் அவர் வெளியே கொட்டும்படி செய்வது நவீன சிகிச்சை முறைகளில் ஒன்று. அவ்வாறு மனதின் தளைகளைத் தளர்த்தி விடவும், தங்கு தடையின்றித் தமது எண்ணங்களை வெளிப்படுத்தவும் ஊக்குவிக்கப் போதை மருந்துகள் பயன்படுகின்றன. மனச் சோர்வு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், பிழைக்க முடியாது என்ற இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்ட நோயாளிகளுக்கும் உளநிலை மாற்ற இரசாயனங்கள் துன்பத்தைக் குறைப்பதில் உதவி செய்கின்றன.

மேலை நாடுகளில் இத்தகைய உளநிலை மாற்ற இரசாயனங்கள் இளைஞர்களால் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க, அதிகாரிகள் என்னவிதமான நடவடிக்கைகளை எடுத்தாலும் முழு வெற்றி பெற முடிவதில்லை. எந்தவொரு ஆட்சி முறையாலும் மனித இயல்பை மாற்றிவிடமுடியாது. நம் நாட்டிலேயே மதுவிலக்கை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியவில்லை. போதை என்பது ஒருவித மனநிலை; அது அவசியம் அல்ல என்று உணர்த்தப்பட்டாலே பிரச்சினைகள் குறைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமலாபாலை தொடர்ந்து கணவனை பிரிந்த பிரபல நடிகை

இந்தியத் திரையுலக நடிகைகள் கடந்த சில வருடங்களாக விவாக ரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில நாள்களாக அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது விஜய்–அமலாபால் விவாக ரத்து.

இந்த நிலையில் தமிழில், 'சபாஷ்', 'வேதம்' போன்ற படங்களிலும், மலையாளத்தில் பல படங்களிலும் நடித்தவர் திவ்யா உன்னி.

இவர் அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவர் சுதிர் என்பவரைக் கடந்த 2002ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். இரண்டு குழந்தைகளுக்கு பெற்றோரான இவர்களில் உறவில் விரிசல் விழுந்துள்ளதாம். தற்போது திவ்யா கொச்சியில் தனியாக நடனப்பள்ளியை நடத்தி வருகிறாராம்.



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | 8 | | | |
| | 6 | 1 | | | | 7 | | |
| 9 | | | | | | 5 | | |
| | | 3 | 7 | | 5 | | | |
| | | | | | 9 | | | |
| 8 | 7 | | | | 2 | 4 | 9 | |
| | | | | | | | | 2 |
| 2 | | | | 8 | 1 | | | |
| 1 | | 4 | 3 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 4 | 3 | 9 | 5 | 8 | 6 | 1 |
| 6 | 9 | 1 | 7 | 8 | 4 | 5 | 2 | 3 |
| 8 | 5 | 3 | 6 | 2 | 1 | 9 | 4 | 7 |
| 5 | 8 | 9 | 1 | 3 | 2 | 4 | 7 | 6 |
| 1 | 4 | 7 | 8 | 5 | 6 | 2 | 3 | 9 |
| 3 | 6 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 5 |
| 4 | 3 | 6 | 2 | 1 | 9 | 7 | 5 | 8 |
| 7 | 1 | 5 | 4 | 6 | 8 | 3 | 9 | 2 |
| 9 | 2 | 8 | 5 | 7 | 3 | 6 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




**நவீனா** @latha

யோசிக்கக் கற்று கொள்கிறது குழந்தை... எல்லோரையும் பிடிக்கும் என்ற மனநிலையிலிருந்து ஒருவரை மட்டுமே கூறவேண்டும் என்ற ஒற்றை கேள்வியிலிருந்து...

டாக்டர் என் மனைவி ஓவர ரீ.வி பார்க்கிறா.
எந்தளவுக்குப் பார்க்கிறாங்க?
கரண்ட் போனாக் கூட டார்ச்சு அடிச்சுப் பார்க்கிறா சார்...














# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம், இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், இனிய அணுகுமுறையால் ஓரளவு சலுகை பெறுவர்.

**இடபம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். பெண்களுக்கு, வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை. தாய்வழி உறவினரால் நன்மை உண்டு.

**மிதுனம்:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். வருமானம் உயரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** பெற்றோரின் சொல்லுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தாமதமான பணி, புதிய முயற்சியால் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு.

**சிங்கம்:** சோம்பல் எண்ணம் உருவாகலாம். பணி நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். உடல்நலத்துக்கு மருத்துவச் சிகிச்சை தேவைப்படும்.

**கன்னி:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். தாய்வழி உறவினரிடம் கேட்ட உதவி வந்து சேரும்.

**துலாம்:** அக்கம் பக்கத்தினரின் அன்பை பெறுவீர்கள். எதிர்கால வாழ்வில், புதிய நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம்போதும். இலாபம் மிதமாக இருக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**தனுசு:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வளர்ச்சி பெற, முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடந்தேறும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** சொந்தப் பணியில் மட்டும் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு சரி செய்வீர்கள். சராசரி பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** மனதில் புத்துணர்வு ஏற்படும். குடும்ப உறுப்பினர் ஆதரவாக நடந்து கொள்வர். இலாபம் உயரும். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கிடைக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, அதிக அளவில் பணிபுரிவீர்கள். வருமானம் உயரும். இயன்ற அளவில் தான, தர்மம் செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதைச் சாப்பிட்டு, எதைத் தவிர்க்க வேண்டும்?

- தேனும், நெய்யும் சம அளவில் கலந்தால் நஞ்சாகிவிடும். எனவே இரண்டையும் சேர்த்து உண்ணக்கூடாது. இவற்றில் ஏதாவது ஒன்றை சாப்பிட வேண்டும்.
- வாழைப்பழத்தைத் தயிர், மோருடன் கலந்து சாப்பிடக்கூடாது. வாழைப்பழம் சாப்பிட்ட உடனும், தயிர், மோர் சாப்பிடக்கூடாது.
- பழங்களைத் தனியேதான் சாப்பிட வேண்டும். சாப்பாட்டுடன் சேர்த்துச் சாப்பிடக்கூடாது. அதன் தாதுச்சத்து உணவுடன் கலந்து பலனற்றுப் போய்விடும்.
- வெண்ணெயுடன் காய்கறிகளைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது.
- மீன், கருவாடு சாப்பிட்ட உடன் பால், தயிர் சாப்பிடக்கூடாது. அவ்வாறு மீறி உண்டால் வெண் மேகம் போன்ற நோய்கள் வர வாய்ப்பு உள்ளது.
- உடல் மெலிந்தவர்கள், புழுங்கலரிசிச் சாதம் சாப்பிட வேண்டும்.
- உடல் பருத்தவர்கள் கோதுமை உணவு உண்பது நல்லது.
- ஆஸ்துமா உள்ளவர்கள், சளி அதிகம் உள்ளவர்கள் தக்காளி, பூசணிக்காய், முள்ளங்கி ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.
- மூல நோய் உள்ளவர்கள் முட்டை, அதிக காரம், மாமிச உணவு ஆகியவற்றை உண்ணக்கூடாது.
- நெய்யை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து உபயோகிக்கக்கூடாது.
- காலையில் வெறும் வயிற்றில் காப்பி, டீ குடிக்கக்கூடாது. ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டுப் பின்னர், காப்பி, டீ போன்றவைகளைக் குடிக்கலாம்.
- அல்சர் உள்ளவர்களும், மஞ்சட்காமாலை உள்ளவர்களும் மிளகாய், ஊறுகாய் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.
- தோல் நோய் உள்ளவர்கள் கத்தரிக்காய், புடலங்காய், நிலக்கடலை, மீன், கருவாடு, அதிக காரம், அதிக புளிப்பு, கொத்தவரங்காய், பீன்ஸ் ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.
- கோதுமையை நல்லெண்ணெயுடன் சமைத்துச் சாப்பிடக்கூடாது.
- மூட்டுவலி, வாத நோயாளிகள், அசைவ உணவுகள், முட்டை, கிழங்கு வகைகளைச் சாப்பிடக்கூடாது.





## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 800 | 700 | 600 | 500 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 800 | – |
| சீலா | 300 | 200 | 400 | 600 | 400 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 400 | 500 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 450 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 700 | 500 | 700 |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 500 | – |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | 200 | – |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 200 | 600 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | – | 300 | 400 | – |
| திருக்கை | 150 | 250 | 200 | 400 | 500 | 300 | – |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 350 | 200 | 350 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 80 | 200 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 400 | 300 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 60 | 120 | 40 | 30 | 30 | 20 |
| கத்தரி | 80 | 60 | 80 | 80 | 40 | 20 | 90 | 40 |
| கரட் | 120 | 100 | 160 | 140 | 100–120 | 140 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 90 | 120 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 70 | 60 | 40 | 40 | 40 | 40 | 100 | 40 |
| பாகல் | 100 | 100 | 140 | 120 | 120 | 120 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 180 | – | 160 | – | 100 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 90 | 90 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 70 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 60 | 40 | 60 | 60 | 50 | 80 | 70 | 80 |
| தக்காளி | 40 | 60 | 60 | 80 | 40–50 | 80 | 120 | 50 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 120 | 80 | 60 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 30 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 240 | 200 | 180 | 220 | 500 | 400 | 160 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 60 | 20 | 70 | 50 |
| கோவா | 120 | 100 | 160 | 140 | 100 | 120 | 90 | 80 |
| வெண்டி | 40 | 40 | 80 | 80 | 40 | 120 | 70 | 50 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 180 | 180 | 200 | 130 | 180 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 140 | 100–120 | 160 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30 | 20–30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 | 120 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 120 | 160 | 140 | 120 | 80 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 | 200 | 160 | 200 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 70 | 120 | 80 | 120 | 200 | 200 | 80 |



## நாளை

**ஆவணி-01**

புதன்கிழமை -17.08.2016
திதி: சதுர்த்தசி பி.ப.04.46
நட்சத்திரம்: திருவோணம் பி.இ.01.30
ராகுகாலம்: 12.05-01.35 வரை
சுபநேரம்:04.35-06.05 வரை

## கஸ்ரட் புடிங்

### தேவையான பொருள்கள்

றின் பால் – சிறியது 1
கஸ்ரட் பவுடர் பக்கட் – 1
தண்ணீர் – தேவையான அளவு.
மாஜரீன் – 2 தேக்கரண்டி

### செய்முறை

றின்பாலுடன், இரண்டு கோப்பை தண்ணீர் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். அடுப்பில் இந்தக் கலவை கொதிக்கும் வரை கைவிடாமல் கிளரவும். இதன் போது மாஜரீனை சேர்த்துக் கொள்ளவும். இதற்கிடையில் 1 பக்கட் கஸ்ரட் பவுடருக்கு ஒரு கப் நீர் விட்டு கரைத்து வைத்திருக்கவும். அடுப்பில் றின் பால் கலவை கொதித்ததும், அடுப்பின் தீயை சற்றுத் தணித்து, கஸ்ரட் பவுடர் கலவையை சிறிது சிறிதாக சேர்த்துக் கிளறவும். இதன் போது பால்கலவை உடனடியாக இறுகுவதை அவதானிக்கலாம். பின்னர் கலவைகள் இணைந்து கொதிக்கும் பருவத்தில் உடனடியாக இறக்கி பாத்திரம் ஒன்றில் மாற்றவும். ஆறிய பின்னர் குளிரூட்டியில் வைத்து, கத்தியால் வெட்டி பரிமாறவும். (றின் பாலின் இனிப்புச் சுவை இந்த அளவுக்கு போதுமானது. மேலதிய இனிப்புத் தேவைப்பட்டால் றின்பால் கலவையுடன் சீனியைச் சேர்க்கலாம். றின்பால் வந்த றின்னை அளவுக் கப்பாகப் பயன்படுத்துவது சிறந்தது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பத் வங்கி வழங்கும் லீசிங் அனுகூலங்கள்



சம்பத் வங்கி, சௌகரியமான லீசிங் தீர்வுகளைத் தொடர்ச்சியாக வழங்கி வருவதாகத் தெரிவித்தது. அந்த வங்கி, தனது வருடாந்த "லீசிங் வாசி துன் மாசே" (மூன்று மாதங்களுக்கு லீசிங் அனுகூலங்கள்) எனும் நடமாடும் சந்தையை நாடு முழுவதிலும் முன்னெடுத்து வருகின்றது. 2016 ஆம் ஆண்டுக்கான நடமாடும் லீசிங் காலாண்டு சந்தையின் மூலமாக, வாடிக்கையாளர்களுக்குச் சௌகரியமான முறையில் வாகனமொன்றை லீசிங் முறையில் கொள்வனவு செய்துக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அது கூறியுள்ளது.

நாடு முழுவதிலும் சம்பத் வங்கி 10 நடமாடும் லீசிங் சந்தைகளை முன்னெடுத்திருந்தது. இதில் ஐந்து மாபெரும் லீசிங் சந்தைகள் மகரகம, கிரிபத்கொட, கண்டி, காலி மற்றும் நீர்கொழும்பு ஆகிய நகரங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. மேலும் ஐந்து நிலையான நடமாடும் சந்தைகள் ஹற்றன், நெல்லியடி, மொரவக, கம்பஹா மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் நடைபெற்றன.

இந்தச் சந்தைகளில் பெருமளவான வாடிக்கையாளர்கள் மற்றும் வாகன விற்பனையாளர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர் என சம்பத் வங்கி கூறியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் ஓகஸ்ட் 31 வரை நடைபெறும். இந்த லீசிங் காலாண்டில், சம்பத் லீசிங் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு, சம்பத் கடன் அட்டைக்கு வாடிக்கையாளர்கள் இணைவுக் கட்டணம் மற்றும் முதல் ஆண்டுக்கான வருடாந்த கட்டணமின்றி விண்ணப்பிக்க முடியும் என்று கூறப் பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொண்ட சம்பத் கடன் அட்டையைக் கொண்டு, வட்டியில்லாத தவணைக் கட்டணத்தில் வாகனக் காப்புறுதி தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியும். நாடு முழுவதுமுள்ள சம்பத் வங்கிக் கிளைகளுக்கு வாடிக்கையாளர்கள் பயணம் செய்து, ஆகக் குறைந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்த விசேட திட்டத்தின் அனுகூலங்களை அனுபவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## சாதனையைக் கொண்டாடும் டிமோ



டிமோ நிறுவனத்தின் ஆதரவுடன், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் மாணவர்களால் வடிவமைப்புச் செய்யப்பட்ட டி-மொறா பி 1 என்ற பந்தயக் கார், உலகில் இடம்பெற்று வருகின்ற மிகப்பெரிய மோட்டார் விளையாட்டுப் போட்டியான "போர்முலா ஸ்ருடண்ட் 2016" நிகழ்வில் 3 விருதுகளை வென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"போர்முலா ஸ்ருடண்ட் 2016" போட்டியானது அண்மையில் ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்றதுடன், பெருமதிப்புமிக்க இந்த நிகழ்வில் இலங்கையிலிருந்து முதற்தடவையாக இந்த அணி பங்குபற்றியிருந்ததாகக் கூறப்பட்டது.

இந்தப் போட்டியில் 30 நாடுகளிலிருந்து, 130 இற்கும் மேற்பட்ட அணிகள் போட்டியிட்டிருந்தன. இயந்திரவியல், பொறியியல் கற்கை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்தப் போட்டியானது ஐரோப்பாவில் மிகவும் பிரபலமான கல்விசார் மோட்டார் விளையாட்டுப்போட்டியாக அமைந்துள்ளதுடன், தொழிற்றுறை மற்றும்பிரபல பொறியியலாளர்களின் ஆதரவையும் பெற்றுள்ளதென டிமோ கூறியுள்ளது.

உலகெங்கிலுமுள்ள பல்கலைக் கழகப் பொறியியல் மாணவர்கள் நிலையான மற்றும் வலுவான நிகழ்வுகளில் போட்டியிடுவதற்கு, ஒரு வருடத்தில் தனி ஆசனத்தைக் கொண்ட பந்தயக் கார் ஒன்றை வடிவமைத்து, கட்டியெழுப்புமாறு சவால் விடுவதுடன், பந்தயக் காரின் சோதனை ஓட்டங்கள் மற்றும் தொழிற்படுதிறனைத் தெளிவாக விளங்கி, அவற்றை வெளிக்காண்பிப்பதற்கு இங்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

மொரட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து இதில் கலந்துகொண்ட அணிக்கு முற்றுமுழுதான அனுசரணையை டிமோ வழங்கியதுடன், ஹர்னகலவின் தலைமையின் கீழ் இந்த அணியில் 18 பேர் இடம்பெற்றிருந்தனர். இதில் இரு அணி நிலை விருதுகளும், மிகத் திறமையாக வாகனத்தை ஓட்டும் ஆற்றலுக்காக இந்துருவ முனசிங்கவுக்கான விருதுமாக மொத்தமாக 3 விருதுகளை இந்த அணி வென்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (த)

## உலகின் 5ஆவது பெரிய வங்கி இலங்கையில்

உலகின் ஐந்தாவது மிகப் பெரிய வங்கியான த பாங்க் ஒவ் சைனா எனப்படும் சீனாவின் இரண்டாவது மிகப் பெரிய வங்கி தனது தெற்காசியாவுக்கான தலைமையகத்தை இலங்கையில் அமைக்கவுள்ளது.

ஆங்கில ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்தது. இதன் கிளைகள் 41 நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் தெற் காசியாவில் இதற்கான கிளைகள் இது வரை அமைக்கப்படவில்லை.

இந்தநிலையில், கொழும்பில் தெற்காசியாவுக்கான தலைமையகம் அமைக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## பங்குச்சந்தை வாடிக்கையாளர்களுக்கு இணையத்தளச் சேவை சில அறிமுகம்

கொழும்பு பங்குச்சந்தை வாடிக்கையாளர்களுக்கான இணையத்தள சேவைகள் சில அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலமாக வாடிக்கையாளர்கள் பங்குச் சந்தை தொடர்பான தகவல்கள், முதலீட்டு விவரங்கள், மாதாந்த அறிக்கைகள், ஆண்டறிக்கைகள் உள்ளிட்ட பல தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

குறித்த கொடுக்கல் வாங்கல்களின் போது பெற்றுக் கொள்ள வேண்டியேற்படும் வைப்புப் பணத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பது இதன் விசேட அம்சமாகும். (த)

## நுட்பம்




### அப்பிள் அதிருப்தி

அப்பிள் நிறுவனம் தனது இலத்திரனியல் சாதனங்கள் உட்பட ஏனைய உற்பத்திகளை பயனர்கள் நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கு 'அப்பிள் பே' எனும் வசதியை அறிமுகம் செய்திருந்தது.


பலத்த வரவேற்பைப்பெற்ற இந்த வசதி உலகின் பல பாகங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக ஆஸ்திரேலியாவில் அறிமுகம் செய்தவேளை பெரும் சிக்கலை அப்பிள் நிறுவனம் எதிர்நோக்கியது.

அதாவது ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த குறித்த சில வங்கிகள் 'அப்பிள் பே' முறையை ஏற்றுக்கொள்ளவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்குக் காரணம் அந்தத் தொழில்நுட்பத்தைக் குறித்த வங்கிகள் விளங்கிக் கொள்ளாமையே எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான பிரேரணையில் கைச்சாத்திட்டபோதிலும், நடைமுறைப்படுத்துவதற்கு அந்த வங்கிகள் மறுப்பு தெரிவித்துள்ளன.

இதேவேளை – 'அப்பிள் பே' முறைமை எவ்வாறு செயற்படுகின்றது என்ற தெளிவைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஆஸ்திரேலியாவிலும் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (த)



### இதயத்துடிப்பை அறிய இலத்திரனியல் மோதிரம்

இன்றைய காலத்தில் மனிதர்களிடம் மனிதாபிமானமும், உணர்வுகளும் குறைந்து வருகின்றது என்னவோ உண்மைதான்.

இதனை விஞ்ஞானிகள் கருத்தில் கொண்டார்களோ என்னவோ? இவற்றுக்கு நிகரான இலத்திரனியல் சாதனங்களை வடிவமைத்து வருகின்றனர்.

ஆம், தற்போது உங்கள் துணையின் இதயத்துடிப்பை உடனுக்குடன் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் இலத்திரனியல் மோதிரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

எச்.பி. ரிங் எனும் இந்தச் சாதனமானது தொடுகை தொழில்நுட்பத்தைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனை அன்ரோயிட் மற்றும் ஐ.ஓ.எஸ். சாதனங்களுடன் இணைத்து பயன்படுத்த முடியும்.

தற்போது இந்தச் சாதனத்துக்கான முற்பதிவுகள் இடம்பெற்றுவரும் நிலையில், இதன் பெறுமதி 600 டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE
15/8/2016
www.cse.lk

| | | | |
|---|---|---|---|
| ASPI | ↑ 60.46 | 6,582.60 | 6,522.14 |
| S&P SL20 | ↑ 34.81 | 3,601.65 | 3,566.84 |
| வியாபாரப்புரள்வு | | 675,144,448 | 725,006,208 |
| உள்நாடு- கொள்வனவு | | 505,484,608 | 369,505,248 |
| விற்பனை | | 568,080,256 | 524,184,704 |
| வெளிநாடு- கொள்வனவு | | 169,659,824 | 355,500,960 |
| விற்பனை | | 107,064,208 | 200,821,520 |



| | | | | |
|---|---|---|---|---|
| லங்கா ஐ.ஓ.சி | LIOC.N | 40 | 2,665,960 | 105,868,587 |
| அ'.ஸ்டர் | AGST.N | 6 | 10,121,583 | 55,691,960 |
| டிஸ்டில்லரீஸ் | DIST.N | 274 | 199,098 | 53,740,040 |
| செவ்ரோன் லுப்ரிகன்ட்ஸ் | LLUB.N | 164.9 | 325,897 | 52,995,539 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 87 | 419,398 | 36,527,626 |
| சம்பத் வங்கி | SAMP.N | 250 | 139,517 | 34,870,368 |
| அக்சஸ் இஞ்சினியரிங் | AEL.N | 24.8 | 1,352,699 | 33,282,469 |
| லக்சாப்பான பட்டெரீஸ் | LITE.N | 12.2 | 2,381,225 | 27,364,362 |
| ரெக்ஸ்ரேட் ஜேர்சி | TJL.N | 41 | 461,580 | 18,722,667 |
| ரோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 44.1 | 409,127 | 17,921,147 |

அறிவித்தல்கள் - பங்குலாபம்
ரேணுகா அக்ரி பூட்ஸ் (RAL)- பங்கு ஒன்றிற்கு Rs. 0.10
ரேணுகா ஹோல்டிங்ஸ் [illegible]
ரேணுகா பூட்ஸ் (COCO)- பங்கு ஒன்றிற்கு Rs. 0.35
அலையன்ஸ் பைனான்ஸ் (ALLI) - பங்கு ஒன்றிற்கு Rs. 24.00

சந்தைத் தகவல்கள்

| | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| [illegible] | 222 |
| விலை உழைப்பு | 13.6 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்கலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமல்....

விசாரணைகளுக்கு நேற்று முன்னிலையாகியிருந்தபோது விசாரணைகளின் பின்னர் நாமல் கைது செய்யப்பட்டார்.

தனியார் நிறுவனம் ஒன்றின் 125 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்தமை தொடர்பிலான விசாரணைகளுக்கே அவர் நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, ரக்பி விளையாட்டு வளர்ச்சிக்காக கிரிஸ் குழுவிடம் இருந்து பெற்றுக்கொண்ட 70 மில்லியன் ரூபா நிதியை மோசடி செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கடந்த ஜுலை 11 ஆம் திகதி, பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவினரால் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 18 ஆம் திகதி அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மீண்டும் மற்றொரு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். (த-5)

## பொறுமையாய்....

கூட்டமைப்பினரால் எடுத்துக் கூறப்பட்ட விடயங்களை அமெரிக்கத் தூதுவர் கவனமாகக் கேட்டறிந்து கொண் டார்.

இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்காவில் கூட இப்போதும் பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கும் கறுப்பினத்தவர்கள் மீதான தாக்குதல் இடம்பெறுகின்றது. எனவே பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும். பொறுமையாக இருங்கள். விடயங்கள் நடைபெறுகின்றன. அவற்றைக் குழப்ப வேண்டாம். நாம் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுப்போம் என்று தெரிவித்துள்ளார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவ்வளவோ இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பதையும் அவை தீர்க்கப்படாமல் நாட்டில் சமாதானம் ஏற்படாது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். (த-5)

## வீட்டுத்....

மாவட்டச்செயலர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் கிளி நொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே மேற்படி விடயம் ஆராயப் பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. ஒவ்வொரு வீடும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைப் பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கப்படும்போது மேற்படி தொகையே வழங்கப்பட்டது. இந்தப் பெறுமதிக்குள் வீடு அமைப்பதற்குப் பொதுமக்கள் பல இடர்களை எதிர்நோக்கியிருந்தமையை மாவட்டச்செயலர்கள் சுட்டிக்காட்டினர். அத்துடன் பொருள்களுக்கான சந்தைப் பெறுமதி அதிகரித்துள்ளதையும் குறிப்பிட்டனர். மீள்குடியேற்ற அமைச்சால் அமைக்கப்படும் வீடுகளுக்கு 8 லட்சம் ரூபா வழங்கப்படுவது போன்று இதற்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்தனர்.

இதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரிகள் 8 லட்சம் ரூபா வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. 6 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை வழங்க இணங்கியுள்ளனர். அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படுவதால், 3 ஆயிரம் வீடுகள் என்ற எண்ணிக்கையானது 2 ஆயிரத்து 400 வீடுகளாகக் குறைக்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (த-5-101)

## பொலிஸ்...


காயங்களுக்கு உள்ளாகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை மன்னார் இலுப்பைக்கடவை சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி அருட்தந்தையர்கள் சகிதம் சென்று கொண்டிருந்த வாகனமே விபத்தில் சிக்கியது. அந்த நேரத்தில் பொலிஸ் அலுவலர் வீதிப் போக்குவரத்துச் சோதனையில் ஈடுபட்டிருந்தார். வாகனத்தில் பயணித்த அருட்தந்தை ஒருவரும் மற்றொருவரும் பொதுமகனும் கால்களில் காயமடைந்தனர். அவர்கள் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அங்கிருந்து அருட்தந்தை மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்திசாலக்குக் கொண்டு மாற்றப்பட்டார். (உ-21)

# மரண அறிவித்தல்கள்

## ஆழ்வாப்பிள்ளை இராஜசிங்கம்

(இளைப்பாறிய உப அதிபர் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை )



வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியின் இளைப்பாறிய உப அதிபர் ஆழ்வாப்பிள்ளை இராஜசிங்கம் 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை அருளம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற மகிழாரூப்பியத்தின் அன்புக் கணவரும், இராசமலர் இராஜரட்ணம், இன்பமணி செல்வராஜா, இன்பராணி ரட்ணம், ஆழ்வாப்பிள்ளை அருளானந்தம் ஆகியோரின் சகோதரனும், நிர்மலா இராஜசிங்கம், காலஞ்சென்ற ராஜனி திராணகம மற்றும் சுமதி சிவமோகன், வாசுகி இராஜசிங்கம் ஆகியோரின் தந்தையும், சின்னையா ராஜேஷ்குமார், தயபால திராணகம, மிக் சற்வின் ஆகியோரின் மாமனாரும், நர்மதா, ஷாரிகா, வள்ளுவன், மைத்திரேயி, கௌசிகன் ஆகியோரின் பேரனும், மிராக், அனீசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (16.08.2016) செவ்வாய்க்கிழமை 474, நாவலர் வீதியில் (நல்லூர்க் குறுக்குத்தெரு அருகில்) அமைந்துள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்று திருவுடல் செம்மணி வீதி, நல்லூரில் அமைந்துள்ள சென்.ஜேம்ஸ் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/3796)
(11,17)

**021 222 8178**

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் (கிளி) செல்லத்துரை

மலர்வு
20
.
09
.
1948



உதிர்வு
14
.
08
.
2016

யாழ்.மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கு சோமசுந்தரப்புலவர் வீதியை வசிப்பிடமாகவும், வவுனியா வேப்பங்குளத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் செல்லத்துரை 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்லத்துரையின் பாசமிகு மனைவியும், தயாநந்தினி,தயானந்தன் (துயா-சுவிஸ்), சகுலாநந்தினி, சுதாநந்தினி, சுதாநந்தன் (ரமேஷ்), சதாநந்தினி(மீரா - ஐக்கிய அமெரிக்கா), சதாநந்தன் (ஜெகன் -கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தியாகேஸ்வரி, சுப்பிரமணியம், கமலாம்பிகை, நிமலா, தேவராசா (குகன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவச்சந்திரன், சுகிர்தமலர் (சுகி- சுவிஸ்), நந்தகுமார், பாலரூபன், சயந்தினி, திரவியராஜா(குகன் - ஐக்கிய அமெரிக்கா), நிர்மலஜோதி (ஜோதி - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஜன், அஜந்தன் (கட்டார்), நிவேதிகா, லிக்ஷனா, சாருஜா, சௌம்யா, தபிஷன் (சுவிஸ்), சஸ்மிதா, லக்ஷாயினி, தர்ணிகா, சகீர்த்தனா, டினோஜன், சோபிசா, திபிக்கா, கிஷாந், வைஷ்ணவி, லக்ஷாலினி, அக்ஷனன் (ஐக்கிய அமெரிக்கா), துவாரகா, பிரவீனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(V/84)
(11,17)

தகவல்: குடும்பத்தினர்.

**சந்திரன் - +9477 515 2383, ரமேஸ் - +9477 128 1813**

## தர்மலிங்கம் ஜெகதீஸ்வரன்

பிறப்பு
27
.
04
.
1960



இறப்பு
10
.
08
.
2016

யாழ். நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா பெரியதம்பனை, சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ஜெகதீஸ்வரன் 10.08.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் கணபதிப்பிள்ளை - கமலம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கிருபாதேவியின் அன்புக் கணவரும் அஸ்மிதா, அனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தராணி, சற்குணராணி, லீலாராணி, பேரின்பராணி, நாகேஸ்வரி, கெங்கேஸ்வரன், சத்தியசீலன் ஆகியோரின் ஆருயிர் அண்ணாவும் தில்லைநாதன், லம்போதரராஜன், நகுலேஸ்வரன், மங்களேஸ்வரன் , தருமராசா,றினோயா, ஜனனி றஜீம், சுதர்சினி, மோகனதாஸ், விக்கினேஸ்வரி, சுகன்யா, நந்தன், மேகலா ஆகியோரின் அன்பு மச்சானும் நித்தியா, வேனுசங்கர், சுகன், சுகன்யா, றஜி, திவ்வியா, மதுஸா, கீர்த்தி, குணா,மது, யது,கவி, தக்சயா, யனோத், டினோத், லக்சிகா, அஜந்தன், அபிசன், அந்துசன், அஸ்வின், அணிஸ்ரன், யதுசன், கயீபன், பிரணவன், தாணியா, அவனிதா, சிவகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பவிஸ், கதிரா, இலக்கியன், அபிரா, விசால், சீமா, பிரிதோஷியா, அகில், கிஸாந், அபிசேக், ஆரணன், ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், வைத்திலிங்கம் மற்றும் கார்த்திகேசு, முருகேசு, சண்முகம், வேலாயுதம் ஆகியோரின் பெறாமகனும் லக்சுமியின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2016) புதன்கிழமை அன்னாரின் சுவிஸ் (Laufen) இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதாரங்களை....

வலகம் உருவாக்கப்பட்டதும் அது முழு வீச்சான அதிகாரம் கொண்ட நிறுவனமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
காணாமற்போனோரின் அலுவலகம் இறுதியானது அல்ல. இனிமேல் தொடரப் போகும் நடவடிக்கைகளின் தொடக்கமே அது. இதனைத் தொடர்ந்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மற்றும் பொறுப்புக் கூறலுக்கான நீதிமன்றம் ஆகியனவும் உருவாக்கப்படும். இவையெல்லாமே உலக நாடுகளின் அழுத்தத்தால் செய்யப்படுகின்றன. உள்ளூரிலேயே உருவாகி எழுந்த ஒரு தயாரிப்பல்ல இவையெல்லாம்.
தேசிய, மாகாண மட்டங்களில் உள்ள அரச நிறுவனங்கள் எல்லாமே காணாமற்போனோரின் அலுவலகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கடமைப்பாட்டைக் கொண்டவை. எந்தவொரு நிறுவனமாவது நபராவது அலுவலகம் கேட்கும் ஆவணத்தை அல்லது விவரங்களைக் கொடுக்கத் தவறினால் அல்லது மறுத்தால் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தின் கீழ் அத்தகைய நிறுவனங்கள் அல்லது நபர்களுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அலுவலகம் வழக்குத் தாக்கல் செய்யும்.
அவர்கள் எப்படிச் செயற்படுகிறார்கள் என்பது ஒரு பொருட்டே அல்ல. அந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரிக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.
ஏனெனில் அவர்கள் இலங்கையின் சட்டங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்கள். இவை எல்லாம் மிகவும் பாரதூரமானவை. அதனால்தான் இதனை நாம் எதிர்க்கிறோம். உருவாக்கப்படவுள்ள அலுவலகத்திற்கான சட்டத்தில் வடக்கு- கிழக்கில் காணாமற்போனவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது. காணாமற்போன அனைவர் தொடர்பான விசாரணைகளும் ஒரே மாதிரியாக மேற்கொள்ளப்படவேண்டும்.
எந்தவொரு நாட்டிடமோ அரச சார்பற்ற நிறுவனத்திடமோ இருந்து நேரடியாக நிதியைப் பெற்றுக்கொள்ள இந்த அலுவலகம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தமக்குத் தேவையான எந்தவொரு நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொள்வதற்காக யாருடனும் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும் அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாவற்றின் மூலமும் அந்த அலுவலகத்துக்கு வரையறையற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது இலங்கைக்குப் பெரும் சீரழிவைக் கொண்டு வரும்.
அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெறும் நிதி திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்கத்தின் ஊடாகவே பெறப்படவேண்டும் என்றும் 48 மணி நேரத்திற்குள் அது குறித்து பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்படவேண்டும் என்றும் முன்வைக்கப்பட்ட திருத் தங்களை அரசு ஏற்றிருப்பது பயனற்றது.
ஒருவர் காணாமற்போனவர் என்று முறையிடப்பட்ட பின்னர் வெளிநாடொன்றில் அவர் இருப்பது அறியப்பட்டால் அவர் பற்றிய விவரங்களை வெளிப்படுத்தாது இருப்பதற்கான அதிகாரத்தையும் இந்த அலுவலகம் கொண்டிருக்கிறது. எதற்காக இத்தகைய இரகசியத் தன்மைகள் எல்லாம்?
காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தேடிக் கண்டறிவதற்கு நாம் எதிரானவர்கள் அல்லர். அந்த நடவடிக்கை நாட்டைச் சீரழிவுக்கு உள்ளாக்கும் விதத்தில் அமையக்கூடாது. இந்தச் சட்டத்தின் குறைகள் என்ன என்று ஜனாதிபதி கேட்டிருந்தார். அவற்றை இப்போது நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம். இதில் கவனம் செலுத்தி நாட்டைப் பாதுகாக்கவேண்டும் அவர் - என்றார் பீரிஸ். (உ)

## பொருளாதார....

ஓமந்தையில் பொருளாதார வலயம் அமைக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதனை நிராகரித்த அமைச்சர் பி.ஹரிசன், இந்தப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த விடயத்தை எடுக்க வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.
முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரனின் இணக்கத்துடனேயே, மதகுவைத்தகுளத்திலும், , மாங்குளத்திலும் பொருளாதார வலயம் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் அங்கு குறிப்பிட்டார்.
இரு இடங்களிலும் பொருளாதார வலயம் அமைப்பதற்கு முன்னோடியாக, போக்குவரத்துக்கான வீதிகள் காப்பெற்றாக அமைக்கப்படவேண்டும் எனவும், மின்சார சபை மின்விநியோகத்துக்கான நடடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் இதேபோன்று ஏனைய உட்கட்டுமானங்களுக்குரிய வசதிகளை தொடர்புடைய திணைக்களங்கள் முன்னெடுக்கவேண்டும் என்பதையும் அமைச்சர் ஹறிசன் வலியுறுத்தியுள்ளார்.
கலந்துரையாடலின் பின்னர், மதகுவைத்த குளத்தில் பொருளாதார வலயம் அமையவுள்ள தேக்கவத்தையையும், மாங்குளத்தையும் அமைச்சர்கள் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (த-5-10)

## முதலமைச்....

பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் 59ஆவது அமர்வு இன்று இடம்பெறவுள்ளது. இதன் போது, வடக்கு மாகாண அமைச்சர்களை வெளிநபர்கள் ஊடாக விசாரணை செய்யும் முதலமைச்சரின் தீர்மானத்தின் மீது தொடர் விவாதம் நடைபெறவுள்ளது.
கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற விவாதத்தின் தொடர்ச்சி இன்று இடம்பெறும்.
முதலமைச்சரின் தீர்மானத்துக்கு ஒரு பகுதி மாகாணசபை உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதன் காரணமாக முதலமைச்சரின் தீர்மானம் திருத்தம் இன்றி இன்று நிறைவேற்றப்படுமா என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.
இதேவேளை, விவசாய அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராக சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரிக்கக் கோரும் பிரேரணை மீது நடவடிக்கை எடுக்கக் கோரும் ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதியின் பிரேரணையும் இன்று எடுத்துக் கொள்ளப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

**வேலை வாய்ப்பு**
K.K.S வீதி சிவலிங்க புளியடியிலுள்ள Phone Shop ஒன்றிற்கு பெண் பிள்ளைகள் தேவை.
0778900422

**வேலைவாய்ப்பு**
வடமாகாணத்தில் நிர்மாணத்துறையில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனத்திற்கு கீழ்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
1.பொறியியலாளர் (CivilEngineer) கட்டட பொறியியலில் 10 வருட அனுபவமுடைய BSc பட்டதாரி பொறியியலாளர் ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது நிரந்தர அடிப்படையிலோ தேவை.
2.கணிய அளவையியலாளர் (QuantitySurveyor) பட்டதாரி அல்லது 3 வருடத்துக்கு குறையாத கட்டடத்துறை அனுபவமுள்ளவர் தேவை.
3.தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (Technical Officers) - NDT/ HNDE தகைமையுடன் 5 வருட அனுபவம் உள்ளவர் தேவை.
தகைமையுடையோர் முழுவிவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 24.08.2016 ஆம் திகதிக்கு முன்பாக பின்வரும் விலாசத்துக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
முகாமையாளர்.
இல. 45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்**
மாகாணக் கல்வித்திணைக்களம்,
வடமாகாணம்.
மேற் குறித்த தலைப்பின் கீழ் 09.08.2016 அன்று உதயன் பத்திரிகையின் 24 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய மேலும் வட மாகாணத்தின் வலயக்கல்வி அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒன்று வீதம் 12 வாகனங்களுமாக மொத்த 18வாகனங்கள் (Van) ஆக மாற்றப்பட்டுள்ளது.
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் : 021 224 2804 (பிரதம கணக்காளர் மாகாணக்கல்வித்திணைக்களம், வட மாகாணம்)
தலைவர்/மாகாணக்கல்விப்பணிப்பாளர்
திணைக்கள பெறுகைக்குழு,
மாகாணக்கல்வித்திணைக்களம், வட மாகாணம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

**அறை வாடகைக்கு**
நல்லூருக்கு அருகில் அறை வாடகைக்குண்டு. உத்தியோகம் பார்க்கும் பெண் விரும்பத்தக்கது.
தொடர்பு - 075 6743165

**வேலையாள்கள் தேவை**
*கனரக சாரதி
*கணக்கு வேலை தெரிந்தவர். (கணினி அறிவுடையவர்கள்)
*அலுவலக உதவியாளர் போன்ற வேலைகளுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை.
தொடர்பு - 077 7890398
கொழும்பு பெயின்ட் சென்ரர்.
பருத்தித்துறை வீதி, நீர்வேலி, வில்லு மதடி.

**சமையல் ஆள் தேவை**
யாழ் நகரை அண்மித்த பகுதியில் உள்ள சைவ உணவகத்திற்கு சமையல் வேலைக்கு அனுபவம் வாய்ந்த வேலையாள்கள் தேவை.
தொடர்பு.0779063036,0772365622

**ஆள்கள் தேவை**
யாழ் நகரில் கட்டட நிர்மாண வேலைக்கு மேசன்,கூலி ஆள்கள்,கம்பி கட்டுபவர், தச்சுத் தொழிலாளர்,எலக்ரிசன்,பிளம்பர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு.0776701293


**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**ஆனைக்கோட்டை**
**ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்**


வட்டாரம்:-07
ஆதன இல :-69 (புதிய பதிவு)
வீதி:-புளியங்கண்டு பிள்ளையார் வீதி
கிராமசேவையாளர் பிரிவு:-J/133 ஆனைக்கோட்டை

வட்டாரம் 07 ,புளியங்கண்டு பிள்ளையார் வீதி.ஆதன இல 69 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை **"மருதவண்ணான் வளவும் மறுபிரிவும்"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 06 கொண்ட இவ் வாதனம் யாழ்ப்பாணம். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னத்தம்பி செல்லப்பா பெண் சின்னம்மா ஆகிய இவர்களால் அதே இடத்தைச்சேர்ந்த செல்லப்பா முத்துலிங்கராசா என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு .மாணிக்கம் தியாகராஜா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 1190 ஆம் இலக்க 01.06.1992 திகதி அறுதி உறுதிமூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்.நில அளவையாளர் திரு. T. தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 4890 ஆம் இலக்க 30.09.2011 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது **"மருதவண்ணான் வளவும் மறுபிரிவும்"** நிலப்பரப்பு 03 குளி 7.07 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பத்திரிகை பிரசுரத்திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமனது செல்லப்பா முத்துலிங்கராசா என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை , மானிப்பாய்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு





கடந்த
19.07.2016
செவ்வாய்க்
கிழமை
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்
தலைவர்

### அமரர் சதாசிவம் தியாகராசா
(STR.செல்வாக்கு)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.08.2016) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 18.08.2016 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அழைக்கின்றோம்.

மாசிவன் சந்தி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசு....

நேற்று மதியம் 1.30 மணியளவில், கிறீன் கிறாஸ் விடுதியில் சிவில் சமூகத்தைச் சேர்ந்த சிலரைச் சந்தித்துப் பேசினார் தூதுவர். இந்தச் சந்திப்பில், ஆகக் குறைந்தது கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்று வலியுறுத்தப்பட்டதாக அதில் கலந்துகொண்ட சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார். "தமிழ் மக்கள் ஒருபோதும் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவொரு தீர்வையும் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. இலங்கை அரசைக் கூட்டாட்சிக்கு இணங்கச் செய்யும் வகையில் அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும்" என்று சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது என்றார் அவர்.

இராணுவத்தினரின் காணி விடுவிப்புக்கள் இன்னமும் முழுமை பெறவில்லை. இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதால் தமிழ் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. பொறுப்புக் கூறல் விடயத்தில் அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளக்கூடாது. ஐ.நா. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொறுப்புக்கூறல் பொறிமுறைக்குள் பன்னாட்டுநீதிபதிகள் உள்வாங்கப்படவேண்டும் ஆகிய கருத்துக்களும் இந்தச் சந்திப்பில் அமெரிக்கத் தூதரிடம் வலியுறுத்தப்பட்டன. இதன் பின்னர் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் பத்துப் பேரை, அமெரிக்கத் தூதுவர் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தாவது:

வடக்கு மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட முன்மொழிவை அமெரிக்கத் தூதுவரிடம் கையளித்தோம். எமது அரசியல் விருப்புகளையும் வேணவாவையும் நாம் அதில் முன்வைத்திருந்ததைச் சுட்டிக்காட்டினோம். ஜெனிவாத் தீர்மானத்தின் அடிப்படையில், காணாமற் போனோரின் அலுவலகம் அமைப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த அலுவலகம் செயற்படத் தொடங்கிய பின்னர்தான் அதனைப் பற்றிக் கூறமுடியும் என்று தெரிவித்தோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக இலங்கை அரசு ஐ.நாவில் உறுதியளித்திருந்தது. ஆனாலும் இன்னமும் அது நீக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினோம். அந்தச் சட்டத்தை நீக்கிப் புதிய சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குக் கால அவகாசம் தேவை என்றால், அதனை நடைமுறைப்படுத்தாமலாவது இருக்கலாம், சாதாரண சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் எடுத்துச் சொன்னோம்.

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள்கூட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மீண்டும் கைது செய்யப்படுகின்றனர், இது ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கில், புத்தர் சிலைகள் அடாத்தாக வைக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்களை எடுத்துக்கூறினோம். வடக்கில் எமது இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்குடன் இன்னமும் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளையும் விளக்கினோம். முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வின்போது ஊசி ஏற்றப் பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பிலும் அமெரிக்கத் தூதுவரிடம் சுட்டிக்காட்டினோம்–என்றார். (த-5-106)

## இராணுவ....

கப் பட்டிருந்ததாக அந்த மக்கள் கூறினர். ஆயினும் இதற்கெல்லாம் தாம் சளைக்கப் போவதில்லை எனவும், கோரிக்கைகளை அடைவதற்கான தமது போராட்டம் நேற்று 3 ஆவது நாளாகத் தொடர்ந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை பங்குகொண்டுள்ளனர். இதனால் தமக்கான உணவை இராணுவ முகாமுக்கு முன்பாக வைத்துச் சமைத்து உண்டு கொண்டுபோராட்டத்தைத்தொடர்வதாகவும்மக்கள்குறிப்பிட்டனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதிக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள், ஒளிப்படங்களை எடுக்க முற்பட்டபோது அங்கிருந்த படையினரால் மிரட்டப்பட்டதாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த மாதமும் சுழற்சி முறையிலான கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்ட பரவிப்பாஞ்சான் மக்கள், கிளிநொச்சி மாவட்ட செயலரின் உறுதிமொழியை அடுத்துப் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்களின் காணிகளில் 4 ஏக்கரை விடுவிப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு முன்வந்துள்ளதாகவும், அந்த காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் எனவும் மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்திருந்தார்.

ஆயினும் அவரது உறுதிமொழியின் பிரகாரம் இன்றுவரை தமது காணிகள் விடுவிக்கப்படவில்லை என்று தெரிவித்தே மக்கள் மீண்டும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என்று கூறப்பட்டது. (த-21-ரி3)

## கைதி சாவு....

அவிசாவெல–புவக்பிட்டிய புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இரு கைதிகளுக்கிடையே இடம்பெற்ற சண்டையில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குருவிட்ட பகுதியைச் சேர்ந்த கனேஸ் பிரபு (வயது - 28) என்று அவிசாவெல பொலிஸார் தெரிவித்தனர். மற்றொரு கைதியுடன் ஏற்பட்ட சண்டையில் ஈடுபட்ட பிரபு பின்னர் திடீரென நோய்வாய்ப்பட்டார். அருகில் இருந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர். (உ-21)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகாமிப்பிள்ளை சரவணமுத்து



கோப்பாய் V.C லேனை பிறப்பிடமாகவும், எழுதுமட்டுவாழ், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை சரவணமுத்து 15.08.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நிரந்தர முகவரி,
விழுவளை,
எழுதுமட்டுவாழ் வடக்கு,
எழுதுமட்டுவாழ்.
T.p:-0777310293
T.p:-0778084422

தகவல்:
ச.கிருபாகரன்(கிருபா)
மகன்.
தற்காலிக முகவரி,
கோப்பாய் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

### திருமதி பரமேஸ்வரி சம்பந்தபிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

பிறப்பு 1935 . 02 . 24



இறப்பு 2016 . 08. . 07

சாவகச்சேரி வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சம்பந்தபிள்ளை கடந்த (07.08.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்புப்புதல்வியும் திரு. திருமதி கதிரித்தம்பி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சம்பந்தபிள்ளையின் அன்புமனைவியும் சந்திரமோகன் (லண்டன்), தமயந்தி (ஆஸ்திரேலியா), மாயாறாணி (லண்டன்), துஸ்யந்தன் (லண்டன்), கோகுலரமணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா - சுப்பிரமணியம், யோகம்மா - சுப்பிரமணியம், Dr.குணசிங்கம் மற்றும் அன்னலட்சுமி, நாகராசா, ராசாத்தி, சிவானந்தம், தவமணி, விவேகானந்தன், பொன்னம்பலம் (சட்டத்தரணி), லங்காதேவி, மனோகரன், Dr. பாலசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் பற்றீசியா, இளங்கோ, நவநீதநாதன், உஷா, சத்தியவாணி ஆகியோரின் அன்புமாமியும் ஹரிகிருஷ்ணன், காயத்ரி, அபிமன், கிருத்திகா, நேத்ரா, நேவான், நேவின்கா, ஜனகன், ஜதுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2016) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.


லங்கா வாசா,
கண்டி வீதி, சாவகச்சேரி.

தகவல்:
சகோதரிகள்

### செல்லத்துரை இராசா

ஓம் விராட் விஸ்வபிரமனே நமஹ

(கலாபூஷணம் பிரபல மிருதங்கம், மோர்சிங் வித்துவான்)



காளி கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசா (கலாபூஷணம் பிரபல மிருதங்கம், மோர்சிங் வித்துவான்) நேற்று (15.08.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தெய்வானை தம்பதியரின் அன்புமகனும் இராயேஸ்வரியின் அன்புக்கணவரும் கவிதா, சுசிதா, ஜெயந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவானந்தன், கமல்ராஜ் ஆகியோரின் அன்புமாமனும் நஷ்மிகா, டதுநாத், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 4747348

## மரண அறிவித்தல்கள்

### பிரதம குரு பாலசுப்பிரமணியஐயர் சிற்சபேசக்குருக்கள் (மணிஐயர்)

பூமியில் 1944 . 11 . 01



மாணிக்க விநாயகர் பாதத்தில் 2016 . 08 . 15

சம்மாங்கோடு ஸ்ரீமாணிக்கவிநாயகர் ஆலயத்தில் ஐம்பத்துஐந்து வருடங்களுக்கு மேல் இறைபணிபுரிந்த பிரதமகுரு பாலசுப்பிரமணிய ஐயர் சிற்சபேசக்குருக்கள் (மணிஐயர்) (15.08.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற K.S பாலசுப்பிரமணியஐயர் (பணிப்பாளர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம்) - சாரதாம்பாள் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்வந்திநாதஐயர் - ஜானகிஅம்மாள் தம்பதியரின் மருமகனும் அமிர்தாம்பிகையின் அன்புக்கணவரும் ஸ்ரீவித்தியா, பாலசுப்பிரமணியசர்மா (ஷங்கர்), ஸ்ரீவத்ஸலா ஆகியோரின் அன்புத்தந்தையும் பத்மநாதசர்மா, சுகன்யா, சுவாமிநாதராகவன் ஆகியோரின் அன்புமாமனும் நிதிஸ், ஸ்ரீஹரி, ஸ்ரீநிகேஸ் ஆகியோரின் அன்புத்தாத்தாவும் மீனலோஜினி காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி, சுசிலாதேவி காலஞ்சென்ற பாஸ்கரன், ராதா, சுந்தரராமன், கல்யாணி, விமலா, கமலா, சாவித்திரி ஆகியோரின் சகோதரரும் சிவஸ்ரீ பரமானந்தக்குருக்கள் காலஞ்சென்ற குமாரசாமிசர்மா, சிவஸ்ரீ செந்தில்நாதக்குருக்கள், பிரம்ம ஸ்ரீசோமஸ்கந்தசர்மா ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.08.2016) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் பொறளை A.F ரேமண்ட் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 2.45 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி மாலை 5மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
011 2508969, 077 2209925,
077 7287946, 077 7715472

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

### திருமதி மகாலட்சுமி செல்லக்கிளி



பிறப்பு 10.07.1949

இறப்பு 12.08.2016

யாழ்.கோப்பாயைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Stabi ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி செல்லக்கிளி 12.08.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - கிருஷ்ணம்மா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தெரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்லக்கிளியின் அன்பு மனைவியும், செல்வகுமார் (டுபாய்), சுரேஷ்குமார், சுரேஸ்ரினா, சுகிர்தா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கிருபன் மற்றும் வனராஜா, பாஸ்கரன், ஜெயந்தி, சுகந்தி, நாதன், கலாவதி, சதீஸ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், றேபுஜெயா, தர்சினி, வினோதரன், சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமி யாரும், சேறோன், எப்சியா, சுபஸ்திகா, மதுசாளினி, ஸ்ருத்திக்கா, வைஜித்தரன், குயின்சி, வைஷ்ணவி, ஷாஷ்வினி, ஷாஷ்வின் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் நாளை (17.08.2016) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சுவிஸில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
சூசையப்பர் கோயிலடி.

தகவல்:
குடும்பத்தினர்.

(73804)
(11.17)
076 697 2195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிகள் தொடரும் வில்லியம்சன் உறுதி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தமது வெற்றிகள் தொடரும் எனத் தெரிவித்தார் நியூசிலாந்தின் தலைவரான கனே வில்லியம்சன்.

தென்னாபிரிக்க – நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் எதிர்வரும் 19 ஆம் திகதி இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறுவதால் அந்த அணியின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையிலேயே வில்லியம்சன் இவ்வாறு தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்கு முன்பாக சிம்பாப்வேயுடன் நடைபெற்ற இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்று கைப்பற்றியமை மிகவும் மகிழ்ச்சி. தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்கான ஓர் சிறந்த தயார்ப்படுத்தலாக சிம்பாப்வேக்கு எதிரான தொடர் அமைந்தது. எமது வெற்றிகள் தென்னாபிரிக்காவிலும் தொடரும் என்பதில் உறுதியாக உள்ளேன். இங்குள்ள (தென்னாபிரிக்கா) ஆடுகளங்களில் தென்னாபிரிக்கா அபாரமாகச் செயற்படும் என்பதையும் நாம் நன்கு அறிவோம் என வில்லியம்சன் மேலும் தெரிவித்தார். (ம)

## கோல்ப் விளையாட்டில் பிரிட்டனுக்குத் தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற கோல்ப் விளையாட்டில் பிரிட்டனுக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.

பிரிட்டனின் சார்பாகக் களமிறங்கிய ஜஸ்டின் றோஸ் தங்கப் பதக்கத்தையும், சுவீடனின் ஹென்றிக்ஸ் வெள்ளிப் பதக்கத்தையும், அமெரிக்காவின் மட் கிச்சர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

1904 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் கோல்ப் முதல் முறையாக இடம்பெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஒலிம்பிக் தொடர்களில் கோல்ப் புறக்கணிக்கப்பட்டது. ஓர் தசாப்த கால காத்திருப்புக்குப் பின்னர் கோல்ப் சம்மேளனங்கள், வீரர்களின் பரிந்துரைக்கு அமைவாக பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் தொடரில் கோல்ப் மீண்டும் சேர்க்கப்பட்டது. இந்த நிலையில் பிரிட்டனின் இந்தத் தங்கம் ஓர் வரலாற்றுப் பதிவாகப் பார்க்கப்படுகிறது. (ம)






## ரியோ ஒலிம்பிக் ரெனிஸ்; முர்ரேக்குத் தங்கப் பதக்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் ரென்னிஸ் ஒற்றையர் ஆட்டத்தில் பிரிட்டனின் அன்டி முர்ரே தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

நேற்று நடைபெற்ற தங்கப் பதக்கத்துக்கான போட்டியில் பிரிட்டனின் முர்ரேயும், ஆர்ஜென்ரீனா அணியின் டெல் பொட்ரோவும் மோதினர். ஜோகோவிக், நடால் போன்றோரை வீழ்த்திய பொட்ரோ முர்ரேக்கும் சவால் வழங்கினார். இதனால் முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் போராடி வென்றார் முர்ரே. இரண்டாவது செற் 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் பொட்ரோவின் வசமானது. தங்கப் பதக்கத்தைத் தீர்மானிக்கும் இறுதி செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முர்ரே 2:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றார். பொட்ரோவுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் ஸ்பெய்னின் நடாலை எதிர்த்து ஜப்பானின் நிசிகோரி மோதினார். முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் நிசிகோரி. 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாவது செற்றைக் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார் நடால்.

மூன்றாவது செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய நிசிகோரி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம)


## அரையிறுதியில் சென். பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் ஹாட்லிக் கல்லூரியை வீழ்த்தி, அரையிறுதிக்கு முன்னேறியது சென். பற்றிக்ஸ்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 310 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அனோயன் 101 ஓட்டங்களையும், மெனிக் 58 ஓட்டங்களையும், டில்சான் 56 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹாட்லிக் கல்லூரி அணியின் சார்பில் பிரியலக்சன் 3 இலக்குகளையும், ஜெயவர்மன், மதன் இருவரும் தலா இரு இலக்குகளையும், வீழ்த்தினர்.

300 பந்துகளில் 311 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 34.1 பந்துப் பரிமாற்றங்களில் 105 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததையடுத்து 205 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. பந்துவீச்சில் சென். பற்றிக்ஸின் சார்பில் ரஜீவ்குமார் 7 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)



## ரோகித்துக்கு நிரந்தர இடம் விராட் கோக்லி பரிசீலனை

ரோகித்தை டெஸ்ட் அணியில் நிரந்தரமாக இணைப்பதற்கு கோக்லி பரிசீலனை செய்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய டெஸ்ட் அணியின் முன்னாள் தலைவரான டோனியிலிருந்து தற்போதைய தலைவரான கோக்லி பல விடயங்களில் வேறுபடுகிறார். குறிப்பாக கோக்லி, 5 துடுப்பாட்ட வீரர், 5 பந்துவீச்சாளர்கள் (இலக்குக் காப்பாளரை விடுத்து) என்ற கொள்கையில் உறுதியாக உள்ளார். இதனால் மத்திய வரிசையில் அதிரடி காட்ட ஓர் வீரர் தேவைப்படுகிறார். எனவே அந்த இடத்துக்கு ரோகித்தை களமிறக்க கோக்லி முடிவு செய்துள்ளாராம். ரோகித் உள்ளே வந்தால் புஜாரா வெளியே செல்லவேண்டி வரும். இதன்படி கோக்லி தனது அணியை தவான், லோகேஸ் ராகுல், கோக்லி, ரகானே, ரோகித் சர்மா, அஸ்வின், சகா, புவனேஸ்குமார், மிஸ்ரா, சமி, இசாந் சாமா என்றவாறாக கட்டமைத்துள்ளாராம். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் அணிக்கு இன்சமாம் பாராட்டு

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2:2 என்று சமன் செய்தமைக்கு பாகிஸ்தானின் தலைமைப் பயிற்சியாளரான இன்சமாம் தனது பாராட்டைத் தெரிவித்தார்.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்கு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடர் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. இரு அணிகளும் தலா இரு வெற்றிகளைப் பதிவு செய்தன. தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றதால் அந்த அணிக்கு எதிரான தொடரைச் சமன் செய்தமையே பாகிஸ்தானின் சிறந்த அடைவு மட்டமாகக் கருதப்படும் நிலையில், அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளரான இன்சமாம் பாகிஸ்தான் அணிக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான தொடர் பாகிஸ்தானுக்கு ஓர் பரீட்சையாக அமையும் என்றே கருதினேன். இங்கிலாந்தை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவதென்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல. முதல் டெஸ்டை நாங்கள் வென்ற போதிலும், அடுத்த இரு ஆட்டங்களையும் வெற்றிபெற்று எமக்கு இங்கிலாந்து நெருக்கடி கொடுத்தது. தொடரைக் குறைந்தபட்சம் சமன்செய்ய வேண்டுமாயின் இறுதி டெஸ்ட் ஆட்டத்தைக் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையில், எமது வீரர்கள் அதைச் சாதித்தமை அபாரமானது என இன்சமாம் மேலும் தெரிவித்தார். (ம)



## சென். அன்ரனிஸ், மேரிஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்

கரணவாய், ஓக. 16

இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டங்களில், யங்ஹென்றிஸ் அணி பாதியில் விலகியமையால் சென். அன்ரனிஸ் வி. கழகமும், தனக்குரிய ஆட்டத்தை சமநிலையில் முடித்து சென். மேரிஸ் வி.கழகமும் அரையிறுதிகளுக்கு முன்னேறின.

**அன்ரனிஸ் - யங்ஹென்றிஸ்**

யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடர் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலேயே இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் வி.கழகமும், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி அரையிறுதிக்குத் தகுதிபெறும் நிலை இருந்தது. ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் அணிக்கு உள்ளெறிகை ஒன்று வழங்கப்பட்டது. நடுவர்களின் முடிவை எதிர்த்து அவர்களுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்த யங்ஹென்றிஸ் வீரர்கள் இருவர் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டனர். 9 வீரர்களுடன் யங்ஹென்றிஸ் ஆட்டத்தைத் தொடர்ந்தது. கோல்களின்றி முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் சென். ஹென்றிஸ் அணியின் வீரர்கள் மூவர் உபாதை காரணமாக ஆட்டத்திலிருந்து வெளியேறினர். அவர்களைப் பிரதியீடு செய்ய வீரர்கள் இல்லை என்று தெரிவித்து, யங்ஹென்றிஸ் வி.கழகம் பாதியில் வெளியேறியது. அன்ரனிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

**மேரிஸ் - நவஜீவன்ஸ்**

பிறிதொரு ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகங்கள் மோதின. சென். மேரிஸ் அணி அரையிறுதிக்கு ஏற்கனவே தகுதி பெற்றுவிட்ட நிலையில், கட்டாயம் வெற்றிபெறவேண்டும் என்ற இக்கட்டான நிலையில் ஆட்டம் ஆரம்பமானது. இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலை கண்டது. எனவே சென். மேரிஸ் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)

## மன்செஸ்டர் சிற்றி அபாரம்

இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது.

மன்செஸ்டர் சிற்றி, சந்தர்லாண்ட் ஆகிய அணிகளுக்கு இடையிலான இந்த ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் வென்றது. மன்செஸ்டரின் சார்பாக இப்ராகிமோவிக், ரூனி இருவரும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தனர். கடந்த பருவகாலத்தில் மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்த மன்செஸ்டர், நடப்புப் பருவகாலத்தை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் இந்தமுறை நிச்சயம் பெரிதாகச் சாதிக்க முடியும் என அந்த அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான ரூனி தெரிவித்தார். (ம)




ஆஸி. அணித்தலைவர் சிமித்

# இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்ட் முதல் இன்னிங்ஸில் ஆஸி. முன்னிலை

இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் ஆஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் 379 ஓட்டங்களுடன் முடிவு கண்டதுடன், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை நாள் முடிவில் 22-1 என்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 355 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக சந்திமல் 132 ஓட்டங்களையும், சில்வா 129 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பாக ஸ்ராக் 5 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும், ஹோலண்ட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா இரண்டாம் நாள் முடிவில் 141-1 என்றிருந்தது. மார்ஸ் 64 ஓட்டங்களுடனும், சிமித் 61 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். இலங்கையின் பந்துவீச்சு வரிசையால் அவ்வளவு இலகுவாக இணைப்பாட்டத்தைப் பிரித்துவிட முடியவில்லை. இருவரும் ஆளுக்கொரு சதம் கடக்க இரண்டாவது இலக்கை இழக்காமல் 200 ஓட்டங்களைத் தொட்டது ஆஸ்திரேலியா. இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியாவின் சார்பாகப் பதிவான ஆகச் சிறந்த இணைப்பாட்டம் இதுவே. இணைப்பாட்டமாக 246 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 130 ஓட்டங்களுடன் சோன் மார்ஸை வீழ்த்தினார் லக்மல். அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களில் சிமித்தின் இன்னிங்ஸ் 119 ஓட்டங்களுடன் முடிவு கண்டது. வீழ்த்தியவர் கேரத். நேற்றைய நாளின் மூன்றாவது பாதியில் (செசனில்) கேரத்தின் பந்துவீச்சு சிறப்பாகவே எடுபட்டது. வோக்ஸ், ஹென்றிக்ஸ், ஹோலண்ட், கசில்வூட் நால்வரும் சொற்ப ஓட்டங்களில் பவிலியனுக்கு திருப்பப்பட்டனர். இருப்பினும் மிச்செல் மார்ஸ் அரைச்சதம் கடக்க 379 ஓட்டங்களில் சுருண்டது ஆஸி.

பந்துவீச்சில் இலங்கையின் சார்பாக கேரத் 6 இலக்குகளையும், பெரேரா 2 இலக்குகளையும், சில்வா, லக்மல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை எட்டு ஓட்டங்களில் முதல் இலக்கை இழந்தது. பெரேராவை வெளியேற்றினார் ஸ்ராக். நாள் முடிவில் அந்த அணி 22-1 என்றுள்ளது. (ம)

## ரென்னிஸில் ரஷ்யாவுக்குத் தங்கம்

றியோ ஒலிம்பிக் தொடரில் பெண்களுக்கான ரென்னிஸ் இரட்டையர் ஆட்டத்தில் ரஷ்யாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

ரஷ்யாவின் சார்பாகக் களமிறங்கிய மகரோவா, வெஸ்னினா இணை தன்னுடன் தங்கத்துக்குப் போட்டியிட்ட சுவிற்சர்லாந்தின் பெக்கன்சி, கிங்கிஸ் இணையை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி தங்கத்தைக் கைப்பற்றியது. இதன்படி ரஷ்ய இணை முதல் இரு செற்களையும் 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியிருந்தது.

வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் செக்குடியரசின் சபரோவா, ஸ்ராகோவா இணையை எதிர்த்து அதே நாட்டின் ஹல்வகோவா, ஹார்டேக்கா இணை மோதியது. இந்த ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்ற சபரோவா, ஸ்ராகோவா இணை வெண்கலத்தைத் தனதாக்கியது. (ம)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 16

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில், அச்சுவேலி யுத் அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதவுள்ளது. (ம-23)

# இறுதியாட்டத்துக்கு முன்னேறியது கலைமதி அணி


யாழ்ப்பாணம், ஓக. 16

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் கலைமதி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

வொலிகிங்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெற்றது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி. இரண்டாவது, மூன்றாவது செற்களை 25:21, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி, முதல் மூன்று செற்களின் முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் முன்னிலை வகித்தது ஆவரங்கால் மத்தி. சரிவிலிருந்து மீண்ட கலைமதி அணி, நான்காவது மற்றும் ஐந்தாவது செற்களை முறையே 25:20, 25:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கலைமதி அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தட்டெறிதலில் தங்கத்தை தனதாக்கியது ஜேர்மனி




ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற தட்டெறிதல் போட்டியில் ஜேர்மனி தங்கப் பதக்கம் வென்றது.
ஜேர்மனியின் சார்பாகக் களமிறங்கிய கிறிஸ்தோப் ஹார்டிங் 68.37 மீற்றர் தூரத்துக்கு ஏறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். போலந்தின் பொயிட்டர் 67.55 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஜேர்மனியின் பிறிதொரு வீரரான டானியல் ஜெய்சன் 67.05 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம)

## 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் சாதனை



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் தென்னாபிரிக்க வீரர் சாதனையுடன் தங்கத்தைக் கைப்பற்றினார்.
வேட் வான் என்ற குறித்த வீரர் 43 செக்கன்கள் 03 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றினார். இதற்கு முன்பு 1999 ஆம் ஆண்டு அமெரிக்க வீரர் மைக்கல் ஜோன்சன் 43 செக்கன்கள் 18 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்தமையே இதுவரை சாதனையாக இருந்தது. 17 வருடங்களின் பின்னர் இந்த சாதனை தகர்க்கப்பட்டுள்ளது. தவிர 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்ற முதல் தென்னாபிரிக்கர் என்ற வரலாற்று அடைவையும் அவர் நிலை நாட்டினார்.
கிரீனடா வீரர் ஜேம்ஸ் 43 செக்கன்கள் 76 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும் அமெரிக்க வீரர் மெரிட் 43 செக்கன்கள் 85 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (ம)


## ஜிம்னாஸ்டிக் இறுதியில் தோல்வி: தீபா கர்மாகர் உருக்கமான



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஜிம்னாஸ்டிக் இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனையான தீபா கர்மாகர் வெண்கலத்தையேனும் வெல்லத் தவறியிருந்தார். இந்த நிலையில் அவர் தனது தோல்விக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்டு டுவீட் செய்துள்ளார்.
130 கோடி மக்களிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். என்னால் உங்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. ஆனால், மிகக் கடினமாக முயற்சித்தேன். முடிந்தால் என்னை மன்னித்துவிடுங்கள். என்பதே கர்மாகரின் டுவீட். இதனையடுத்து கர்மாகருக்கு விளையாட்டு பிரபலங்கள் பலரும் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். (ம)

## தேசியமட்ட அஞ்சலோட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஒக. 16
இலங்கை விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான தடகளத் தொடரில் 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் வடக்கு மாகாணத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
எம்பிலிப்பிட்டிய விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் வடமாகாணத்தின் சார்பாகக் களமிறங்கிய தாசில், வரதன், கிளிங்ரன், நியான் ஆகியோரைக் கொண்ட அணியே இவ்வாறு தங்கம் வென்றது. (ம-23)




போட்டிப்பரீட்சை இறுதிக்கருத்தரங்குகள்
கிராமசேவையாளர்
சமுர்த்தி உத்தியோகத்தர்
போட்டிப்பரீட்சைகளுக்கான விசேட
இறுதி கருத்தரங்குகள்.
ஆரம்பம் - புதன்
(17.08.2016)
காலை 9.30 - 3 மணி
சனி, ஞாயிறு 9.30 - 3 மணி
இடம் - யாழ்ப்பாண கல்லூரி
பட்டதாரிப்பிரிவு
464 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கொமர்ஷல் வங்கி அருகில்)
076 688 3394,
021 222 3382

## ஈரானியப் பெண்களுக்காக ரியோவில் ஒலித்த குரல்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் ஈரானியப் பெண்களை விளையாட்டு அரங்குக்குள் பார்வையாளராக அனுமதிக்குமாறு எழுதிய பதாகையொன்றை ஏந்தி பெண் ஒருவர் கவனவீர்ப்பில் ஈடுபட்டமை பன்னாட்டு ஊடகங்களின் அவதானிப்பைப் பெற்றுள்ளது. ஆண்களுக்கான போட்டிகளைப் பார்வையிடுவதற்கு ஈரானியப் பெண்களுக்கு குறித்த நாட்டு அரசினால் நீண்ட காலமாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையிலேயே டர்யா என்ற குறித்த பெண் இவ்வாறான கவனவீர்ப்பில் ஈடுபட்டார். ஈரானில் பிறந்து பெல்ஜியத்தில் வாழும் டர்யா 1999 ஆம் ஆண்டு அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனால் ஈரான் அரசினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதனை அடுத்து 2000 ஆம் ஆண்டில் இருந்து பெல்ஜியத்தில் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.